ஞாயிறு இதழ் 26.01.2025 -ஞாயிற்றுக்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්


ஆண்டு: 01 இதழ் : 16 குரோதி வருடம் தை மாதம் 13 ஆம் நாள் - ஹிஜ்ரி 1446 ரஜப் 27 பக்கங்கள் - 12 + XII






## காற்றாலை மின் திட்டங்கள் இரத்து

# வெளியான செய்திகளை மறுக்கிறது அதானி குழுமம்



(கனூஷியா புஷ்பகுமார்)

அதானி நிறுவனத்தால் இலங்கையின் மன்னாரில் செயற்படுத்த முன்மொழியப்பட்ட 484 மெகாவோட் காற்றாலை மின் திட்டங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக வெளியான செய்திகள் பொய்யானவை என அதானி குழுமம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிட்ட அந்நிறுவனத்தின் செய்தித்தொடர்பாளர், இந்த செய்திகள் தவறானவை மற்றும் தவறாக வழிநடத்துகின்றன எனக்குறிப்பிட்டார்.

2025 ஜனவரி 2 ஆம் திகதி, இலங்கை அமைச்சரவை, 2024 மே மாதத்தில் அங்கீ கரிக்கப்பட்ட கட்டணங்களை மறு மதிப்பீடுசெய்யும் தீர்மானம், புதிய அரசாங்கத்தால் மேற் கொள்ளப்பட்ட ஒரு நிலையானமறு ஆய்வு செயல்முறை என்றும், நாட்டின் புதுப்பி க்கப்பட்ட எரிசக்தி கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுடன் இணக்கத்தை உறுதி செய்வதே இந்த மதிப்பாய்வின் நோக்கமாகும் என்று அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்கள் இரத்துச் செய்யப் படவில்லை என்பதைவலியுறுத்தும் அதானி குழுமம், இலங்கையின் பசுமை எரிசக்தித் துறையில் 1 பில்லியன் டொலர்களை முதலீடு செய்வதற்கான தனது உறுதிப்பாட்டை வலியுறுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளது.

(தொடர்ச்சி...) 02

## நாடாளுமன்ற பொங்கல் விழா





நாடாளுமன்றத்தில் தைப்பொங்கல் விழா வெள்ளிக்கிழமை (24) காலை இடம்பெற்றது. சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பூஜை வழிபாடுகளோடு கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## யாழ். கலாசார மையத்தின் பெயரை மாற்றியது இந்தியா




( பு.கஜிந்தன் )

இந்திய நிதியுதவியில் யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்டுள்ள யாழ்ப்பாணம் கலாசார மண்டபம் தற்போது மூன்றாவது முறையாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி குறித்தமண்டபம், தற்போது "யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டுமையம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டு, பெயர் பலகை பொருத்தப்பட்டுள்ளது. இந்திய அரசின் நன்கொடையாக நிர்மாணி க்கப் பட்ட "யாழ்ப்பாணம் கலாசார

(தொடர்ச்சி...) 02

## பாதுகாப்பு வழங்கக் கோரி மஹிந்த உச்ச நீதிமன்றில் மனு தாக்கல்



(கனூஷியா புஷ்பகுமார்)

தனது பாதுகாப்புப் பிரிவை மீண்டும் வழங்க உத்தரவிடக் கோரி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் அமைச்சரவை உறுப்பினர்கள் உள்ளிட்ட குழுவொன்று பிரதிவாதிக ளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

(தொடர்ச்சி...) 02

## தரம் ஒன்றுக்கு மாணவர்களை அனுமதிக்கும் தேசிய நிகழ்வு

(முகம்மட் முக்தார் )

நாடளாவிய ரீதியிலுள்ள அரச, அரச உதவிபெறும், தனியார் பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான தேசிய அனுமதி நிகழ்வு

(தொடர்ச்சி...) 02

## இலங்கை சொத்துக்களை மீட்பதற்கு சுவிஸ் உதவி



இலங்கையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கு சுவிட்சர்லாந்து அரசாங்கம் உதவி வழங்கும் என இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான சுவிட்சர்லாந்துத் தூதுவர் கலாநிதி சிறி வோல்ட் (Siri Walt)தெரிவித்தார்.

இலங்கையின் சொத்துக்களை மீட்பதற்கு எடுக்க வேண்டிய சர்வதேச

(தொடர்ச்சி...) 02

## புலம்பெயர்ந்தோர் முதலீடு மூலம் வடக்கை மேம்படுத்துவோம்



வடக்கு மாகாணத்தை நோக்கி பல்வேறு புலம்பெயர் முதலீட்டாளர்கள் தற்போது வருகின்றனர். சகல வழிகளிலும் சாதகமாக நிலவும் தற்போதைய சூழலை பயன்படுத்தி எமது மாகாணத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார். 15ஆவது ஆண்டாகவும் நடைபெறும் யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி வெள்ளிக்கிழமை காலை (24) ஆரம்பமானது.

(தொடர்ச்சி...) 02




## கண்டியில் பல வீதிகள் பூட்டு

(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி – மஹியங்கனையில் பல வீதிகளை மறு அறிவித்தல் வரை மீண்டும் மூடுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

(தொடர்ச்சி...) 02

## கொழும்பு உலக வர்த்தக மையத்தில் திருட்டில் ஈடுபட்ட "BATMAN" கைது

(கனூஷியா புஷ்பகுமார்)

கொழும்பு உலக வர்த்தக மையத்தில் (WTC) நான்கு அலுவலகங்களில் அதிகாலை வேளையில் நுழைந்து பல திருட்டுக்களை மேற்கொண்ட நபர் ஒருவர் கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் செய்த திருட்டுக்களின் பின்னர் "BATMAN" என சுவர்களில் எழுதப்பட்டிருந்த குறிப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட முழுமையான விசாரணையின் பின்னர் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. கடந்த 17ஆம் திகதி கொழும்பிலுள்ள உலக வர்த்தக மையத்தில் கிழக்கு

(தொடர்ச்சி...) 02

(எஸ்.கீதபொன்கலன்)



திருகோமலை – மட்டக்களப்பு பிரதான வீதியின் சேருவில–தங்கநகர் பகுதியில் தரித்து நின்ற சிறிய பட்டாரக வாகனத்துடன் வேன் மோதியதில் ஏற்பட்ட விபத்து

## உத்தரவாத விலை இல்லை : நெல் விற்பனையில் வீழ்ச்சி

நெல்லுக்கான உத்தரவாத விலை நிர்ணயிக்கப்படாத காரணத்தால் ஒரு கிலோ நெல்லின் விலை 110 ரூபாய் முதல் 120 ரூபாய் வரை குறைவடைந்துள்ளதாக விவசாயிகளின் போராட்ட அமைப்பு தெரிவித்துள்ளது.


உத்தரவாத விலையை நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்கப்படாத அதேவேளை, அரசாங்கம் இன்னும் நெல் கொள்முதல்

(தொடர்ச்சி...) 02










## திருமலையில் ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்: ஆளுநரிடம் மகஜர் கையளிப்பு

### சுகிர்தராஜனின் 19ஆவது நினைவேந்தல்

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரியும் ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தியும் வடக்கு கிழக்கு மாகாண ஊடகவியலாளர்கள் திருகோணமலையில் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். அதே நேரம், ஊடக சுதந்திரத்திற்கு உத்தரவாதம் கோரி , கிழக்கு மாகாண ஆளுநரிடம் மகஜர் ஒன்றும்

02





# இவ்வருடத்தில் 340,000 பேருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு

(கனுஷியா புஷ்பகுமார்)

இவ்வருடத்தில் 340,000 இலங்கையர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் கிடைக்கவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கோசல விக்ரமசிங்க தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் வியாழக்கிழமை (23) நடைபெற்ற புதிதாக அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டில் 311,000 பேருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. இந்த ஆண்டு இந்த

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் நடவடிக்கை

எண்ணிக்கையை 12 சதவீதமாக அதிகரிக்க வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் திட்டங்களை வகுத்துள்ளது.




விதிமுறைகளை முறையாக நிறைவேற்றிய பின்னரே மக்களை வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக அனுப்ப வேண்டும். பணியகத்தின் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை கடைப்பிடிப்பதன் மூலம் பணியகத்தின் கண்ணியம் எப்போதும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மேலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அனுமதிகளைப் பெற்ற சில நிறுவனங்கள் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக தனக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும், அத்தகைய நபர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள் என்றும், பணத்தை விட மனிதநேயத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் தலைவர் தெரிவித்தார்.

### கண்டியில்...

இதற்கமைய, தென்னக்கும்புர – ரிகில கஸ்கட – ராகல வீதி மற்றும் கண்டி – மஹியங்கனை – பதியத்தலாவ வீதியை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக இந்த வீதிகளில் கற் பாறைகள் சரிந்து விழுந்தன் காரணமாக வீதியில் போக்குவரத்து செய்யமுடியாத நிலைமை காரணமாக குறித்த வீதியை மீண்டும் மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் வீதிக்கு மேல் உள்ள கல்லின் ஒரு பகுதியை அகற்றும் வரை வீதி தடைசெய்யப்படும் என இருந்தாலும் குறிப்பாக வீதியின் மேற்பரப்பில் உள்ள கற்களை அகற்றுவது மிகவும் ஆபத்தானது என தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் பரிந்துரை செய்துள்ளது.

இதன்படி, மறு அறிவித்தல் வரை அந்த வீதிப் பகுதியில் போக்குவரத்தை இடைநிறுத்துவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் காரணமாக இந்த வீதிகளை பயன்படுத்தும் சாரதிகள் மாற்று வழிகளை பயன்படுத்துமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது.

### திருமலையில்...

கையளிக்கப்பட்டது.

கையளிக்கப்பட்ட மகஜரில் கூறப்பட்டுள்ளதாவது ;

இலங்கையின் ஊடகத்துறை வரலாறு பல்வேறு கொலைகளையும், கொடுமைகளையும், அச்சுறுத்தல்களையும், நெருக்கடிகளையும் உள்ளடக்கியதாகவே கடந்து போயிருக்கிறது. அவ்வாறானவைகள் இனிவரும் காலங்களிலேனும் இல்லாதிருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

ஊடகப் பணியை, நேர்மையாக முன்னெடுப்பவர்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத நிலையிலேயே கடந்த யுத்த காலங்களில் பணியாற்றிய ஊடகவியலாளர்கள் பலர் தமது உயிரைக்காத்துக் கொண்டிருக்கின்றனர். அதற்கும்பால் பலரது உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளதுடன்,காணம லாக்கப்பட்டும் உள்ளனர். பலர் உயிரைப் பாதுகாப்பதற்காக ஊடகப் பணியை விட்டொதுங்கியதுடன் பலர் நாட்டைவிட்டு புலம்பெயர்ந்து தப்பியோடி தஞ்சமடைந்திருக்கின்றனர்.

குறிப்பாக வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஊடக சுதந்திரத்தை பேண தொடர்ந்தும் குரல் கொடுக்கின்ற அதேவேளை கொல்லப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட எமது ஊடகவியலாளர்களுக்கு நீதி கிடைக்கப் பெற வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

இலங்கையின் வடக்கு கிழக்கில் 41க்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு கொலை செய்யப்பட்ட மற்றும் காணாமலாக்கப்பட்ட வடக்கு, கிழக்கு ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்கு இடைக்கால நிவாரணமாக நட்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையில் கடந்த தசாப்தத்தில் கொல்லப்பட்ட 44 ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக ஊழியர்களில் பெரும்பாலானோர் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள்.

ஐயாத்துரை நடேசன், தராக்கி த.சிவராம், எல்.எம்.பலீல் (நற்பிட்டிமுனை பலீல்), சுப்பிரமணியம் சுகிர்தராஜன், சின்னத்தம்பி சிவமகாராஜா, சுப்பிரமணியம் ராமச்சந்திரன், சந்திரபோஸ் சுதாகர், செல்வராசா ரஜீவர்மன், இசைவிழி செம்பியன் (சுபாஜினி), பரணி ரூபசிங்கம் தேவகுமார், இராசையா ஜெயேந்திரன், புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி, மகாலிங்கம் மகேஸ்வரன், மாரியப்பு அந்தோனிகுமார், ஷோபனா தர்மராஜா (இசைப்பிரியா) மற்றும் சகாதேவன் நிலக்சன் உள்ளிட்டவர்கள் 2004-2010 வரையான காலப்பகுதியில் கொல்லப்பட்டதுடன் , அதே காலப்பகுதியில் திருகுலசிங்கம் தவபாலன், பிரகீத் எக்னலிகொட ஆகிய ஊடகவியலாளர்கள் காணாமலும் ஆக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கில் ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் கடந்த காலங்களில் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளை கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், திருமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கம், யாழ் ஊடக அமையம், வவுனியா ஊடக அமையம், கிளிநொச்சி ஊடகவியலாளர் ஒன்றியம், முல்லைத்தீவு ஊடக அமையம், மன்னார் ஊடக அமையம், அகம் மனிதாபிமான வள நிலையம், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியம், இணைய ஊடகச் செயற்பாடு, வடக்கு – கிழக்கு – தெற்கு ஊடக அமைப்புக்கள் தொடர்ச்சியாக கண்டித்தே வந்துள்ளன.

### பாதுகாப்பு...

முறையான பாதுகாப்பு மதிப்பீடு இல்லாமல், தனது பாதுகாப்பிற்காக வழங்கப்பட்ட மெய்ப்பாதுகாவலர்கள் குழுவிலிருந்து 60 அதிகாரிகள் மட்டுமே தக்கவைக்கப்பட்டனர் என்றும், மற்ற அனைவரும் நீக்கப்பட்டுள்ளதாகவும் மஹிந்த ராஜபக்ச தனது சட்டத்தரணிகள் ஊடாக தாக்கல் செய்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுமார் மூன்று தசாப்தங்களாக நீடித்த போரை முடிவுக்குக் கொண்டுவர தலைமை தாங்கிய தான் பயங்கரவாத அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் ஒருவர் எனவும், மேலும் தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் அவரது மனுவில் கூறப்பட்டுள்ளது.

பிரதிவாதிகள் தனது பாதுகாப்பை தன்னிச்சையாக நீக்கியதன் மூலம் தனது அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளதாக தீர்ப்பளிக்குமாறு மஹிந்த ராஜபக்ஷ நீதிமன்றத்தை கோரியுள்ளார்.

மேலதிகமாக, தனக்கு எதிரான அச்சுறுத்தல்கள் குறித்து மதிப்பீடு செய்ய பிரதிவாதிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

அதேபோல், தனக்கு வழங்கப்பட்ட முழு பாதுகாப்புப் படையையும் திரும்பித் தருமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும் மனுதாரர் மஹிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.

### யாழ்...

மத்திய நிலையம்" 2023 ஆம் ஆண்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து திறந்து வைத்திருந்தனர்.

இந்நிலையில் கடந்த 18ஆம் திகதி இலங்கையின் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சுனில் செனவி,இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்ட நிகழ்வில் அக்கட்டத்திற்கு "திருவள்ளுவர் கலாசார மையம்" என பெயர் சூட்டி பெயர் பலகையை திறந்து வைத்தனர்.

யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையம் என்ற பெயர் மாற்றப்பட்டு, திருவள்ளுவர் கலாசார மையம் என பெயர் சூட்டியமைக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள அரசியல்வாதிகள், கல்வியாளர்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் தமது கண்டனத்தை தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை குறித்த மண்டபத்தில், "யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம்" என பெயர் பலகை பொருத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான முக்கிய கட்டடமொன்றை கட்டி, அடிக்கடி பெயரை மாற்றி, பல தரப்பினரும் அரசியல் செய்யும் செயற்பாட்டிற்கு மக்கள் கடும் விசனம் வெளியிட்டு வருகின்றனர்.

### இலங்கை...

நடவடிக்கைகள் குறித்து சுவிட்சர்லாந்து தூதுவர் இதன் போது வழிகாட்டுதல் வழங்கினார்.இதற்காக பூர்வாங்க வசதிகளை வழங்க தேவையாயின் எந்த நேரத்திலும் அதற்கு உதவி வழங்க அவர் உடன்பாடு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் சுவிட்சர்லாந்து தூதுவர் கலாநிதி சிறி வோல்ட் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று (24) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன் போதே தூதுவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் ஊழல் எதிர்ப்பு திட்டத்திற்கு சுவிட்சர்லாந்தின் அனுபவத்தையும் தொழில்நுட்ப அறிவையும் வழங்குவது குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது. அரசாங்க முன்னுரிமை திட்டங்களுக்கு சுவிட்சர்லாந்து அரசாங்கத்தின் தொழில்நுட்ப மற்றும் ஏனைய தேவையான உதவிகள் மற்றும் "ஊருநயன ளுசைடயமெய" திட்டத்திற்கு வழங்கக்கூடிய ஒத்துழைப்பு குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வடக்கு அபிவிருத்தி, தேசிய ஒற்றுமை மற்றும் ஏனைய சமூகப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளுக்கு இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதற்கும் தேவையான உதவிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் சுவிட்சர்லாந்து தூதுவர் மேலும் தெரிவித்தார்.ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரொஷ ான் கமகேவும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டார்.

### காற்றாலை...

இலங்கையில் அதானி திட்டங்கள் இரத்து செய்யப்பட்டதாக செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்தியாவின் அதானி குழுமத்துடனான மின்சார கொள்முதல் ஒப்பந்தம் தொடர்பில் மீளாய்வு செய்து வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதானி குழுமத்துடனான மின்சார கொள்முதல் ஒப்பந்தத்தை இலங்கை இரத்து செய்துள்ளதாக எகனொமிக் டைம்ஸ் செய்திகளை மேற்கோள் காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் அமைச்சரவை பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிக்கையில், குறித்த ஒப்பந்தம் இரத்து செய்யப்படவில்லை என தெரிவித்துள்ளதுடன் ஒப்பந்தம் தொடர்பில் தற்போது மீளாய்வு செய்யப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

இலங்கைக்கும் அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்துக்கும் இடையில், 20 வருட மின்சார கொள்முதல் ஒப்பந்தமொன்று கடந்த 2024 ஆம் ஆண்டு மே மாதம் கைச்சாத்திடப்பட்டது.

மன்னார் பகுதியில் 484 மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்ட காற்றாலை மின் உற்பத்தி ஆலைகளை நிறுவுவதற்கு அதானி குழுமம் அனுமதி பெற்றிருந்தது. ஆனால் இதனால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும் எனக் கூறி இலங்கை உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தை இலங்கை அரசு இரத்து செய்தால் இதன் மூலம் 442 மில்லியன் டொலர்கள் மதிப்பிலான ஒப்பந்தத்தை அதானி குழுமம் இழக்கும் வாய்ப்புள்ளது.

### உத்தரவாத...

செய்யும் செயல்முறையை தொடங்கவில்லை என தெரிவித்த அவ் அமைப்பின் தேசிய அமைப்பாளர் விமல் வத்துஹேவா, அரசாங்கம் நெல்லுக்கான உத்தரவாத விலையை உடனடியாக நிர்ணயிக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் நெல் அறுவடை தற்போது சந்தைக்கு வந்து கொண்டிருப்பதாகவும், உத்தரவாத விலை இல்லாததால், சிவப்பு பச்சை நெல் ஒரு கிலோ 110 ரூபாய் முதல் 120 ரூபாய் வரையிலும், மற்ற வகை நெல் 110 ரூபாய் முதல் 115 ரூபாய் எனும் மிகவும் குறைந்த விலையிலும் வாங்கப்படுவதாகவும் அவர் கூறினார். அரிசியின் விலை தற்போது மக்களால் வாங்க முடியாத அளவுக்கு உயர்ந்துள்ள அதேவேளை மறுபுறம் விவசாயிகளின் அறுவடைகள் குறைந்த விலையில் வாங்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார் .

### தரம்...

திங்கட்கிழமை(27) பாடசாலைகளில் நடைபெறும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. 2025 ஆம் வருடத்திற்கு முதலாம் தர மாணவர்களை அனுமதிப்பதற்காக பிரத்தியேக வைபவங் கள் எதுவும் நடாத்தப்படக்கூடாது எனவும் கல்வியமைச்சு மேலும் அறிவித்துள்ளது. முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களை இனங்காணும் நடவடிக்கைகள் 30 ம் திகதி முதல் இரு வாரங்களுக்கு நடைபெறவேண்டுமெனவும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது. இதேவேளை பாடசாலை மாணவர்களுக்கு 2025 ஆம் ஆண்டுக்கான காலை உணவு வழங்கும் செயற்பாடுகளும் 27ஆம் திகதி திங்கட்கிழமை நாடளாவிய ரீதியில் ஆரம்பமாகுமெனவும் இதற்காக ஒரு மாணவருக்கு தினசரி பாடசாலை நடைபெறும் நாட்களுக்கு 110 ரூபா கல்வி அமைச்சால் வழங்கப்படுமெனவும் கல்வி அமைச்சு மேலும் அறிவித்துள்ளது.

### கொழும்பு...

கோபுரத்தின் 26ஆவது மாடியில் அமைந்துள்ள நான்கு அலுவலகங்களில் இந்த திருட்டுகள் இடம்பெற்றுள்ளன. மிகவும் நுணுக்கமாக மேற்கொள்ளப்பட்ட இந்த விசாரணைகளில் சந்தேகநபரால் திருடப்பட்ட மடிக்கணினி மற்றும் கையடக்கத்தொலைபேசி உள்ளிட்ட 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

விசாரணைகளின் போது திருடப்பட்ட இடங்களில் குறிப்பிடப்பட்டிருந்த "டீயுவுஆயுN" என்ற குறிப்பு மீது பொலிஸ ார் அதிக அவதானம் செலுத்தினர். அதன்படி, உலக வர்த்தக மையத்தின் சிசிரிவி காணொளிகளை பரிசீலித்த போது கடந்த 17ஆம் திகதி அதிகாலை 1 மணிக்கு நவநாகரிக உடை அணிந்த, முகமூடி அணிந்த நபர் ஒருவர் உள்நுழைவது பொலிஸாரின் கவனத்திற்கு உள்ளாகியது.

சந்தேகநபர் திறப்புகளை பயன்படுத்தி நான்கு அலுவலகங்களுக்குள் நுழைந்து மடிக்கணனி மற்றும் கையடக்கத்தொலைபேசிகளை திருடியமை சிசிரிவி காணொளிகளில் பதிவாகியுள்ளது. திருடு முடிந்தவுடன் சுவரில் **"BATMAN"** என குறிப்பெழுதுவதும் விதமும் பதிவாகியுள்ளது.

சந்தேக நபர் உலக வர்த்தக மையத்தின் பாதுகாப்பு மற்றும் செயல்பாடுகளை நன்கு அறிந்த ஒருவர் என்பதை பொலிஸ் அதிகாரிகள் ஊகித்திருந்தனர். அதன்படி, அங்கு இதற்கு முன்னர் பணி புரிந்தவர்களின் பேஸ்புக் கணக்குகளை பரிசீலிக்க பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டதையடுத்து **"BATMAN"** இன் உருவத்துடன் கூடிய பதிவுகளுடன் கூடிய பேஸ்புக் கணக்கு பொலிஸ் அதிகாரிகளின் கவனத்தை ஈர்த்தது.

குறித்த சந்தேகநபர் 23 வயதுடைய பாலித் ரியால் முகைதீன் எனும் பெயருடைய எரித்திரியா வம்சாவளி, சூடானைச் சேர்ந்தவர் என பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

கொழும்பின் பிரதான சூதாட்ட விடுதிக்கு அருகில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், அவரது தந்தை சில ஆண்டுகளுக்கு முன்பு உலக வர்த்தக மையத்தில் மீன் ஏற்றுமதி ஆலோசனை நிறுவனத்தை நடத்தி வந்தமை தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் அங்கு இயக்குநராகப் பணியாற்றியதாகவும், அதனால் அதன் மற்ற அலுவலகங்கள், பாதுகாப்பு மற்றும் சாவிகள் சேமிப்பு இடம் பற்றி அறிந்திருந்ததாகவும் சந்தேகநபர் வாக்குமூலம் வழங்கினார்.

மேலும், திருடப்பட்ட பொருட்களை மிகக் குறைந்த விலைக்கு விற்று, அந்தப் பணத்தை சூதாட்டத்திற்கு பயன்படுத்தியதாகவும் சந்தேகநபர் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

### புலம்பெயர்ந்தோர்....

ரில்கோ விடுதியில் இடம்பெற்ற அர ங்க நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந் துகொண்ட ஆளுநர் தனது உரையில் இவ் வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

30 ஆண்டு காலப் போர் காரணமாக வடக்கு மாகாணம் பலவற்றை இழந்துள்ளது. தொழில்துறை, வேலை வாய்ப்பு என்பனவும் அதனுள் அடங்குகின்றன. எமது பகுதியைப் பொறுத்தவரையில் அரசாங்க வேலை மாத்திரமே இருந்து வந்தது. போர் முடிவுக்கு வந்த பின்னர் 2009ஆம் ஆண்டிலிருந்து இங்கு முதலீடு செய்வதற்கு பலர் வந்தாலும் அவர்களில் பலர் திரும்பிச் சென்றுள்ளனர். பல்வேறு காரணங்களால் அவர்கள் முதலீடு செய்யவில்லை.

ஆனால் கடந்த ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலுடன் சூழல் மாறியுள்ளது. முதலீட்டாளர்கள் இங்கு வருகின்றார்கள். புலம்பெயர்ந்தவர்கள் அதிகமாக முதலிட விரும்புகின்றனர்.

போருக்கு முன்னர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி விவசாய மற்றும் மீன்பிடி உற்பத்திப் பொருட்கள் விற்பனைக்குச் சென்றனவோ அதேபோல மீண்டும் நிலைமை ஏற்படும் சூழல் தெரிகின்றது. விவசாய மற்றும் மீன்பிடி உற்பத்திப் பொருட்களை பெறுமதி சேர் பொருட்களாக மாற்றி ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புக்கள் எமக்கு அதிகரிக்கின்றன. இதன் ஊடாக எமது பகுதியைச் சேர்ந்த பலர் வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியும்.

அதேபோன்று தொழில்நுட்பங்களை நவீன இயந்திரங்களையும் எமது உற்பத்திப் பொருட்களையும் பெருக்குவதற்குப் பயன்படுத்தவேண்டும். சகல வழிகளிலும் சாதகமான சூழல் நிலவும் நிலையில் அதனைப் பயன்படுத்தி எமது மாகாணத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்த அனைவரும் ஒத்துழைக்கவேண்டும், என்றார்.

# தாயகம் திரும்ப விரும்பும் இலங்கை தமிழருக்கு தமிழக அரசின் பரிந்துரை

(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)

தாயகம் திரும்ப விரும்பும் இலங்கைத் தமிழர்களை அங்கு அனுப்பி வைக்க அரசுக்கு பரிந்துரைக்கப்படும் என சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழு தலைவர் கு.செல்வப்பெருந்தகை தெரிவித்தார்.

இராமேஸ்வரம் வந்த இந்தக் குழுவினரை மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் வரவேற்றார். இதைத் தொடர்ந்து, தனுஷ்கோடி, அரிச்சல்முனை ஆகியப் பகுதிகளை பார்வையிட்டு அங்கு மேற்கொள்ள வேண்டிய திட்டப் பணிகள் குறித்து குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர். இதன் பிறகு, தனுஷ்கோடியில் உள்ள கடல் ஆமைகள் முட்டைகள் பொரிப்பகத்தை அவர்கள் பார்வையிட்டனர். இராமநாதபுரம் மாவட்டம், தனுஷ்கோடி, அரிச்சல்முனை, மண்டபத்தில் உள்ள இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாம் உள்ளிட்ட பகுதிகளில் சட்டப் பேரவை பொதுக் கணக்குழுக் குழுவினர் அதன் தலைவர் கு. செல்வப்பெருந்தகை தலைமையில் வியாழக்கிழமை மாலை ஆய்வு மேற்கொண்டனர். இதையடுத்து, மண்டபத்தில் உள்ள இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாமுக்கு சென்ற இந்தக் குழுவினர் அங்குள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளின் கல்வி குறித்தும், அவர்களுக்கு அரசின் திட்டங்கள் முழுமையாக செல்கிறதா என்பது குறித்தும் ஆசிரியர்களிடம் கேட்டறிந்தனர். இதைத் தொடர்ந்து, முகாமில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் வீடுகளை பார்வையிட்ட குழுவினர் அவர்களின் குறைகளை கேட்டறிந்தனர். அப்போது அவர்கள், தங்களது குழந்தைகள் படிக்க ஆதார் அட்டை வழங்க வேண்டும் எனவும், இலங்கைக்கு மீண்டும் செல்ல தயாராக இருப்பவர்களை அங்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர். இதையடுத்து, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் 8 அரசுத் துறைகளின் பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமை வகித்தார். ஆய்வு கூட்டம் முடிந்த பின் சட்டப்பேரவை பொதுக் கணக்குக் குழு தலைவர் கு. செல்வப்பெருந்தகை

செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தனுஷ்கோடி, அரிச்சல்முனை பகுதிகளுக்கு தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். எனவே அங்கு கைப்பேசி கோபுரம் அமைக்க வேண்டும். மேலும் அங்கு கழிப்பறை, மருத்துவ வசதிகள் செய்துதர இந்தக் குழு பரிந்துரைக்கும். மேலும் மண்டபம் இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் 174 வீடுகளை கட்ட தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது. எஞ்சிய வீடுகளை கட்டவும், இங்கு வசிப்பவர்களுக்கு ஆதார் அட்டை வழங்கவும், தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்த அனைத்து இலங்கைத் தமிழர்களையும் அரசு செலவில் அனுப்பி வைக்கவும் இந்தக் குழு பரிந்துரைக்கும். இராமேசுவரத்துக்கு நான்கு வழிச்சாலை அமைக்க ஆய்வு நடைபெற்று வருகிறது என அவர் தெரிவித்தார்.

# இலங்கையில் டிஜிட்டல் பொருளாதாரத்தை விரைவாக முன்னேற்றுவது அவசியம்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

டிஜிட்டல் பொருளாதாரத்திற்கான வலுவான அடித்தளத்தை இலங்கை கொண்டுள்ளது. இதற்குத் தேவையான திறன்களில் 75 சதவீதம் ஏற்கனவே உள்ளது என டிஜிட்டல் பொருளாதாரம் தொடர்பான ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் கலாநிதி ஹான்ஸ் விஜேசூரியா தெரிவித்தார்.

இருப்பினும், இந்த திறனை முழுமையாகப் பயன்படுத்த நாடு மீதமுள்ள இடைவெளியைக் குறைத்து அதன் டிஜிட்டல் போட்டித்தன்மையை மேம்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

தற்போது, இலங்கையின் டிஜிட்டல் போட்டித்தன்மை தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வது ஆர்வம் மற்றும் உள்ளடக்கிய தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் வருகிறது.இந்த லட்சிய இலக்கை அடைவதற்கு பன்முக அணுகுமுறை தேவை. அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் இலங்கையை இத்துறையில் உயர்த்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்துள்ளார்.

நமது அணுகுமுறையை மறுபரிசீலனை செய்து புதிய முறைகளை ஏற்றுக்கொள்வதை துரிதப்படுத்த வேண்டும் என்றும் அவர் அட்வோகாட்டா நிறுவனத்தின் இக்னைட் வளர்ச்சி மன்றத்தில் உரையாற்றும் போது கூறினார்.

அனைத்து பங்குதாரர்களின் ஒருங்கிணைந்த முயற்சியுடன், இலங்கை அதன் டிஜிட்டல் மாற்றத்தை விரைவுபடுத்தவும், பொருளாதார வளர்ச்சி மற்றும் வளர்ச்சியின் புதிய சகாப்தத்தை உருவாக்கவும் வாய்ப்பைப் பெற்றுள்ளது என்று கலாநிதி ஹான்ஸ் விஜேசூரிய, இந்த நிகழ்வில் கூறினார்.




15ஆவது ஆண்டாகவும் நடைபெறும் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி வெள்ளிக்கிழமை (24)யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வர்த்தகக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

# அரிசி விலை ரூ.300 ஐ தாண்டக்கூடும்

## -நெல் ஆலை உரிமையாளர்கள்

(கனுஷியா புஷ்பகுமார்)

இம்முறை பெரும்போக பருவத்தில் ஒரு கிலோ நெல்லுக்கான கொள்முதல் விலை 140-170 ரூபாயாக அதிகரித்திருப்பதால், எதிர்காலத்தில் ஒரு கிலோ அரிசியின் விலை 300 ரூபாயை தாண்டக்கூடும் என்று சிறு மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

அண்மைய நாட்களில் ஒரு கிலோகிராம் ஈர நெல்லின் விலை 115-120 ரூபாயாக அதிகரித்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.இருப்பினும், சிறு மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களுக்கு ஈரமான நெல் ஒரு கிலோகிராம் 95 ரூபாய்க்கும், உலர்ந்த நெல் ஒரு கிலோகிராம் 115ரூபாய்க்கும் வாங்க கடன்கள் வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, ஒரு கிலோ சம்பா நெல்லை 120 ரூபாய்க்கும், ஒரு கிலோ கீரி சம்பா நெல்லை 130 ரூபாய்க்கும் வாங்க கடன்கள் வழங்கப்படும் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. இதற்கிடையில், நெல்லுக்கு உத்தரவாத விலை நிர்ணயம் செய்வதை அரசாங்கம் தொடர்ந்து தாமதப்படுத்தி வருவதாக விவசாயிகள் குற்றம் சாட்டி வருகின்றனர். தனியார் துறையினர் அதிக விலைக்கு நெல்லை கொள்முதல் செய்வதால், குறைந்த அளவில் நெல் வாங்க காத்திருக்கும் அரசாங்கத்துக்கு, விவசாயிகள் நெல் விற்க முடியாது என கூறுகின்றனர்.

இதேவேளை, நாட்டில் உள்ள பல சிறிய அளவிலான நெல் ஆலைகள் நெல் கையிருப்பு இல்லாததால் மூடப்பட்டுள்ளன. பல விவசாயிகள் நெல் விலையை உயர்த்தியுள்ளதால், அந்த விலையில் நெல்லை வாங்குவது, அரிசியை உற்பத்தி செய்வது மற்றும் அரசாங்க கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்வது சாத்தியமில்லை என குற்றம் சுமத்தப்பட்டு வருகிறது. மேலும், தற்போது பல கடைகளில் விற்பனைக்கு அரிசி இல்லை, உள்ளூர் பாஸ்மதி அரிசி மட்டுமே விற்பனைக்குக் கிடைக்கிறது. ஒரு கிலோகிராம் உள்ளூர் பாஸ்மதி அரிசி 250 - 270 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்றில் தைப்பொங்கல்



புத்த சாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கடற்றொழில் அமைச்சரின் வழிகாட்டலில், சபாநாயகர் தலைமையில் முதன்முறையாக நாடாளுமன்றத்தில் தைப்பொங்கல் நிகழ்வு வெள்ளிக்கிழமை (24) காலை இடம்பெற்றது. நாடாளுமன்ற கட்டிடத் தொகுதிக்கு முன்பாக பொங்கல் பொங்கி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்ற இந்நிகழ்வில், சபாநாயகர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற பணியாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# அரச, தனியார் பாடசாலைகளின் கல்வியாண்டு ஜனவரி 27ல் ஆரம்பம்

(முகம்மட் முக்தார்)

நாடளாவிய ரீதியிலுள்ள அரசாங்க, அரச உதவி பெறும், தனியார் பாடசாலைகளின் 2025 ம் கல்வியாண்டு திங்கட்கிழமை(27) ஆரம்பமாவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

2020ம் ஆண்டு கொவிட்-19 பெருந்தொற்று ஏற்பட்ட பின்னர் பாடசாலைகளின் கல்வியாண்டும், கல்வி நடவடிக்கைகளும், பொதுப்பரீட்சைகளும் பெரும் குழப்பநிலைக்குள்ளாகின.இதன் காரணமாக அந்தந்த வருடங்களுக்கான கல்வித்தவணைகள் உரிய வருடங்களில் நடைபெறாமலும் முடிவடையாமலும் காணப்பட்டன. 2024ம் கல்வியாண்டிற்கான கல்வித்தவணைகள் கடந்த 24 ம் திகதியுடன் முடிவடைந்தன.

தற்போது 2025ம் ஆண்டுக்கான புதிய பாடசாலை கல்வித்தவணை உரிய ஆண்டில் ஆரம்பித்து 2025 டிசம்பரில் தவணைகள் முடிவடைகின்றன.

உரிய ஆண்டில் கல்வித்தவணையை முடிப்பதற்காக இவ்வருடம் 181 நாட்கள் மட்டும் பாடசாலைகள் நடைபெறுமெனவும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது .

புதிய கல்வியாண்டில் பாடசாலை நாட்கள் குறைவாகவுள்ளதால் பாடசாலை நேரங்களில் வைபவங்களையோ, களியாட்டங்களையோ பாடசாலைகளில் நடாத்த வேண்டாமெனவும் ஆசிரியர்கள் லீவு எடுத்தலை குறைத்து கற்பித்தல் பணிகளில் கூடுதலான நேரத்தை செலவிடுமாறும் கல்வி அமைச்சு அதிபர், ஆசிரியர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் தை மாதம் 13ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை

**மேஷம்** இன்று பொறுமையுடனும் உறுதியுடனும் இருக்க வண்டும்.

**ரிஷபம்** புதிய நபர்களின் நட்பு இன்று உங்களுக்கு கிடைக்கும்.

**மிதுனம்** இன்று உங்கள் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி காண்பீர்கள்.

**கடகம்** நீங்கள் இன்று பொறுமையுடன் அமைதியை கடைபிடிக்க வேண்டும்.

**சிம்மம்** உங்கள் பொறுமை காரணமாக வெற்றி அடைவீர்கள்.

**கன்னி** நீங்கள் விரும்பியது இன்று நிறைவேறும்.

**துலாம்** இன்று வெற்றி நிச்சயம்.

**விருச்சிகம்** இன்று நீங்கள் உற்சாகமாக ஆற்றலுடன் செயல் பட வேண்டும்.

**தனுசு** இன்று உற்சாகத்துடன் இருந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

**மகரம்** இன்று மிகச் சிறப்பான நாள்.

**கும்பம்** இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

**மீனம்** இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்த்துக்கொள்ளுங்கள்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று இரவு 08:17 வரை துவாதசி பின்பு திரியோதசி.
**நட்சத்திரம்:** இன்று காலை 07:49 வரை கேட்டை பின்பு மூலம்.
**யோகம்:** மரண,சித்த
**சந்திராஷ்டமம்:** ரோகிணி.
**சூலம்:** மேற்கு.
**இராகு காலம்:** 04:30 PM முதல் 06:00 PM வரை.
**குளிகை:** 03:30 PM முதல் 04:30 PM வரை.
**எமகண்டம்:** 12:00 PM முதல் 01:30 PM வரை.

# தென்னை மரங்களை தறிக்க அனுமதி பெறுவது கட்டாயம்

தென்னை மரங்களை தறிப்பதற்கு எதிர்காலத்தில் பிரதேச செயலகம் அல்லது தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையிடம் அனுமதி பெறுவது கட்டாயமாக்கப்படும் என தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் கடுமையான தேங்காய் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில், தென்னை மரங்களை வெட்டுவதற்கு முன்னர் இந்த நடைமுறையை பின்பற்ற வேண்டும் என்ற புதிய கொள்கையை தெங்கு தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரசபை பணிப்பாளர் சமன் ஹேவகே தெரிவித்துள்ளார்.

தெங்கு உற்பத்தி நில பயன்பாட்டிற்கான கட்டுப்பாடுகளையும் அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

ஒரு ஏக்கருக்கு மேல் தென்னை நிலத்தை ஏலம் எடுப்பது அல்லது நிலத்துண்டுகளாக பிரிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும், ஒரு ஏக்கருக்கு மேல் தென்னை செய்கை நிலங்களை வேறு திட்டங்களுக்கு பயன்படுத்த வேண்டுமானால், தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை, பிரதேச செயலகம் அல்லது பிற தொடர்புடைய அரசு நிறுவனங்கள் நடத்தும் முழுமையான ஆய்வுக்குப் பின்னரே அதற்கு அனுமதி அளிக்கப்படும்.

தெங்கு நில உரிமையாளர்கள் 10 ஏக்கருக்கும் குறைவான நிலங்களை ஏலத்தில் விட இதற்கு முன்பு அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த அனுமதி இப்போது இரத்து செய்யப்பட்டுள்ளது. புதிய விதிமுறைகள் ஏற்கனவே நடைமுறையில் உள்ளன. மேலும் இந்த மாற்றங்களை விரைவில் நாடாளுமன்றத்தில் திருத்தங்களாக முன்வைக்க தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தயாராகி வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114664152 / editorial@oruvan.com

## நிர்வாக பயங்கரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் அரசு

"வளமான நாடு அழகிய இலங்கை"- தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தொனிப் பொருள் இது.

அரசாங்கம் திடீரென எடுத்திருக்கும் அதிரடி நடவடிக்கைகள், நாடாளுமன்ற அரசியலில் ஒரு திருப்புமுனையாகப் பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் செயலாளர் என். எஸ். குமாநாயக்க வெளியிட்டு இருக்கின்ற சுற்றுநிருபம், அமைச்சர்களுக்கும் பிரதி அமைச்சர்களுக்கும் பேரிடியாக இருக்கும் என்று நினைக்க வில்லை. இடதுசாரி அரசாங்கம் ஒன்றின் கொள்கைக்குள் தங்களை பொருத்திக் கொண்டவர்களே அமைச்சர்களாக பணிபுரிகின்றார்கள். ஜனாதிபதியின் செயலாளரின் யோசனைகள் அடங்கிய சுற்றுநிருபம், இந்த அரசாங்கத்தின் அழுத்தம் திருத்தமான கொள்கைகளை அடித்துச் சொல்கிறது. அதாவது, அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களுக்கான சலுகைகள் முற்றாக மட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றன.

இன்னும் ஒரு விடயமும், அவசர அவசரமாக எடுக்கப்பட்டு இருக்கிறது.

நாடாளுமன்ற கட்டிடத்தில் உள்ள எம்பிக்களின் உணவகத்தில் உணவுப் பொருட்களின் விலைகள் சடுதியாக அதிகரிக்கப்பட்டு இருக்கின்றன. கிட்டத்தட்ட 150 வீத அதிகரிப்பாக இதனை காண முடிகிறது. நூறு ரூபாவாக இருந்த காலை உணவு 600 ஷரூபாவாக அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. அதே நேரம், 300 ரூபாவாக இருந்த மதிய நேர உணவு - 1200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதே போல, ஐம்பது ரூபாவுக்கு விற்கப்பட்டு வந்த தேநீர்- இருநூறு ரூபாவாக அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. இதனை சாதாரணமான விலை அதிகரிப்பாக பார்க்க முடியாது. நாடாளுமன்ற நிதி குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, எதிர்வரும் முதலாம் திகதி முதல் இது அமுலுக்கு வருகிறது. ஒருபுறம் அமைச்சர்களின் சலுகைகளில் வெட்டு விழுந்திருக்கிறது. மறுபுறம், எம்பிக்களின் உணவுச் சலுகைகளிலும் அதிரடி மாற்றம் செய்யப்பட்டு இருக்கிறது.

அமைச்சர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டிருந்த சலுகைகள் குறைக்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது.. அமைச்சர்கள்,பிரதி அமைச்சர்களின் வாகன எண்ணிக்கை, எரிபொருள் செலவு, தொலைபேசிகளுக்கான கட்டணங்கள், அமைச்சர்களின் பணிக்குழாமுக்கு நியமிக்கப்பட வேண்டிய அதிகாரிகளின் எண்ணிக்கை, குறைக்கப்பட்டு இருப்பதோடு அமைச்சின் அதிகாரிகளுக்கான சலுகைகளும் வெகுவாக குறைக்கப்பட்டு இருக்கின்றன. இதன்படி ஒரு அமைச்சருக்கு 15 பணியாளர்களும் பிரதி அமைச்சருக்கு 12 பேரையும் பணிக்கு அமர்த்திக் கொள்ள முடியும்.

ஜனாதிபதியின் செயலாளரினால் வெளியிடப்பட்டிருக்கின்ற இந்த சுற்று நிருபத்தில், ஒரு விடயம் அழுத்தமாக சொல்லப்பட்டிருக்கிறது." அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் - தங்களுடைய குடும்ப உறுப்பினர்களை அல்லது உறவினர்களை தங்களுடைய பணிக்குழாமில் நியமிக்க கூடாது" என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

தேர்தல் கால வாக்குறுதிகளுக்கு அமைய, வீண் விரயங்களை தவிர்த்து, நாட்டின் வருவாயை அதிகரிப்பதற்கான செயல் திட்டங்களில் அரசாங்கம் முனைப்போடு செயல்படுகிறது என்பது தெட்டத் தெளிவாகிறது.

கடந்த காலங்களில் நாட்டை ஆண்டவர்கள் குடும்பச் சொத்துக்களாகவே நாட்டை பயன்படுத்தினர். பொருளாதார நெருக்கடிகளால் நாடு சின்னாபின்னமாகிய போதும், வீண் விரயங்களும் அநியாயச் செலவுகளும் குறைக்கப்படவில்லை. நாட்டின் நிர்வாக முறைமை என்பது குடும்ப வாரிசுகளுக்குள்ளும் உறவினர்களுக்கும் வரையறுக்கப்பட்ட நிலையில் நகர்த்தப்பட்டது என்பதே யதார்த்தமான உண்மை. குறிப்பாக சொல்லப்போனால், நிர்வாக பயங்கரவாதம் என்பது ஆட்சி நிர்வாகத்தில் கோலோச்சி இருந்தது.

இலங்கையில் ஜனநாயகம் என்ற போர்வையில், சர்வாதிகார முறைமை மறைமுகமாக முன்னெடுக்கப்பட்டது. நிதி கட்டமைப்பும் நிர்வாகக் கட்டமைப்பும் சொந்தங்களுக்குள் கட்டுண்டு இருந்ததால், நாட்டு மக்கள், பொருளாதார சுதந்திரத்தின் பலனை முழுமையாக அனுபவிக்க முடியாத அவல நிலை இருந்தது.

நாடாளுமன்ற சிறப்புரிமை என்பது, இந்த நாட்டை அழிப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பது வரலாறு. சிறப்புரிமைகளை பாதுகாப்பு கவசமாகவும் அதிகார கவசமாகவும் வைத்துக்கொண்டு, உச்சக்கட்ட துஷ்பிரயோகங்கள் இடம் பெற்றிருக்கின்றன. தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும் சிறப்புரிமை பயன்படுத்தப்பட்டு இருக்கிறது.

Parliamentary Privilege- நாடாளுமன்ற சிறப்புரிமை - மக்கள் பணியை இடையூறுகள் இன்றி செய்வதற்கு ஏதுவாகவே ஏற்படுத்தப்பட்டன. ஆனால், இலங்கை அரசியலில் தலை கீழாகவே அது நடந்து வந்திருக்கிறது. மக்களுக்கான பணிகளுக்கு சிறப்புரிமையை பயன்படுத்துவதற்கு பதிலாக, தங்களுடைய நலனையும், சுய வருவாய்களை பெருக்கிக் கொள்வதற்கும், அரசியல் எதிரிகளை ஓரங்கட்டுவதற்கும் இந்த சிறப்பு உரிமைகள் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன.

எம். பிக்களுக்கு நாடாளுமன்றத்தில் உணவுச் சலுகைகள் வழங்கப்பட்டு வந்திருக்கின்றன. இதன் மூலம் கோடிக்கணக்கான ரூபாய்கள அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில், நாடாளுமன்ற உணவகத்தில், உணவு வகைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டு இருக்கின்றன. வருவாயை பெற வேண்டும் என்பதற்காக, கடுமையாக விலைகளை உயர்த்துவது ஆரோக்கிய மானதாக இல்லை.

ஆகவே, அரசாங்கத்தின் இந்த அதிரடி நடவடிக்கைகள், நிர்வாக பயங்கரவாதத்தை ஒழிக்கும் முறைமை மாற்றமாக கொள்ள முடியும்.

# பாதுகாப்புத்துறை மீது தொடரும் அவநம்பிக்கை

## இதுதான் மாற்றமா ?




இலங்கையில் உள்நாட்டுப்போர் முடிவடைந்த காலத்திலிருந்து இன்று வரையில் நாட்டு மக்களுக்கு முழுமையான பாதுகாப்புக்கான உத்தரவாதம் வழங்கப்படவில்லை.

மாறாக, பாதுகாப்பு வழங்குபவர்களை கண்டு தான் பொதுமக்கள் முதலில் அஞ்சுகிறார்கள். இந்த நிலை, காலங்காலமாகவே இருந்து வருகிறது. மக்களின் நலனுக்காக பாடுபடும் பாதுகாப்பு அதிகாரிகளுள் விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் சிலரே, உண்மையிலேயே மக்கள் நலனை கருத்திற் கொண்டு சேவை செய்கின்றனர்.

கல்வி, சுகாதாரம் என்பவை ஒரு நாட்டிற்கு எவ்வளவு முக்கியத்துவமானதாக பார்க்கப்படுகிறதோ அதை விட அதிகமாக பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

எனினும், நாட்டில் அண்மையில் நடக்கும் சம்பவங்கள் எதுவும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக அமையவில்லை. பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதுடன் போதைப்பொருள் பயன்பாடும் இன்னுமும் குறைவடைந்ததாக தெரியவில்லை. சீருடையுடன் மது அருந்துவிட்டு கடமையை தவறிய சம்வமொன்றும் பதிவாகியிருந்தது.

இவ்வாறான சம்பங்களைத் தாண்டி பொதுமக்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய பாதுகாப்புத் துறையே அதில் கவனமின்றி நடந்துக்கொள்வதால் நடைபெறும் சம்பவங்கள் மக்களை கவலையடைச் செய்வது மாத்திரமன்றி மக்கள் மத்தியில் மேலும் அச்சத்தை உருவாக்கியுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர், கொழும்பில் காணப்படும் பிராதான நகரங்களில் ஒன்றான மருதானை பொலிஸ் நிலையத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பேசு பொருளாக மாறியுள்ளது. குறித்த சந்தேகநபர் தமிழ் பெண் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, தற்கொலை தான் என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், இந்த மரணத்தில் சந்தேகங்கள் இருப்பதாக நாடாளுமன்றத்திலும் குரல்கள் எதிரொலித்தன.

கிளிநொச்சி பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய பொன்னையா கலாதர்ஷனி எனும் இரு பிள்ளைகளின் தாயார் ஒருவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

பொலிஸார் 21ஆம் திகதி இரவு 8.45க்கு மருதானை பிரதேசத்தில் வைத்து குறித்த பெண்ணை கைது செய்துள்ளனர்.

இந்நிலையிலேயே, குறித்த பெண் 22ஆம் திகதி அதிகாலை 4 மணியளவில் விளக்கமறியலில் தூக்கிலிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

உயிரிழந்த பெண் தான் அணிந்திருந்த நீண்ட காற்சட்டையை தூக்கிலிட பயன்படுத்தியுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு உறுதிப்படுத்தியிருந்தது.

இதனை ஒரு செய்தியாக மாத்திரம் தட்டி சென்று விட முடியாது, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள் உயிரிழந்த சம்பவங்கள் இலங்கை பொலிஸ் வரலாற்றில் புதிதல்ல.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் அடிப்படையான உரிமைகள் காணப்படுகின்றன. நாம் ஒவ்வொருவரும் இந்த உரிமைக்கு மாறாக செயற்பட்டால் மாத்திரமே அது குற்றமாகும். நாம் தண்டிக்கப்படுகிறோம்.

இந்த சம்பவத்தில் பல இடங்களில் தனி மனித உரிமை மீறப்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரியவருகிறது.

இது தொடர்பில் சிரேஷ்ட சட்டத்தரணி நடராஜர் காண்டீபனிடம் "ஒருவன்" செய்திச்சேவை கருத்துக்களை கேட்டறிந்தது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், இந்த மரணத்திற்கான முழு பொறுப்பையும் மருதானை பொலிஸார் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் பொலிஸார் சட்டத்தை கையில் எடுக்க கூடாது எனவும் வலியுறுத்தினார்.

சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டால் சந்தேகநபருக்கான முழு பொறுப்பும் பொலிஸாரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என வலியுறுத்திய அவர், அதற்கான ஏற்பாடுகளை பொலிஸார் உரிய முறையில் மேற்கொண்டிருக்க வேண்டும் எனவும் கூறினார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

பொலிஸாரால் கைது செய்யப்படும் சந்தேகநபர் ஒருவர் குற்றவாளியா அல்லது நிரபராதியா என்பதை நீதிமன்றமே தீர்மானிக்கிறது. உரிய விசாரணைகளை மேற்கொண்டு சரியான நீதியை நிலை நாட்ட வேண்டும். அதாவது பொலிஸார் சந்தேகத்தை மாத்திரமே வெளியிட முடியுமே தவிர தீர்மானத்துக்கு வரும் அதிகாரம் நீதிமன்றத்திடமே உள்ளது.

இலங்கையில் பாலியல் தொழிலில் ஈடுபடுவது சட்டத்துக்கு புறம்பானது எனினும், அவ்வாறு கைது செய்யப்படுபவர் குற்றவாளி என்பதை நீதிமன்றமே தீர்மானிக்கும். விசாரணைகளில் உயிரிழந்த பெண் போதைப்பொருள் வைத்திருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தாலும், அதுவும் நீதிமன்றம் மூலமே நிரூபிக்கப்பட வேண்டும். அதனைத் தவிர்த்து இதனால் தான் உயிரிழந்திருக்கக் கூடும் என்ற தீர்மானத்திற்கு பொலிஸார் வர முடியாது.

ஒரு மனிதன் உயிர்வாழ்வதற்கும், வாழ்வாதாரத்தை நடத்துவதற்கும் தனக்கான தொழிலை தானே தெரிவு செய்ய வேண்டும் என்பது அடிப்படை தனிமனித உரிமையாகும். ஆக, குறித்த சம்பவத்தின்படி, பல இடங்களில் தனிமனித உரிமை மீறப்பட்டுள்ளது.

அடுத்ததாக, பொலிஸ் நிலைய பாதுகாப்பு முக்கியமான ஒரு விடயமாகும். ஒரு பொலிஸ் நிலையத்தின் விளக்கமறியல் என்பது மிகவும் பாதுகாப்பான ஒரு இடமாகும். 24 மணித்தியாலமும் விளக்கமறியல் பாதுகாப்புக்கு அதிகாரியொருவர் நியமிக்கப்படுவார். அப்படியெனில் குறித்த பெண் தற்கொலை செய்ய முற்பட்ட போது அதிகாரிகள் எவரும் பணியில் இருக்கவில்லையா அல்லது அவதானமாக இருக்கவில்லையா என்றொரு கேள்வி எழுகிறது.

விளக்கமறியலுக்குள் தூக்கிடும் அளவிற்கு வசதிகள் இருக்கின்றனவா என்பது மற்றொரு கேள்வி. ஆக, இந்தக் கேள்விகளுக்கு நிச்சயமாக பொலிஸார் பதிலளிக்க வேண்டும். குறித்த பெண்ணின் மரணம் பல கோணங்களில் சந்தேகங்களை எழுப்பியுள்ளன. பொலிஸ் நிலையமாக இருந்தாலும் சரி, சிறைச்சாலையாக இருந்தாலும் சரி சந்தேகத்தின் பேரில்



கைது செய்யப்படுபவர்களாக இருக்கட்டும், தண்டனைக்குரிய குற்றவாளியாக கூட இருக்கட்டும் அவர்களின் பாதுகாப்புக்கான முழு பொறுப்பும் பாதுகாப்பு தரப்பினரிடமே உள்ளது." எனத் தெரிவித்தார்.

மக்களின் பாதுகாப்பு என்பது பொலிஸாரையும், இராணுவத்தினரையும் சார்ந்தே உள்ளது. எனினும், இந்த சம்பவம் மாத்திரமன்றி பல சம்பவங்களில் பொதுமக்களின் பாதுகாப்பில் அக்கறையற்ற விதத்தில் பாதுகாப்பு தரப்பினர் செயற்பட்டிருப்பதை நாம் பல செய்திகளில் கேட்டிருப்போம்.


ஆக, குற்றம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும் அதற்குரிய சட்டங்கள் இலங்கையில் காணப்படுகின்றன. அதற்கமைய சட்டங்கள் அமுல்படுத்தப்படின் அதுவே போதுமானதமாக இருக்கும். இவ்வாறு பொலிஸார் சட்டத்தை கையில் எடுப்பதால் மக்களுக்கு பாதுகாப்பு துறை மீதான அவநம்பிக்கையே அதிகரிக்கிறது.

இது போன்ற சம்பவங்கள் இடம்பெறுவது இது முதல் தடவை அல்ல. சந்தேகநபராக இருந்தாலும் உயிரிழந்தவரும் ஒரு பெண். அவருடைய பெயரை களங்கப்படுத்தும் விதத்தில் எந்தவொரு விடயமும் முன்வைக்கப்படக் கூடாது என்பது சட்டத்தரணிகளின் வாதம்.

எவ்வாறாயினும், மாற்றத்தை கொண்டு வருவதாக உறுதி பூண்டுள்ள அநுரகுமார திஸ ாநாயக்க தலைமையிலான அரசாங்கம் இவ்விடயம் தொடர்பில் நுணுக்கமான விசாரணைகளை ஆரம்பித்து நீதியை நிலைநாட்ட வேண்டும். அதுவே சிறந்த ஒரு எதிர்காலத் துக்கும் சிறந்த ஒரு முன்னுதாரணமாக இருக்கும். ■



கனூஷியா
புஷ்பகுமார்



# யாழ்.திருவள்ளுவர் மையத்தில் உலக ஊடகப் புகைப்படக் கண்காட்சி





(பு.கஜிந்தன்)

நெதர்லாந்து தூதரகத்துடன் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் இணைந்து நடாத்தும் உலக ஊடகப் புகைப்படக் கண்காட்சி நேற்று முன்தினம் (24) யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் ஆரம்பமாகியது.

இந்த கண்காட்சி 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் காலை 10:00 மணி முதல் இரவு 07:00 மணி வரை இப் புகைப்படக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

புகைப்பட ஊடகவியலில் சர்வதேச விருதுகளை வென்ற புகைப்படங்கள் உட்பட, புகைப்படத்தினூடு கதை சொல்லும் பல புகைப்படங்கள் இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நிகழ்வின் ஆரம்பத்தில் விருந்தினர்கள் தமிழர் பாரம்பரிய முறைப்படி மயிலாட்டம், குதிரையாட்டத்துடன் அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து புகைப்பட கண்காட்சி ஆரம்பமாகியது.

இலங்கைக்கான நெதர்லாந்து தூதரகத்தின் ஏற்பாட்டில் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கைக்கான நெதர்லாந்து தூதரகத்தின் பிரதித் தூதுவர் கலந்து சிறப்பித்ததுடன், யாழ். இந்திய துணைத் தூதுவர் சாய்முரளி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.சுமந்திரன், நெதர்லாந்து தூதரகத்தினர் மற்றும் பார்வையாளர்கள் என பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா கூட்டுறவு பயிற்சி நிலையம் விடுவிக்க இணங்கியது இராணுவம்



(கி.வசந்தன்)

15 வருடமாக இராணுவத்தின் வசமுள்ள வவுனியா கூட்டுறவு பயிற்சி நிலையத்தை விடுவிக்க இராணுவம் இணக்கம் தெரிவித்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் தெரிவித்துள்ளார்

பாராளுமன்றத்தில் கிளீன் ஸ்ரீலங்கா விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் காணப்படும் கூட்டுறவு பயிற்சி நிலையமானது கடந்த 15 வருடமாக இராணுவத்தின் பயன்பாட்டில் காணப்பட்டு வந்தது. கடந்த மாதம் இராணுவத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். அவர்கள் குறித்த நிலையத்தை விடுவிப்பதாக உறுதியளித்துள்ளார்கள்.

வடக்கு மாகண சபை ஆட்சியின் போது வவுனியாவில் அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையம் இதுவரை காலமும் திறக்கப்படாது பூட்டிய நிலையில் காணப்படுகின்றது. எதிர்வரும் காலத்தில் அதாவது வரும் மாதத்தில் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் அதனை திறந்து மக்களது பயன்பாட்டிற்கு விடவுள்ளோம்.

வன்னிப் பிரதேசத்தில் மகாவலி கங்கை நீர் இதுவரை வழங்கப்படவில்லை. எமது ஆட்சியில் மகாவலி கங்கை நீர்வளத்தை வன்னிக்கும் வழங்க திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் வளமான எதிர்காலத்தையும், வளமான வாழ்க்கையையும் வன்னி மக்களுக்கு பெற்றுக் கொடுப்போம் எனத் தெரிவித்தார்.

# இலவசக்கல்வியை கேள்விக்குட்படுத்தும் ஆடம்பர கற்றல் உபகரணங்கள்



(பு.கஜிந்தன்)

இலவசக் கல்வியை கேள்விக் குட்படுத்தும் வகையில் பாடசாலைக் குள், ஆடம்பர கற்றல் உபகரணங்கள் நுழைவதாக உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் தலைவர் ப.தர்மகுமாரன் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை (23) நொதேன் விளையாட்டு கல்லூரியின் இயக்குநர் சசிகுமார் தலைமையில் நடைபெற்ற, மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய போது இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாடசாலைகளில் இலவசக்கல்வி வழங்கப்படுகின்ற போதும் ஒரே சீருடை நடைமுறையில் இருக்கின்ற போதும் மாணவர்களின் சமத்துவத்தை சீரழிக்கும் வகையில் ஆடம்பர கற்றல் உபகரணங்கள் பாடசாலைக்குள் நுழைகின்றன. இது பொருளாதாரத்தில் பின் தங்கி இருக்கும் மாணவர்களை பாதிப்பதுடன் பாடசாலைகளில் இருந்து இடைவிலகவும் காரணமாக அமைகின்றது.

எனவே புத்தகப்பை, தண்ணீர்ப் போத்தல், உணவுப்பெட்டி, எழுது கருவி என்பன ஆடம்பரமானதாகவும் விலை அதிகமுள்ளதாகவும் விற்பனை செய்யப்படுவதுடன் அவை பாடசாலைக்குள் நுழைந்தபின் மாணவர்களின் மனங்களை மாற்றத்திற்கு உட்படுத்தி ஏற்றத்தாழ்வை உண்டுபண்ணுகின்றது.

இதன் மூலம் சமத்துவம் பாதிக்கப்பட்டு கல்வியும் வீழ்ச்சியடைந்து, பெற்றோர்கள் பிள்ளைகளுக்கிடையில் முரண்பாட்டை தோற்றுவித்து கல்வியில் இருந்து இடைவிலக வைக்கிறது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க ஆடம்பர கற்றல் உபகரணங்களுக்கு தடை விதித்து பாடசாலையில் மாணவர்களுக்கு இடையிலான சமத்துவத்தை பாதுகாக்க வேண்டும் என தெரிவித்தார்.

# யாழில் கோலாகலமாக ஆரம்பமான சர்வதேச வர்த்தக கண்காட்சி




யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றத்தின் ஏற்பாட்டில், 15வது ஆண்டாக இடம்பெறும் யாழ் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியானது "பொருளாதார முன்னேற்றத்திற்கான வடக்கின் நுழைவாயில்" எனும் தொனிப்பொருளுடன் நேற்று முன்தினம் (24) யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் காலை 11 மணியளவில் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கலந்துகொண்டு உத்தியோகபூர்வ கண்காட்சியினை திறந்து வைத்தார்.

யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சியில் பல்வேறுபட்ட வழங்குனர்களால் 350க்கு மேற்பட்ட காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விவசாயம், தொழில்நுட்பம், விருந்தோம்பல், கல்வி, உணவு, நவநாகரிகம் மற்றும் இதர தொழிற்துறைகள் என பல்வேறுபட்ட வர்த்தக நிறுவனங்களின் பொருட்கள் மற்றும் சேவைகளை காட்சிப்படுத்தி விற்பனை செய்கின்றன.

தொழிற்துறைகள் திணைக்களத்திற்கு, 40 வரையான நுண்ணிய சிறிய தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்காக 10 காட்சிக் கூடங்கள் அமைப்பதற்கான இலவச இட ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளது. மாலைவேளை சிறுவர்களை மகிழ்சியூட்டும் நோக்குடன் சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு (CARNIVAL) களியாட்ட நிகழ்வுகளும் இம்முறை விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சியானது 24,25 மற்றும் 26ஆம் திகதிவரை தொடர்ந்து இடம்பெறும்.

யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றத்தின் தலைவர் சபாரட்ணம், யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக (காணி) அரசாங்க அதிபர் எஸ்.ஸ்ரீமோகன், யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் ம.கிருஷ்ணேந்திரன், மன்றத்தின் செயற்றிட்ட உறுப்பினர்கள், கண்காட்சிக் குழுவினர்கள், ஏற்பாட்டாளர்கள், பொலிஸ் அதிகாரிகள், பார்வையாளர்கள் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# உடுவில் மகளிர் கல்லூரி வலிகாம வலயத்தில் முதலிடம்

(பு.கஜிந்தன்)

வெளியாகிய புலமைப் பரிசில் பரீட்சையில் உடுவில் மகளிர் கல்லூரியில் 61 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தி அடைந்து சாதனை படைத்ததுடன் குறித்த பாடசாலை தொடர்ந்து வலிகாம வலயத்தில் முதல்நிலை பாடசாலையாக மிளிர்ந்து வருகின்றது.

உடுவில் மகளிர் கல்லூரியில் 160மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றிய நிலையில் 61மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றனர். அத்துடன் 81மாணவர்கள் 100புள்ளிகளுக்கு மேலும், 18மாணவர்கள் 70புள்ளிகளுக்கு மேலும் பெற்று 100வீத சித்தியினை அடைந்து சாதனை படைத்துள்ளனர்.

குறித்த பாடசாலையானது இவ்வாறு சாதனை புரிவதற்கு வழிவகுத்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கு பல்வேறு தரப்பினரும் பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர்.

# 25 ஆண்டுகளின் பின்னர் சாதனை



(பு.கஜிந்தன்)

யா/கார்த்திகேய வித்திய சாலையானது 25 ஆண்டுகளின் பின்னர் புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை புரிந்துள்ளது.

வெளியாகிய புலமைப் பரிசில் பரீட்சையில் அந்த பாடசாலையில் கல்வி பயிலும் யசோதரன் கன்சிகா என்ற மாணவி 151 புள்ளிகளை பெற்று பாடசாலைக்கும் பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

# வவு.மாட்டிறைச்சியுடன் வாகனம் பிடிப்பு: இருவர் கைது



(கி.வசந்தன்)

வவுனியா, நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 4ஆம் கட்டை பகுதியில் 128 கிலோ மாட்டிறைச்சியுடன் வாகனம் ஒன்றினை கைப்பற்றியுள்ளதுடன் இருவரை கைது செய்துள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நெளுக்குளம் பொலிஸாரின் சோதனை நடவடிக்கையில் பட்டா ரக வாகனத்தினை சோதனைக்குட்படுத்திய போது கொள்கலன்களில் 128 கிலோ மாட்டிறைச்சியினை முறையற்ற முறையில் கொண்டு சென்றமை கண்டு பிடிக்கப்பட்டது. இதனையடுத்து குறித்த வாகனத்தினை பொலிஸார் கையப்படுத்தியதுடன், வாகனத்தின் சாரதி உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களின் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளின் பின்னர் கையப்படுத்தப்பட்ட 128 கிலோ மாட்டிறைச்சி உட்பட பட்டா ரக வாகனம் என்பவற்றுடன் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆயர்படுத்துவதற்குரிய மேலதிக நடவடிக்கையினை மேற்கொண் டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

# வவுனியா சுந்தரபுரத்தில் ஒருவர் வெட்டிக் கொலை

(கி.வசந்தன்)

வவுனியா, சுந்தரபுரத்தில் வியாழக்கிழமை (23) இரவு ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

சுந்தரபுரம் பகுதியில் வசித்து வந்த சுந்தரலிங்கம் சுகந்தன் என்ற 28 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

மரணமடைந்த குறித்த நபர் கடந்த தீபாவளி தினத்தன்று தனது மாமியாரை துப்பாக்கியால் சுட்டு காயப்படுத்திய வழக்கில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு வழக்கு விசாரணை இடம்பெற்று வரும் நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், மோட்டார் சைக்கிளில் இரவு 11:30 மணியளவில் தனது வீட்டுக்கு அருகில் சென்று கொண்டிருந்த போதே கூரிய ஆயுதத்தால் இவர் கொலை செய்யப்பட்டு இருப்பதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இவரது மைத்துனர் ஈச்சங்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இக் கொலைச் சம்பவம் தொடர்பில் ஈச்சங்குளம் பொலிசார் தடவியல் பொலிஸாரின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழில் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான மாவட்ட ஒருங்கிணைப்பு கலந்துரையாடல்




(பு.கஜிந்தன்)

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இடையிலான மாவட்ட ஒருங்கிணைப்பு கலந்துரையாடலானது மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன் அவர்களின் தலைமையில் நேற்று முன்தினம் (23) மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அவர்கள், 2024ஆம் ஆண்டில் அரச சார்பற்ற நிறுவனங்களினால் ரூபா 983 மில்லியன் பெறுமதியான திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டதாகவும், இதுவரை 2025ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களால் நடைமுறைப் படுத்த ரூபா 568 மில்லியன் பெறுமதியான திட்டங்கள் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறைநிரப்பு வேலைகளை நிரப்புவதற்காகவே அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்பட்டு வருவதாகவும், ஆனால் பிரதேச செயலகங்களுக்கு இடையில் ஒதுக்கீடுகளில் வேறுபாடுகள் காணப்படுவதனால் இத் திட்டங்களை இரண்டு வாரங்களில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களையும் அழைத்து மீள ஆராய்ந்து இறுதித் தீர்மானம் எடுக்கலாம் எனவும் தெரிவித்தார்.

மேலும் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைய குறிப்பாக "கிளீன் ஸ்ரீலங்கா" திட்டத்திற்கு அமையவும் அரச சார்பற்ற நிறுவனங்களின் திட்டங்களையும் உள்வாங்கி "செழுமையான நாடு அழகான வாழ்க்கை" என்ற கொள்கைக்கமைய அனைவரும் வினைத்திறனாக செயற்படுவோம் எனத் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்ட செயலாளர், அரச சார்பற்ற நிறுவனங்களின் மாவட்ட இணைப்பாளர், சர்வதேச அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



(ஏ.எச்.ஏ.ஹுஸைன்)

# முரண்பாட்டுக்குப் பின் சமாதானத்துக்கான நல்லிணக்கப் பயணம்



உள்ளூர் சமூகங்களின் மத்தியிலும் உலக சமூகங்களின் மத்தியிலும் சமூக நல்லிணக்கம் என்பது குறைபாடுடையதாகக் காணப்படுகின்றது.

இலங்கையின் முரண்பாடுகள்பற்றி உணர்ச்சிவசப்பட்டவர்களாகவும் (Emotional) எளிதாக உணர்ச்சிக்குட்பட்டவர்களாகவும் (Passionately) நாட்டில் மக்கள் காணப்படுகின்றார்கள்.

முரண்பாட்டின் தோற்றம் மாற்றுவிக்கப்பட்டதன் காரணமாக இப்போது தனியே நிலைமையை தணிப்பதற்காக மாத்திரமன்றி சரியான முறையில் நீதியுடனான சமாதானம், மானிட கௌரவத்துடனான சமாதானம், கடந்த கால நிகழ்வுகளை அழிக்காத சமாதானம் என்பன பற்றி சமாதான ஆர்வலர்கள் பலர் சிந்திப்பதாகத் தெரிகிறது.

அடிப்படை ஜனநாயகப் பெறுமானங்கள் கவலைக்குரிய வகையில் தேய்ந்து செல்லும் இந்த சந்தர்ப்பத்தில் சமாதான சகவாழ்வு சௌஜன்ய செயற்பாடுகளில் ஆர்வம் கொள்வது வரவேற்கத்தக்கது.

அதுமாத்திரமன்றி நீதியானதும் நிலைத்து நிற்கக் கூடியதுமான சமாதானத்திற்கு ஆதரவாக ஒலிக்கும் குரல்களை ஊக்குவிக்க வேண்டிய காலத்தின் கட்டாயமும் இருக்கிறது.

இவ்வாறான நிலையில் சமாதானத்தை ஆதரித்து அதனை விரும்பும் இலங்கையர்கள் கூட்டாக இணைந்து சமாதானத்தை அச்சுறுத்தும் சக்திகளுக்கு எதிராக எழுந்து நின்று ஓர்மையாகச் செயற்பட வேண்டும் என்று சமாதான ஆர்வலர்கள் அறைகூவல் விடுக்கிறார்கள்.

மாறாக, நடப்பது நடக்கட்டும் என்று அமைதியாக இருப்போமானால் வாழ்வின் புனிதத்தைப் போற்றுவதும் வேறுபட்ட கருத்துக்களைப் பாராட்டுவதும் வன்முறைகளை விட்டொழிப்பதுமான பெறுமானங்களைக் கௌரவிக்கக்கூடிய சமாதானமான இலங்கையை உருவாக்கக் கூடிய முயற்சிகளுக்கு அது சாவுமணி அடித்து விடும்.

ஆகக் குறைந்தது வன்முறை இனி ஏற்படாது என்ற நிலைக்காவது வந்து சேர வேண்டும்.

இத்தகைய ஒரு மாபெரும் பணியைச் செய்ய திடசங்கற்பம் பூண்டு இயங்கி வருகிறது தந்தை செல்வா அறக்கட்டளை.

இந்த மகோன்னத பணிக்காகவும் தந்தை செல்வா அவர்களின் நினைவாகவும் யாழ்ப்பாணத்தைத் தலைமையகமாகக் கொண்டு தந்தை செல்வா கலையரங்கு 01.07.2019 அன்று திறந்து வைக்கப்பட்டது.

அன்று தொடக்கம் இன்றுவரை பல்லின சகவாழ்வு, சமாதான நடவடிக்கைகளுக்காகவும் யுத்தத்திலிருந்து மீண்டெழும் தமிழ் பேசும் மக்களின் வல்லமையின் எடுத்துக்காட்டாகவும் தந்தை செல்வா அறக்கட்டளையின் தாராள பங்களிப்புடனும் அந்த நிலையம் இயங்கி வருகிறது.

மேலும் தந்தை செல்வா அறக்கட்டளையின் கிளை அமைப்பான கிளிநொச்சியில் அமையப் பெற்றுள்ள சமாதான சகவாழ்வுக் கலையரங்கத்தின் ஊடாக ஐக்கிய சமூக சமாதான சகவாழ்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



**இலங்கையர்கள் கூட்டாக இணைந்து சமாதானத்தை அச்சுறுத்தும் சக்திகளுக்கு எதிராக எழுந்து நின்று ஓர்மையாகச் செயற்பட வேண்டும்**





தந்தை செல்வா அறக்கட்டளை மூலம் அறிவுசார் கல்வி, சமாதானம், பாதிக்கப்பட்ட மக்களின் கலை கலாசார பண்பாட்டு மீட்சி, சமாதான எண்ணக்கருக்களை விதைத்தல் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தொடர்ந்தும் இத்தகைய சமூக அபிவிருத்தி செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கிறார்கள் அதன் செயற்பாட்டாளர்கள்.

குறிப்பாக சமாதான எண்ணக்கரு குறித்து தனிமனித செயற்பாடும் அடுத்த தலைமுறையினருக்கு சமாதானத்தை நோக்கிய அகன்ற பார்வையைக் கொண்டு சேர்ப்பித்தலும் இடம்பெறவேண்டும். இந்த செயற் திட்டத்திற்கு அர்ப்பணிப்பதாக அறக்கட்டளையின் எதிர்கால செயற்பாடுகள் முனைப்புப் பெறும் என்றும் நம்பிக்கை தெரிவிக்கிறார்கள். அந்த அமைப்பின் செயற்பாட்டாளர்கள் .

ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு தற்போது 15 வருட காலம் முடிந்து விட்டபோதிலும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதிலும் நல்லாட்சியை நல்ல முறையில் அமைப்பதிலுமுள்ள வாய்ப்புக்களை சமூகங்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது என சமூக செயற்பாட்டாளர்கள் ஆதங்கப்படுகிறார்கள்.

ஒப்பீட்டளவில் இந்த ஆதங்கம் சரியானதுதான் என்றே தோன்றுகின்றது.

தேசிய நல்லிணக்கம் ஏற்படுவதற்கு இனங்களுக்கிடையே சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் இன்றியமையாதது.

ஆனால், அத்தகையதொரு சமாதானம் உள் மனக் காயங்களின்றிக் கட்டியெழுப்பப்பட வேண்டுமாயின் நடந்த தவறுகளுக்காக மனம் வருந்துதல் தொடர்பாக கூட்டான செயற்பாடுகள் அனைத்துத் தரப்பாரிடமிருந்தும் வர வேண்டும் ஆனால், எந்தவொரு தரப்பினரிடமிருந்தும் இதுவரை அவ்வாறானதொரு, நடந்த, விரும்பத்தகாத நிகழ்வுகளுக்காக "வருந்துதல்" என்ற விடயம் முக்கியத்துவம் பெறவில்லை.

இந்த விடயத்தில், நடந்த மனித குல அழிவுகளுக்காக அந்தத் துயரங்களைக் கருத்திற் கொண்டு அவர்கள் ஒரு சுய மதிப்பீடு, சுய பரிசோதனைகளைச் செய்வதற்கும் ஆயத்தமில்லாத நிலைமையே காணப்படுகின்றது.

அவ்வாறு வருத்தப்படுதல் இடம்பெறும் என்ற நம்பிக்கையும் இல்லாமலேயே காலம் கடந்து கொண்டிருக்கின்றது.

ஏனென்றால், வருத்தப்படுதல் என்பதற்குப் பதிலாக மேலும் மேலும் தீவிர வெறுப்புணர்வுகளை ஊட்டுதல் போன்ற செயற்பாடுகளே மேலோங்கிக் காணப்படுகின்றன.

அவ்வாறு ஒரு சுய மதிப்பீட்டை நேர்மையாகச் செய்து மன்னிப்பும் இரக்கமும் காட்டப்படாதபட் சத்தில் நல்லிணக்கத்திற்கான விதைகளை விதைத்துப் பயிரிட முடியாத துரதிஷ்டம் ஏற்படும்.

**கடந்த காலத்தில் நடந்ததுபோன்ற பேரழிவுகள் ஏற்படாதிருக்கும் வண்ணம் தமது கடமைகளைச் சரிவரச் செய்யாததற்காக சமூக அரசியல் தலைவர்கள் தங்களைத் தாங்களே கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டும்**

கடந்த ஆயுத முரண்பாட்டால் தாம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதாக உணர்ந்த ஒரு சாரார் ஒருபக்கம் மிகவும் வருந்திக் கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறாக ஏதுமறியாது முரண்பாட்டின் இடையிலே அகப்பட்டுக் கொண்ட மக்களிடம் மீண்டும் கடந்த காலத்தில் நடந்ததுபோன்ற பேரழிவுகள் ஏற்படாதிருக்கும் வண்ணம் தமது கடமைகளைச் சரிவரச் செய்யாததற்காக சமூக அரசியல் தலைவர்கள் தங்களைத் தாங்களே கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டும்.

மன வேதனையும் தாழ்வுணர்ச்சியும் கொண்டவர்களாக அனைத்துத் தரப்பு தலைவர்களும் ஒருவரையொருவர் அணுகி இணைந்ததோர் மன்னிப்புக்கோரலைச் செய்து அதனைப் பொது வெளியிலும் வெளியிடுதல் வேண்டும்.

இச்செயன்முறைகளை நோக்கி அனைத்து சிவில் சமூகப் பிரதிநிதிகளும், அரசியல் தலைவர்களும் ஆன்மீகத் தலைவர்களும் புத்தி ஜீவிகளும் சமூகத் தலைவர்களும் மாற்றுச் சிந்தனையாளர்களும் செயற்படுவதுடன் நல்லிணக்கத்தின் அனைத்து செயன்முறைகளிலும் காயங்கள் ஆற்றப்படுவதற்கான புரிந்துணர்வின் தாக்கத்தினையும் அவர்கள் ஏற்படுத்த வேண்டும்.

கடந்த முப்பது வருடகாலத்தில் ஆயுத அழிவுகளின் கோரப்பிடிக்குள் அகப்பட்டுத் திக்குத் தெரியாமல் தடுமாறிய மக்கள் தமது மனக் காயங்களை இலேசாக மறந்து விட்டிருக்க முடியாது.

மறந்து விடுவார்கள் என்று எதிர்பார்க்கவும் கூடாது. சிலவேளை பாதிப்பின் தன்மையைப் பொறுத்து இந்த மன வடுக்களின் விளைவுகள் அல்லது தொடர்பாதிப்புக்கள் சமூகங்களின் அடுத்த சந்ததிகளுக்கும் அழுத்தத்தைக் கொடுக்கலாம்.

வாழ்விடம், உயிர், உடைமை, நிம்மதி என்று எல்லாவற்றையுமே இழந்திருந்த மக்களுக்கு மீண்டும் நிம்மதி சமாதானம் பாதுகாப்பான வாழ்க்கைச் சூழல் என்பவை அவசியம் தேவை.

இத்தகைய குணப்படுத்தல் நிவாரணப் பணிகளை எவரும் குறைத்து மதிப்பிடவும் முடியாது.

நிர்க்கதியானவர்களுக்கு நேசக்கரம் நீட்டி அவர்களையும் தூக்கி நிமிர்த்தி விட்டாலேயொழிய வேறு விதத்தில் உடனடி நிவாரணம் அவர்களுக்குக் கிடைக்கப்போவதில்லை.

இத்தகைய நிவாரணங்கள் யாருக்குத் தேவை என்பதிலும் கேள்விகள் கருத்து வேறுபாடுகள் இருக்க முடியாது.

ஏனெனில், கடந்த 30 வருட கால ஆயுத முரண்பாட்டின் விளைவாக அனைத்து சமூகங்களையும் சேர்ந்த மக்களே பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆகையினால் இனம் சார்ந்து, மதம் சார்ந்து, மொழி சார்ந்து, பால் நிலை சார்ந்து, பிரதேசம் சார்ந்து இந்தப் பணிகளைச் செய்வது அர்த்தமற்றதாகிவிடும்.

மக்கள் தங்களது பிரச்சினைகளையும் தேவைகளையும் தாங்களாகவே இனங்கண்டு தீர்த்துக் கொள்ள வேண்டிய ஆற்றலும், அறிவும் மக்களிடம் உள்ளூரிலேயே இருக்கிறது **(Local Capacity for Peace)** என்று கொண்டாலும் அதனை உயிர்ப்பிக்க வேண்டிய தேவை உள்ளது.

வெளியிலிருந்து "இறக்குமதி" செய்யப்படும் இனவாத, மதவாத, வகுப்பு வாத, மற்றும் பால்நிலை சார்ந்த விடயங்கள் மக்களைக் குழப்பி கடைசியில் தீர்வுக்கும் வெளியிலிருந்து "இறக்குமதி" செய்யப்படும் சமாதானங்களை நம்பியிருக்க வேண்டிய சூழ்நிலைதான்' கடந்த காலங்களில் இருந்து வந்தது.

எப்பொழுதுமே நாங்கள் வெளியிலிருந்துதான் எல்லாவற்றையும் எதிர்பார்க்கும் மனநிலைக்குப் பழக்கப்படுத்தப்பட்டுவிட்டதால் இப்பொழுதும் தொழுவத்து மாடுகள்போல சுற்றிக் கொண்டிருக்கின்றோம் என்று குறைகூறுகின்றார்கள். சமூக ஆர்வலர்கள்.

"மக்கள் சொல்லிக் கொடுப்பதை மாத்திரம் கேட்டு நடக்கும் நடைப்பிணங்களாக மூளைச் சலவை செய்யப்பட்டிருப்பது துரதிரஷ்டமானது. அதற்குப்பதிலாக, பாரம்பரியமாக நமது மூத்தோரிடம் காணப்பட்ட சமூக உயர் விழுமியங்களும் சிறப்பம்சங்களும் சகவாழ்வும் சின்னாபின்னப்படுத்தப்பட்டிருப்பதாக" கவலை தெரிவிக்கிறார்கள் சமூக ஆர்வலர்கள்.

"நம்முன்னோர்களின் வாழ்வியல், பரஸ்பர உதவி ஒத்தாசையின் அடிப்படையில் ஊர் மக்கள் ஒன்றுகூடி பல நன்மையான கருமங்களில் பாரம்பரியமாக ஈடுபட்டு வந்திருக்கின்றார்கள். ஒரு குடிசைக்குக் கூரை வேய்வதென்றால் கூட அயலவர்கள் ஒன்று கூடி உதவி ஒத்தாசைகள் புரிந்து சகவாழ்வு வாழ்ந்ததை அறிகிறோம்.

ஆனால் உள்ளூர் சகவாழ்வையும் பலத்தையும் மக்கள் குறைத்து மதிப்பிட்டு விடாமல் பிரச்சினைகளையும், தீர்வுகளையும், தேவைகளையும், வளங்களையும் சிறப்பான முறையில் இனங்கண்டு அபிவிருத்தியையும், சமாதானத்தையும் அடைந்து கொள்ளவேண்டும்" என்றும் ஆதங்கம் தெரிவிக்கப்படுகிறது. சமூக நல்லிணக்கம் என்பது நாட்டிலுள்ள குற்றங்களின் அளவைக் குறைப்பதற்கும் நிம்மதியற்ற சூழலை மாற்றி நம்பிக்கையையும், பாதுகாப்பையும் உருவாக்குவதற்கான வழிமுறைகளாக இனங்காணப்பட்டுள்ளது.

எங்கு சரியாக சமூக நீதி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதோ அங்கு குற்றச்செயல்களின் அளவு, சமூக அமைதியின்மை என்பவற்றில் வீழ்ச்சியை அவதானிக்கக் கூடியதாயிருக்கும். சமூகவியலின்படி, ஒரு சமூகம் அதன் பல்வேறுபட்ட உபகரணங்களை உபயோகிப்பதன் மூலம் சமூகத்திலுள்ள அனைத்துப் பாகங்களினதும் சமநிலையைப் பேண வழிவகுக்கின்றது. அவ்வாறான உபகரணங்களாக உரையாடல்கள், சகிப்புத்தன்மை, சகவாழ்வு (Co-Existence) அபிவிருத்தி என்பவனற்றைக் குறிப்பிடலாம்.

மேலும், பல்வேறுபட்ட பங்குதாரர்களும் சமூக நல்லிணக்கத்தை நிலை நாட்டுவதில் பங்குகொள்கின்றனர்.

இலங்கையில் கடந்த காலக் காயத்தை நிகழ் காலத்தில் குணப்படுத்துவதனூடாக எதிர்காலத்தைக் கட்டியெழுப்பி மீளிணக்கத்தைப் பலப்படுத்த வேண்டும்.

அதற்கான செயல் திட்டம் இப்பொழுதிருந்தே முன்னெடுக்கப்பட வேண்டும். "சமாதானத்திற்கான கலாசாரம்" கலாசாரத்தின் மூலம் அமைதியை அடைய நமது இதயங்களும் வாழ்க்கையும் ஒரு முக்கிய அடித்தளமாகும்.

# கிழக்கில் இலங்கை கல்வி நிருவாக சேவையினருக்கு வெற்றிடம்

## 350 பேர் தேவை 170 பேர் கடமையில்

(முகம்மட் முக்தார்)

கிழக்கு மாகாணத்தில் உள்ள கல்வி அலுவலகங்களில் இலங்கை கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கு பாரிய பற்றாக்குறை நிலவுவதாகக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கே.குணநாதன் தெரிவித்தார்



கிழக்கு மாகாணத்தில் மாகாணக் கல்வி அலுவலகம்,வலயக்கல்வி அலுவலகம், கோட்டக்கல்வி அலுவலகம் என்பனவற்றில் இவ்வாறு வெற்றிடம் நிலவுவதாகவும் அவர் தெரிவித்தார். முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் கிழக்கு மாகாணத்திற்கென 350 இலங்கை கல்வி நிருவாக சேவைகள் உத்தியோகத்தர்களுக்கான ஆளணி அங்கீகரிக்கப் பட்டுள்ளதாகவும் ஆனால் கடமையில் 170 பேர் மட்டுமே கடமையாற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார். இவ்வெற்றிடங்களை நிரப்புமாறு கல்வியமைச்சு, அரச சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச்சேவை குழு என்பவற்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு கல்வி அலுவலகங்களில் இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகளுக்கு வெற்றிடம் நிலவுகையில் கிழக்கு மாகாண அரச சேவையில் கடமையாற்ற விடுவிக்கப்பட்ட இலங்கை கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் சிலர் மாகாண பாடசாலை , தேசிய பாடசாலைகளின் பதிலதிபர்களாக கடமையாற்றி வருவது அறியவந்துள்ளது.

இவர்களை மீளவும் வலய, கோட்டக்கல்வி அலுவலகங்களுக்குக் கடமைக்காக அழைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் செயலாளர் குணநாதன் தெரிவித்தார்.





வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் வீ எபெக்ற் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் அமுலாக்கத்தினூடாக ஈராயிரம் தென்னங்கன்றுகள் விநியோகிக்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்குப் பாரம்பரிய, சிறந்த ரக, நீண்ட காலப் பயன் தரும் தென்னங் கன்றுகள் விநியோகிக்கும் நிகழ்வு வெருகல் பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றது.

(படங்கள் : ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

# பிலிப்பைன்ஸ் அரசியல் பிரதிநிதிகள் முஸ்லிம் எம்.பிக்களுடன் சந்திப்பு





பிலிப்பைன்ஸ் அரசியல் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக் குழுவினருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கிடையில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றது.

பிலிப்பைன்ஸ் நாட்டில் நீண்டகால சுயாட்சிப் போராட்டத்தின் பின்னர் தங்களுக்கான சமாதான தீர்வை எட்டுவதில் குறிப்பிடத்தக்க அரசியல் பரிமாணத்தை அடைந்துள்ள முஸ்லிம் மின்டானோ பங்சமோரோ தன்னாட்சி பிராந்தியத்திலிருந்து தற்போது இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அரசியல் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக் குழுவினரே வியாழக்கிழமை (23) பாராளுமன்றத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் கட்சியின் பிரதித்தலைவர் கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ்,கட்சியின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் நிஸாம் காரியப்பர் மற்றும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நீண்ட நேரம் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இலங்கையைப் பொறுத்தவரைப் போருக்குப் பிந்திய இனப் பிரச்சினைத் தீர்வுக்கான முன்னெடுப்புகள், இந்நாட்டின் அரசியல் அமைப்பு, தேர்தல் முறைமை, நிர்வாகக் கட்டமைப்பு போன்றவை தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



புதிய அரசாங்கத்தின் “கிளீன் ஸ்ரீலங்கா” வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்முனைக் கல்வி வலயத்திற்கான இலவச சீருடை மற்றும் இலவச பாட நூல் வழங்கும் வைபவ ரீதியான நிகழ்வு பாடசாலையின் முதல்வர் ஏ.ஜி.எம்.றிஸாத் தலைமையில் வெள்ளிக்கிழமை பாடசாலை ஆராதனை மண்டபத்தில் நடைபெற்றது. (படங்கள் : றாசிக் நபாயிஸ், மருதமுனை)

# ஊடகவியலாளர் சுகிர்தராஜனின் 19ஆவது ஆண்டு நினைவேந்தல்

(ஹஸ்பர் ஏ.எச்)

படுகொலை செய்யப்பட்ட சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் 19ஆவது ஆண்டு ஞாபகார்த்த நிகழ்வு வெள்ளிக்கிழமை திருகோணமலையில் அனுஷ்டிக்கப்பட்டது. ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் 2006.01.24ஆம் திகதி அன்று படுகொலை செய்யப்பட்டார். ஞாபகார்த்த நிகழ்வு வெள்ளிக்கிழமை 2.30 மணிக்குத் திருகோணமலை உவர்மலை லோவெர் வீதியில் அமைந்துள்ள உவர்மலை பூங்காவடியில் நடைபெற்றது. இந்நினைவேந்தல் நிகழ்வானது வடக்கு கிழக்கு ஊடக அமைப்புக்கள், சிவில் அமைப்புகள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் நடைபெற்றது. இதன்போது மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு உணர்வுப் பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் குறித்த படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் தொடர்பாக நினைவுப் பேருரையும் இடம்பெற்றது. இதில் பெரும்பாலான வடகிழக்கு பகுதிகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



## நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் முன் ஆர்ப்பாட்டம்



(பாறுக் ஷிஹான்)

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்பை உரிய முறையில் மேற்கொள்ளாமை தொடர்பில் கேள்வியெழுப்பிய சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர் உமர் அலிக்கு இடமாற்றம் வழங்கியமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் உரிய விசாரணைகளைப் பக்கச்சார்பின்றி நடாத்துமாறு கோரி வெள்ளிக்கிழமை மதியம் பொதுமக்கள் நிந்தவூர் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக போராட்டம் ஒன்றினை மேற்கொண்டுள்ளனர். குறித்த வைத்தியசாலையின் முன்பாக ஒன்று கூடிய மக்கள் பல்வேறு கோஷங்களை எழுப்பி உரிய விசாரணைகள் பக்கச்சார்பின்றி மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் குரல் கொடுத்த சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர் இடமாற்றம் குறித்து மீள்பரிசீலனை வேண்டும் என எதிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

மேலும் இவ்விடயம் தொடர்பில் சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர் முஹமட் இஸ்மாயில் உமர் அலிக்கு இடமாற்றம் வழங்கியமை கண்டிக்கத்தக்கது எனவும் இவ்விடயம் குறித்து நீதியான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென அஷ்ரப் தாஹிர் எம்.பி சுகாதார அமைச்சரிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கந்தளாய் குளத்தின் நீர்மட்டம் அபாய கட்டத்தில்

(கிண்ணியா கியாஸ் ஷாபி)

கந்தளாய் குளத்தின் சாதாரண நீர்மட்டத்தின் உயரமானது 38.75 அடி ஆகும். ஆனால் குளத்தின் தற்போதைய நீர்மட்டம் 38.87 அடியாக உயர்ந்துள்ளதால் அபாய மட்டத்தில் காணப்படுவதாக கந்தளாய் நீர்ப்பாசன பொறியியலாளர் சிந்தக்க சுரவீர தெரிவித்துள்ளார்.


கந்தளாய் குளத்தின், தற்போதைய நிலவரம் குறித்து, ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

குளத்தின் நீரின் சாதாரண மொத்த சேமிப்பு அளவு 114,000 ஏக்கர் அடியாகும். தற்போது இது 114,875 ஏக்கர் அடியாகக் காணப்படுகின்றது. இது சாதாரண மொத்த சேமிப்பு அளவை விட அதிகமாகும். இதன் காரணமாக, கடந்த புதன்கிழமையிலிருந்து (22) இந்த குளத்தின் 10 வான் கதவுகளும் திறக்கப்பட்டு மேலதிக நீர் வெளியேற்றப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வான் கதவும் 1 அடி திறக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், செக்கனுக்கு 2110 கன அடி நீர் வெளியேற்றப்படுவதாகவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில்,தொடர்ச்சியாக ஒவ்வொரு செக்கனும் நீர் இங்கிருந்து இவ்வாறு வெளியேற்றப் படுவதால்,கந்தளாய், வெண்டராசன், வான்எல மற்றும் பேரமடுவ ஆகிய பகுதிகளிலுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இம்முறை வேளாண்மைச் செய்கையில் மிகப்பெரிய பாதிப்பைச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம் என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

## துப்பாக்கிக் குண்டுகளுடன் திரிந்த யானைக் குட்டி மீட்பு





(கிண்ணியா கியாஸ் ஷாபி)

கந்தளாய் சூரியபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகாவலி ஆற்றுக்கு அண்மித்த பகுதியில் துப்பாக்கியால் சுடப்பட்ட நிலையில் காட்டு யானை குட்டி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில், யானை குட்டி ஒன்று வீழ்ந்து கிடப்பதாக, கிராமவாசிகள் கந்தளாய் வனவிலங்கு அதிகாரிகளுக்கு வழங்கிய தகவலை அடுத்து, இந்த குட்டி யானை மீட்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கந்தளாய் கால்நடை மருத்துவர் சமீர கலிங்கு ஆராய்ச்சி உள்ளிட்ட அதிகாரிகள் வியாழக்கிழமை (23) காலை சம்பவ இடத்திற்குச் சென்று, யானை குட்டிக்குச் சிகிச்சை அளித்துள்ளனர்.

சுமார் 3 வயதுடைய பெண் யானைக் குட்டியின் வயிறு மற்றும் தொடைப் பகுதிகளில் 6 குண்டுகள் பாய்ந்துள்ளதால் நடக்க முடியாத நிலையில் இருந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சமீபத்தில் பெய்த மழையால் ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால், யானைக்குட்டி அதன் தாயிடமிருந்து பிரிந்திருக்கலாம் என வனவிலங்கு அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

## கிண்ணியாவில் 240 குடும்பங்கள் நிர்க்கதி



(கிண்ணியா கியாஸ் ஷாபி)

வெள்ளம் காரணமாகக் கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நான்கு விவசாய கிராமங்களின் தரைவழிப்பாதை முழுமையாக துண்டிக்கப்பட்டுள்ளதால் 240 குடும்பங்களைச் சேர்ந்த 666 பேர் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கிண்ணியா உப்பாறு கிராம சேவகப் பிரிவில் உள்ள, கண்டல்காடு, மயிலப்பன்சேனை, காரைவெட்டுவான் மற்றும் சோலை வெட்டுவான் ஆகிய விவசாய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்தும் பிரதான போக்குவரத்து மார்க்கமே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது பெய்து வருகின்ற கனமழை, இதனால் ஏற்பட்ட மகாவலி கங்கையின் பெருக்கெடுப்பு மற்றும் கந்தளாய் குளத்தின் வான் கதவுகள் திறப்பு ஆகிய நிலைமைகளினால், இந்த கிராமங்களுக்கு வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்தக் கிராம மக்களின் நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து விடயங்களும் கிண்ணியா நகரத்தை மையப்படுத்தியே இருக்கின்றது.

வைத்தியசாலை உட்பட அத்தியாவசிய பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கும் கிண்ணியா நகரத்துக்கே செல்ல வேண்டும். கிண்ணியாவுக்கு செல்வதற்கு வேறு எந்த போக்குவரத்து மார்க்கமும் இவர்களுக்கு இல்லை.

இதனால், இவர்கள் தற்போது நிர்க்கதியான நிலைக்கு ஆளாகியுள்ளனர். சிறு தோணிகளைப் பயன்படுத்தி, ஒருவர் இருவராக, ஆண்கள் மாத்திரம் தற்சமயம் ஆற்றைக் கடந்து, பிரதான வீதிக்குச் செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இந்த வீதி துண்டிக்கப்படுவது இது முதல் தடவை அல்ல. கடந்த 40 வருடங்களாக இவ்வாறு பருவ மழைக் காலங்களில், இதே துன்பத்தைத்தான் தொடர்ந்து அனுபவித்து வருகின்றனர் இந்த கிராம மக்கள். தற்போது, சுகாதார வசதிகள், சமைத்த உணவுகள், குழந்தைகளுக்கான பால் மா என பல்வேறு தேவைகளை இவர்கள் வேண்டி நிற்கின்றார்கள். கிண்ணியா பிரதேச செயலகம் இவற்றை உடனடியாக கருத்தில் கொண்டு, அவசர உதவிகளைக் கொடுப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

# உலகளாவிய தரம்கொண்ட கல்வி: இலங்கையில் தொழில் வழிகாட்டலின் முக்கியத்துவம்



அகல்யா டேவிட்

சர்வதேச கல்வி தினம் (International Education Day) ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24 அன்று கொண்டாடப்படுகிறது. 2018ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை இந்த நாளை கல்வி மனித உரிமையாகவும் சமூக முன்னேற்றத்திற்கும் நீடித்து நிலைத்த வளர்ச்சிக்கும் அடிப்படையாகவும் செயல்படுகிறது என்பதைக் கௌரவிப்பதற்காக அறிவித்திருந்தது. இந்த நாள் கல்வியின் முக்கியத்துவத்தையும் பெறுமதியையம் வலியுறுத்துகிறது.

இலங்கையில் மாணவர்களுக்கான உலகளாவிய தரம்கொண்ட வழிகாட்டல் பங்கிற்கான தேவை அதிகரித்துள்ளது. இது அவர்களை காலத்திற்கேற்ப சீர் தூக்கவும், சர்வதேச வேலைவாய்ப்புகளின் வேகமான மாற்றத்துக்கு உகந்தவர்களாக உருவாக்கவும் இன்றியமையாததாக உள்ளது.

இந்நாளில் பாடசாலைக்கல்வியில் தொழில்வழிகாட்டலின் முக்கியத்துவம் பற்றி நாங்கள் கதைத்தே ஆக வேண்டும். அருளம்பலம் கருணாகரன். உள ஆற்றுப்படுத்துனர், ஆலோசனை வழிகாட்டல் மற்றும் தொழில்வழிகாட்டல் பயிற்றுவிப்பாளராக கிழக்கு மாகாணத்தில் 12 வருடங்கள் செயற்பட்டு வருகிறார். மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தராக அரச சேவையில் கடமையாற்றி வருகிறார். அவருடனான நேர்காணலில் பின்வருமாறு கூறுகிறார்.

சர்வதேச சந்தர்ப்பங்களுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்துவதில் இலங்கையின் கல்வி முறையின் பொருத்தப்பாடு மற்றும் ஒரு நாட்டின் சமூக கலாசார பொருளாதார நிலமைகளை முன்கொண்டு செல்வதற்கு அடிப்படையாக அமைவது கல்வியாகும். எங்களுடைய நாட்டைப் பொறுத்த வரையில் கல்வியானது நமது நாட்டின் முன்னேற்றத்தில், தனிநபர் மாற்றத்தில் கணிசமான பங்களிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இருந்தாலும் சர்வதேச ரீதியாக அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் ஒப்பிடும் போது கல்வியானது தனிநபர் மாற்றத்திலும் நாட்டின் முன்னேற்றத்திலும் பங்களிப்பு செய்தது போதாமல் இருக்கின்றது.

எங்களுடைய நாட்டில் தொழில் வாண்மைத்துவமான பயிற்சிகள் மற்றும் அது தொடர்பான கல்வி நடவடிக்கைகள் ஓரளவு இருந்தாலும் சர்வதேச தரத்திலான தொழிலுக்கான பயிற்சிகளையும் வழங்குகின்ற தன்மை போதாமல் இருந்தது. ஆகவே, சர்வதேச சந்தர்ப்பங்களுக்கு மாணவர்களைத் தயார்படுத்துகின்ற போது இலங்கையினுடைய கல்வி முறையில் பாரிய மாற்றங்களை செய்ய வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது. குறிப்பாக இரண்டு விடயங்களை இங்கு நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தொழில்முறைக் கல்வி சார்ந்த விடயங்களை அதிகமாகவும், அதோடு இணைந்ததாக சமூக விழுமியங்கள், மனிதநேயமிக்க எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்ட கல்வித் திட்டம் வெளிவருகின்ற போது எங்களுடைய நாட்டிலும் சர்வதேச தரத்திலான தொழிலாளர்களை உருவாக்குகின்ற அந்தப் பாரிய பொறுப்பினை இலங்கை நாடும் எட்டி விடும். அதன் பணியில் கடந்த கால அரசாங்கமும், தற்கால அரசாங்கமும் அதற்கான வேலைத் திட்டங்களை சிறப்பாக ஆரம்பித்து வருவதாக நாங்கள் அறிகிறோம். இருந்தாலும் அரசாங்கங்கள் அவ்வப் போது கல்வி தொடர்பாக முன்வைக்கின்ற சீர்திருத்தங்களை அதைப் போதிக்கின்ற அல்லது பின்பற்றுகின்ற இலங்கையை சேர்ந்த கல்வியாளர்களாக இருந்தாலும் அவற்றைப் பெற்றுக் கொள்பவர்களாக இருந்தாலும் அது தொடர்பான புரிதலை காத்திரமான விதத்தில் செலுத்த வேண்டியது அவசியமாக இருக்கின்றது.

சர்வதேச தரத்திற்கான மாணவர்களை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளின் பார்வை இலங்கைக் கல்வித் திட்டத்தில் காணப்படுகின்றன. குறிப்பாக பாடசாலைகளில் தொழில் வழிகாட்டல் செயன்முறை, பாடசாலைக் கல்விக்குப் பின்னரான தொழிற்கல்வி நிறுவனங்களின் தொழில் வழிகாட்டல் செயன்முறை, அரசு துறை மற்றும் தனியார் துறை சார்ந்த தொழில் வழிகாட்டல் அலகுகள் உருவாக்கப்பட்டு இருந்தாலும் அவற்றினுடைய செயற்பாடுகளை வினைத்திறனுடன் கொண்டு செல்வதற்கான போதியளவு வசதிகளும் வாய்ப்புகளும் இல்லாமல் இருப்பது தான் ஒரு பாரிய குறையாக இருக்கின்றது. அவற்றுக்கான ஆளுமைகளைப் பயிற்றுவிக்கின்ற பயிற்சியாளர்களுக்கு நிபுணத்துவப் பயிற்சிகள் போதாமல் இருக்கின்றது.



அதாவது விஞ்ஞான பூர்வமாக உளவியல் அணுகுமுறைகளுக்கூடாக மனிதர்களை ஆராய்ந்து அவர்களுக்கான திறன்விருத்தி அல்லது மனிதவள மேம்பாடு சம்பந்தமான பயிற்சித் திட்டங்களை சர்வதேச தரத்திற்கான பயிற்சிகளை வழங்குவதில் பாரிய சிக்கல்கள் இருக்கின்றன. அதே போல பாடசாலைகளிலும் ஏனைய தளங்களிலும் தொழில் வழிகாட்டல் செயன்முறையை முறையாக மேற்கொள்வதற்கான உரிய கால அவகாசம் வழங்கப்படாமை மாணவர்களும் இளைஞர்களும் சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொள்வதில் பாரிய சிக்கல்கள் காணப்படுகின்றன. தனிநபரின் பண்புகளைக் கண்டறிந்து அதனை பொருத்தமான தொழில் பாதையுடன் இணைப்பதற்கான வழிகள் மாணவராக இருந்தாலும் சரி தொழில் முயற்சிகளில் ஈடுபடுவர்களாக இருந்தாலும் சரி ஒருவருக்கு தனிநபர் ஆய்வு முக்கியமான ஒன்றாக இருக்கின்றது.



அருளம்பலம் கருணாகரன். உள ஆற்றுப்படுத்துனர்.




தன்னைத்தானே ஆய்வு செய்து அவர்களுடைய பலம் பலவீனங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி அவர்களுக்கு பொருத்தமான தொழிற் பாதையுடன் இணைப்பு செய்வதன் மூலம் வெற்றிகரமான பாதையை அமைத்துக் கொள்ள முடியும். இதற்காகவும் பல்வேறுபட்ட நுட்பமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

**இலங்கையில் கல்வி முயற்சிகளைவிட தொழில் வழிகாட்டலுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கிறதா?**

இல்லை என்றே கூறவேண்டும். கல்வி முயற்சிகளுக்கே அதிகமான கரிசனைகள் காட்டப்பட்டு வருகின்றன. மேலதிகாரிகள் ஆசிரியர்களிடம் மாணவர்களின் மதிப்பெண்களில் எத்தனை வீதத்தில் அடைவுமட்டம் இருக்கின்றது என்பதையே பார்க்கிறார்கள். இது தொழில் வழிகாட்டுதலில் அதிக முக்கியத்துவம் காட்டப்படாமைக்கு ஒரு காரணமாக அமைகிறது. தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளுக்கான ஆசிரியர்கள் எல்லாப் பாடசாலைகளிலும் இருப்பதில்லை. நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கும் சில பாடசாலைகளில் அதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப் படாமல் இருக்கின்றன.

தொழில் வழிகாட்டல் பாடசாலைகளில் கட்டாயமானதாகும். இலங்கையில் பாடசாலை மாணவர்களுக்கு தரம் 6இல் இருந்து தொழில் வழிகாட்டல் செயன்முறை ஆரம்பிக்கப்பட வேண்டுமென இலங்கை கல்வி அமைச்சினுடைய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. 3 அடிப் படைகளில் இந்த பாடசாலையில் தொழில் வழிகாட்டல் செயல்முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதில் முதலாவது தொழில் விழிப்புணர்வு செயற்பாடு (Career Awareness) இரண்டாவது தொழில் ஆய்வு செயற்பாடுகள் (Career Exploration), மூன்றாவது செயற்பாடு தொழில் திட்டம் (Career Development Plan).

தரம் ஆறிலிருந்து ஒன்பது வரையான மாணவர்களுக்கு தொழில் விழிப்புணர்வு செயற்பாடு , ஒன்பதிலிருந்து 10ற்கு செல்லுகின்ற போது விருப்ப பாடத் தெரிவுக்காக Multiple Intelligence Test என்று அழைக்கப்படுகின்ற உளவியல் சார்ந்த ஒரு விஞ்ஞானபூர்வமான ஆய்வுப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அதன்படி அவர்களுடைய விருப்பங்கள், இயல்புகள் ஆளுமைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அந்த பாடத்தில் உள்ள பண்புகளுக்கும் குறித்த மாணவருடைய பண்புகளுக்கும் ஒத்திசைவான பாடத்தெரிவுகள் இடம்பெற வேண்டும்.

ஒரு சில பாடசாலைகளில் இது நடைபெற்றாலும் பல பாடசாலைகளில் நடைபெறுவதில்லை. காரணம் என்னவென்றால் அதற்கான பயிற்சி அளிக்கப்பட்டவர்கள் இல்லாமை ஆகும். அதேபோல் தரம் 10 மற்றும் 11 மாணவர்களுக்கு தொழிலாய்வு தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடு இடம்பெற வேண்டும். இந்த நேரத்தில் தொழில் துறைகளுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று களப்பயணங்களும் இடம் பெற வேண்டும்.

அடுத்து க.பொ.த சாதாரணதரப் பரீட்சை (O/L) எழுதியதன் பின்னர் உயர்தரம் (A/L) படிப்பதற்கு முன்னர் தொழில் திறவுகோலை வைத்து (Career Key/ Psychometric Test) அதற்கூடாக அந்த மாணவனைப் பகுப்பாய்வு செய்து அந்த மாணவனுக்கான தொழில் திட்டம் (Career Development Plan) ஒன்று அமைக்கப்பட வேண்டும். அந்தத் தொழில் திட்டத்தின் அடிப்படையில் தான் அந்த மாணவனுக்குப் பொருத்தமான பல்கலைக்கழகப் பாடத்தெரிவு, வேலை வாய்ப்புகள் தொடர்பான விடயங்கள் அமைந்திருக்கும். அவற்றுடன் சேர்ந்து தொழிற்கல்வி தொடர்பான வழிகாட்டுதலும் மாணவர்களுக்கு செய்யப்பட வேண்டும். இந்த முறையில் தான் பாடசாலைக் கல்வித் திட்டம் மாணவர்களை சரியான முறையில் வழிநடத்த வேண்டும்.

இதைத்தாண்டி தொழிற்கல்வி அதாவது 13 வருடங்கள் உத்தரவாதமளிக்கப்பட்ட தனியான ஒரு கருத்திட்டமூடாக அவை வடிவமைக்கப் பட்டிருக்கின்றது. (13 Years Guaranteed Education Programme). இதன் மூலம் O/L இல் சித்தியடையாத மாணவர்கள் கூட பட்டதாரியாகலாம் அல்லது ஒரு தொழில் வாண்மைத்துவமிக்க NVQ தர தொழில் சான்றிதழை பெற்றுக் கொள்ள முடியும். அந்த NVQ சான்றிதழை பெற்றுக்கொண்ட ஒரு மாணவி/மாணவன் இலங்கையில் மட்டுமல்லாமல் சர்வதேச ரீதியிலும் தான் கற்றுக்கொண்ட தொழில் வாண்மைத்துவப் பயிற்சிக்கு ஏற்றதான வேலையைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

ஆகவே, கல்வி என்பது அட்டவணையிலேயே சிக்கித் தவிக்கிற ஒரு செயன்முறை அல்ல. அது மாணவர்களின் வாழ்க்கை கனவுகளை வடிவமைக்கும் ஒரு கருவியாகவும் செயல்படுகிறது. சர்வதேச சான்றிதழ்களுடன் கூடிய உயர்தரமான கல்வி பயிற்சிகள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் இலங்கை மாணவர்களை உலகளாவிய சந்தை முன்னேற்றங்களில் போட்டிபுரியக் கூடியவர்களாக மாற்றுகிறது.

நாம் யாராவது தேர்வில் தோல்வியடைந்தால் அவர்களின் வாழ்க்கை அல்லது தொழில் பாதை முடிவுக்கு சென்று விடும் என்று எண்ண வேண்டியதில்லை. இது உண்மையல்ல. தேர்வில் தோல்வியடைந்தாலும் தனிநபரின் திறன்கள் மற்றும் ஆர்வங்களை அடிப்படையாகக் கொண்டு தொழில் வழிகாட்டல் மூலம் அவர்களுக்கு ஏற்ற தொழில் பாதையை தேர்ந்தெடுத்து அதில் வெற்றிபெற முடியும். ஒவ்வொருவருக்கும் தனித்துவமான திறன்கள் இருக்கின்றன.

அவற்றைச் சரியாகப் பயன்படுத்தினால் வாழ்க்கையில் முன்னேறலாம். கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் முயற்சிகளை அதிகரிக்க அரசு மற்றும் தனியார் துறைகளின் ஒத்துழைப்பு அவசியமாகிறது. சர்வதேச கல்வி தினமான இன்று நமது மாணவர்க ளின் திறமைகளை உலகளாவிய அளவிலும் உள்ளூர் வேலைவாய்ப்புக ளின் முன்னேற்றத்திலும் திறம்பட பயன்படுத்த நாம் அனைவரும் சிந்தித்து செயற்பட வேண்டும்.

## மூளாய் முருகன் கோவிலில் கதிர்காமக் கந்தவேற்பெருமானுக்கு விஷேட அபிஷேக - ஆராதனை!









கதிர்காமக் கந்தன் ஆலய கருவூலத்திற்கு பிரதிஷ்டை செய்வதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை (19) கட்டுநாயக்கா விமானம் மூலமாக வள்ளி தெய்வானை சமேத கந்தப்பெருமான் திருவுருவச்சிலை கொண்டுவரப்பட்டது.

1987ஆம் ஆண்டில் கட்டப்பட்டு பழமை மாறாது பேணப்படும் மூளாய் முருகன் ஆலயத்தில் விஷேட ஹோமமும் அபிஷேக ஆராதனைகளும் திங்கட்கிழமை (20) நடைபெற்ற பின் மாவை கந்தன் பிரதம குருக்களின் இல்லத்தில் விஷேட திரவிய ஹோமம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய இராஜ மண்டபத்திற்கு வள்ளி தெய்வானை சமேத கந்தப் பெருமான் எழுந்தருளினார்.



# உயிர்த்த ஞாயிறு அனர்த்தம்

# மறைகரம் வெளிப்பட்டபோது

## “நாங்கள் வேறானவர்கள் அல்ல மண்ணின் வேரானவர்கள்..”



(நாச்சியாதீவு பர்வீன்)

முஸ்லிம் பெயர்தாங்கிய தீவிரவாத சிந்தனையுடைய சஹ்ரானும் அவனது கைக்கூலிகளும் மேற்கொண்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் தலைகுனிந்து அவமானப்பட்டதோடு அப்பாவி முஸ்லிம் சமூகம் குற்றவாளிக்கூண்டில் ஏற்றப்பட்டு கேள்விக்குட்படுத்தப்பட்டது. அப்பாவி முஸ்லிம்கள் சந்தேகக் கண் கொண்டே பார்க்கப்பட்டார்கள். முஸ்லிம் சமூகத்திற்கும் ஏனைய சமூகங்களுக்கும் இடையில் பெரும் இடைவெளியும் விரிசலும் இதன்மூலம் உருவாகியது.

முஸ்லிம் சமூகம் இரண்டாம் தரப்பிரஜைகளாக திட்டமிட்ட இனவாத சக்திகளினால் ஆக்கப்பட்டது. நின்றால், நடந்தால், பார்த்தால் எல்லாமே சந்தேகக் கண்கொண்டே நோக்கப்பட்டது. வேலைத்தளங்களிலும், வெளியிடங்களிலும் பெரும்பான்மை சகோதரர்களின் பார்வையை எதிர்நோக்க திராணியற்று, தயங்கிய வேதனை நிறைந்த நாட்களவை காலப்போக்கில் இந்த எண்ணம் தளர்வுற்றாலும் முற்றாக இல்லாமல் போகவில்லை.

இந்த பெரும்பான்மை எண்ணக்கருவை கேள்விக்குட்படுத்தும் ஒரு ஆவணமாக ராஜன் ஹூல் ஆங்கிலத்தில் எழுதிய Easter Sunday Attack (when The Mystery Hand Raised) என்ற நூல் அமைந்துள்ளது. இந்த ஆங்கில நூலை தமிழுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா ஃபோரத்தின் தலைவரும் மூத்த ஊடகவியலாளருமான என். எம். அமீன். “உயிர்த்த ஞாயிறு அனர்த்தம்” (மறைகரம் வெளிப்பட்டபோது) எனும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார்.

“இறுதிக்கட்ட யுத்தம் முடிவுற்று பத்து வருடங்கள் கழிந்த போதும் முரண்பாடுகளற்ற சுதந்திர இலங்கை ஒன்றை உருவாக்குவதற்காக எமது நிறுவனங்களை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு பதிலாக பழமை மிகு இனவாத மதவாத கருத்துக்கள் இன்றும் அவ்வாறு இருந்து வருகிறது. நாம் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கு தவறியுள்ளோம்”

சட்டத்தின் ஆட்சிக்கு அப்பால் கொள்கையும் பேராசையும் செயற்பட்ட போது... என்று ஆரம்பிக்கும் முதலாவது பத்தியிலே ராஜன் ஹூல் மிகத் தெளிவாக


> **இனக்குழுக்கள் அனைத்தும் அணைந்தும் இணைந்தும் செல்லும் வகையில் சமூக ரீதியாக கட்டமைக்கப்பட வேண்டும். பாரிய தேசிய சட்டகமொன்றில் அவை பொருத்தப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டு வேற்றுமையிலும் ஒற்றுமை காண்பதுவே சாலச் சிறந்தது.**
>
> – ரவூப் ஹக்கீம்


நடுநிலையான பார்வையோடு இந்த விடயத்தை ஆராய்ந்து இருப்பதை அவரது இந்த வெளிப்படையான கருத்தின் மூலம் அவதானிக்க முடிகிறது.

காலத்துக்கு காலம் அவ்வப்போது சிறுபான்மை முஸ்லிம்கள் மீது கட்டமைக்கப்பட்ட இனவாத செயற்பாடுகளை அவர் மிகத் தெளிவாக இந்த புத்தகத்தின் மூலம் தெளிவுபடுத்தி உள்ளார்.

சஹ்ரான் என்னும் தீவிரவாதி தொடர்பில் சாதாரண முஸ்லிம் மக்கள் இலங்கையில் அறிந்திராத பல விடயங்களை இவரது ஆய்வு தெளிவுபடுத்தி நிற்கின்றது. சஹ்ரானின் பிறப்பு, வளர்ச்சி, இயக்க ரீதியான செயல்பாடுகள், தீவிரவாதத்தின் மீதான ஈடுபாடு என்பவற்றை மிகத் தெளிவாகவும் ஆழமாகவும் ராஜன் ஹூல் இங்கே தனது ஆய்வின் மூலம் வெளிப்படுத்தி இருக்கிறார். ராஜன் ஹூலின் இந் நூலானது அந்தக் காலகட்டத்தில் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் மீதும் இணைந்தே உருவாக்கப்பட்ட அவப்பெயரை கேள்விக்குறப்படுத்தியது எனலாம்.

மிக நீண்ட காலமாக ஊடகத்துறையில் இருக்கின்ற என்.எம். அமீன் ஊடகத்துறையில் தான் பெற்ற அனுபவத்தையும் தனது தமிழ் மொழி ஆற்றலையும் இந்த மொழிபெயர்ப்பை செய்வதற்கு செவ்வனே பயன்படுத்தியிருக்கிறார். சாதாரண ஒரு பாமரனும் இந்த புத்தகத்தை வாசிப்பதன் மூலம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் இருந்தவர்கள் அதன் முரண்பாட்டின் தோற்றுவாய் சஹ்ரான் பற்றிய மேலதிக விபரம் போன்றவற்றை மிகத் தெளிவாக அறிந்து கொள்ளக் கூடிய வகையில் இலகு மொழிநடையில் இந்த நூல் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. துல்லியமான இந்த மொழிபெயர்ப்பைச் செய்த சிரேஷ்ட பத்திரிகையாளர் என்.எம். அமீன் அவர்கள் பாராட்டுக்குரியவரே!




“இறுதிக்கட்ட யுத்தம் முடிவுற்று பத்து வருடங்கள் கழிந்த போதும் முரண்பாடுகளற்ற சுதந்திர இலங்கை ஒன்றை உருவாக்குவதற்காக எமது நிறுவனங்களை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு பதிலாக பழமை மிகு இனவாத மதவாத கருத்துக்கள் இன்றும் அவ்வாறு இருந்து வருகிறது நாம் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கு தவறியுள்ளோம்”

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னரான முஸ்லிம் சமூகம் எதிர்கொண்ட சவால்களை, அவமானங்களை, எதிர்ப்புகளை அடையாளப்படுத்தி அச்சவால்கள் மூலம் பெற்றுக்கொண்ட அனுபவத்தினையும், முஸ்லிம் சமூகத்தை இந்த அவப்பெயரிலிருந்து பாதுகாப்பதில் அரசியல்வாதியாக மேற்கொண்ட முன்னெடுப்புகளையும் ஆவணப்படுத்தும் முகமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் எழுதிய “நாங்கள் வேறானவர்கள் அல்ல மண்ணின் வேரானவர்கள்” என்ற நூலும் கருத்தில் கொள்ளத்தக்கது...

இந்த நூல் பற்றியும் இங்கே நினைவுகூர வேண்டியுள்ளது. முஸ்லிம் சமூகத்தின் மீதான அழுத்தங்களும் நீதயற்ற செயற்பாடுகளும் வேண்டுமென்றே கட்டமைக்கப்பட்ட அபாண்டங்களும் என்று வெவ்வேறு தலைப்புகள் ஊடாக தனது அனுபவத்தை ஆழமாக பதிந்திருக்கின்றார் ரவூப் ஹக்கீம்.

கொடூரமான உயிர்த்த ஞாயிறு தாக்குதலானது வரலாற்றில் முஸ்லிம்களாகிய எங்களை இக்கட்டுக்குள் தள்ளி இருப்பதை வருத்தத்துடன் ஏற்றுக்கொள்ள நிர்பந்திக்கப்பட்டுள்ளோம். எங்கு எவ்வாறு எப்போது நிலைமைகள் மோசமடைந்தன என்பதைப் பற்றி விமர்சன ரீதியாக பின்னோக்கிப் பார்ப்பது நல்லது. எங்களது சொந்த வாழ்விலும் நடவடிக்கைகளிலும் ஒத்து வராதவற்றை கண்டறிந்து துண்டு துண்டான அவற்றை ஒன்று சேர்த்து ஒரு சட்டகத்தில் பொருத்திப் பார்ப்பதே சாலச் சிறந்ததாகும். அப்பொழுதுதான் இலங்கையின் பன்மைத்துவ சமூகத்தில் ஓர் அழகிய வரைவாக அது இடம்பெற வாய்ப்புள்ளது. பாலைவனப் புழுதி புயலில் தீக்கோழி தனது தலையை புதைத்துக் கொள்வது போல எங்களது பல்லின பல மத சமூக அமைப்பில் வழமையான பாரம்பரிய உண்மைகளை இலகுவில் மறைத்து விட முடியாது என்கிறார் ஹக்கீம். பழுத்த அனுபவம் வாய்ந்த வாசகனும், எழுத்தாளனும், ஆய்வாளனும், அரசியல்வாதியுமாக தன்னை இந்த நூலின் மூலம் நிரூபித்துள்ளார் நூலாசிரியர் சட்டமுதுமாணி ரவூப் ஹக்கீம்.

- சமாதானத்திற்கான ஆர்வமும், அதிருப்தி அளிக்கும் தலைவிதியும்.
- அறியப்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்பான தெளிவுபடுத்தல்: முஸ்லிம் குடித்தொகை பற்றி சிங்களவர்களுக்குள்ள பயப்பிராந்தி.
- முஸ்லிம்களிடமிருந்து சிங்கள கலாச்சாரத்திற்கு வரக்கூடிய அச்சுறுத்தல்கள் குறித்த எண்ணங்கள்
- பயங்கரவாதம் குறித்த மாயையை களைதல். இனத்துவ சமய தீவிரவாதமா? அல்லது பொருளாதார மேலாதிக்க போட்டியா?

இப்படி பல்வேறு தலைப்புகளில் தனது அனுபவத்தையும் ஆய்வையும் ஒன்று திரட்டி மிக அழகிய முறையில் இந்த புத்தகத்தை தந்திருக்கின்றார் எழுத்தாளர்.

இனக்குழுக்கள் அனைத்தும் அணைந்தும் இணைந்தும் செல்லும் வகையில் சமூக ரீதியாக கட்டமைக்கப்பட வேண்டும். பாரிய தேசிய சட்டகமொன்றில் அவை பொருத்தப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டு வேற்றுமையிலும் ஒற்றுமை காண்பதுவே சாலச் சிறந்தது. இந்தச் சொற்கள் கைதேர்ந்த ஒரு எழுத்தாளனின் கைகளிலே சிக்கியதால் அற்புதமான சிற்பம் போல் ஆகிப்போயுள்ளது. வித்துவச்செருக்கற்ற மொழிநடையில் தனக்கே உரிய மொழி வான்மையை இலாவகமாக பயன்படுத்தி வாசகனை வளைத்துப் போடும் வசீகரத்தை இந்நூல் செய்கிறது. ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் இந்த நாட்டில் எதனை எதிர்பார்க்கின்றது என்பதனை இந்த சமூகத்தின் குரலாக ஹக்கீம் இந் நூலின் மூலம் முன்வைத்துள்ளார்.

நம் முன்னே இருக்கின்ற பிரச்சினைகளைப் பற்றி பேசுவதோடு நாம் எதிர் நோக்குகின்ற

> **“இறுதிக்கட்ட யுத்தம் முடிவுற்று பத்து வருடங்கள் கழிந்த போதும் முரண்பாடுகளற்ற சுதந்திர இலங்கை ஒன்றை உருவாக்குவதற்காக எமது நிறுவனங்களை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு பதிலாக பழமை மிகு இனவாத மதவாத கருத்துக்கள் இன்றும் அவ்வாறு இருந்து வருகிறது நாம் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கு தவறியுள்ளோம்”**
>
> என்.எம். அமீன்

பிரச்சினைகளைப் பற்றியும் மிக ஆழமாக பேசுகின்றது இந்நூல். பல்லினச் சமூக கட்டமைப்புக்குள் சிறுபான்மையாக வாழுகின்ற ஒரு சமூகக் குழுமத்தின் எண்ணங்களையும் எதிர்பார்ப்புகளையும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படுகின்ற தடங்கல்களையும் தெளிவுபடுத்துகிறது இந்நூல்.

உயிர்த்த ஞாயிறு தீவிரவாத சம்பவத்தின் பின் உருக்குலைந்து போயிருந்த எமது சமூகக் கட்டமைப்பை மீண்டும் அந்த பழைய நிலைக்கே கொண்டு வருவதற்கு ரவூப் ஹக்கீம் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் மிகவும் காத்திரமாக முன்னெடுப்புகளை மேற்கொண்டவர் என்பது நடுநிலையான அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும். அவ்வாறே கொவிட்- 19 வைரஸின் தாக்கத்தின் மூலம் இறந்த முஸ்லிம் உடல்களை எரிக்க வேண்டாம் என்று உலக சுகாதார நிறுவனங்களே தெரிவித்த போதும் அவற்றைக் கருத்தில் கொள்ளாது இலங்கையில் இறக்கின்ற முஸ்லிம் உடல்களை தகனம் செய்வதற்கு அன்றைய இலங்கை அரசு வழங்கிய அந்த கசப்பான அனுபவத்தை எந்த ஒரு முஸ்லிமாலும் மறக்க முடியாது. அதன் பின்னணியில் இருந்த இனவாத போக்கினையும் மெல்லச் சுட்டிக் காட்டுகிறது இந்த புத்தகம்.

உயிர்த்த ஞாயிறு அனர்த்தம் (மறைகரம் வெளிப்பட்டபோது) மற்றும் “நாங்கள் வேறானவர்கள் அல்ல மண்ணின் வேரானவர்கள்” இந்த இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வும் இம்மாதம் முப்பதாம் திகதி (30/01/2025) வியாழக்கிழமை சரியாக மாலை 5 மணிக்கு இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் இடம்பெற உள்ளன.

வேண்டுமென்றே புனையப்பட்ட பொய்களால் புண்படுத்தப்பட்ட முஸ்லிம் சமூகத்திற்கு ஓரளவேனும் ஒத்தடம் கொடுக்கும் ஔடதமாக இவ்விரு நூல்களும் அமையும் என்று நம்புவோம். ■




## நேற்று முளைத்த காளான் அல்ல தி.மு.க;

# முதலமைச்சர் பதவி தொடர்பில் ஸ்டாலின் ஆவேசம்



சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் நாம் தமிழர் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் 8 பேர் உட்பட 2,000 பேரும் அத்துடன் ஏனைய கட்சிகளைச் சேர்ந்த 1,000 பேர் என மொத்தம் 3,000 பேர் முதலமைச்சரும், தி.மு.க தலைவருமான மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். நாம் தமிழர் கட்சியில் இருந்து விலகியவர்கள், தி.மு.க.வில் இணையும் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நினைவுப் பரிசாக பெரியார் சிலையையும் அவர்கள் வழங்கிவைத்தனர்.

இந்நிலையில் அங்கு ஊடகவியலாளர்கள் மத்தியில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் கூறியதாவது:

தி.மு.க.வில் இணைவதற்காக ஆயிரக்கணக்கானோர் காத்திருக்கின்றனர். தி.மு.க என்பது நேற்று முளைத்த காளான் அல்ல; தி.மு.க.வை பேரறிஞர் அண்ணா உருவாக்கிய போது, இக்கழகம் ஆட்சிக்கானது மட்டுமல்ல, மக்களுக்கு பணியாற்ற வேண்டும், ஏழை, எளிய மற்றும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட , ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தொண்டாற்ற வேண்டும், என்ற நோக்கத்துடனேயே இவ்வியக்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இன்று சிலர் கட்சி ஆரம்பித்த உடனேயே ஆட்சிக்கு வருவோம் என்று கூறும் நிலை நாட்டில் இருந்து கொண்டிருக்கிறது. நாங்கள் தான் அடுத்த ஆட்சி, நாங்கள்தான் அடுத்த முதலமைச்சர் என சிலர் சுற்றிக்கொண்டும் பிதற்றிக் கொண்டும் அலைகின்றனர். அவர் யார், எப்படிப்பட்டவர், எந்தக் கட்சித் தலைவர் என்றெல்லாம் சொல்ல விரும்பவில்லை நான் கூறவிரும்பவில்லை என்றார்.

## அன்றிரவு நடந்தது என்ன?

# தாக்குதல் சம்பவம் குறித்து சயீப் அலி கான் வாக்குமூலம்

சயீப் அலி கான் வீட்டில் கடந்த வாரம் மர்ம நபர் ஒருவர் தாக்குதல் நடத்திய நிலையில், அது தொடர்பில் தனக்கு என்ன நடந்தது என்பது குறித்து அவர் பொலிஸாரிடம் அளித்த வாக்குமூலம் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 16ஆம் திகதி மும்பை பந்த்ரா பகுதியில் உள்ள தனது வீட்டில் சயீப் அலிகான் இருந்தபோது, அதிகாலை நேரத்தில் வீட்டுக்குள் நுழைந்த மர்ம நபர் அவரை கத்தியால் பலமுறை குத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்ற சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

வாக்கு மூலம்:

இந்நிலையில், சயீப் அலி கான் சம்பவம் குறித்து பொலிஸாரிடம் அளித்த வாக்குமூலத்தில், “இந்தச் சம்பவம் நடந்தபோது நானும், என் மனைவி கரீனாவும் படுக்கை அறையில் இருந்தோம். அப்போது என் வீட்டில் உதவியாளராக பணி புரிந்துவரும் எலியாமா பிலிப்பின் அலறல் சத்தம் கேட்டது. அதாவது, எலியாமா பிலிப் என்பவரே என்னுடைய இளைய மகனான ஜஹாங்கீரை பார்த்துக் கொள்கிறார். இதனால் பொதுவாகவே ஜெஹாங்கீரின் அறையில் தான் எலியாமா பிலிப் தூங்குவது வழக்கம். அன்று எலியாமா பிலிப்பின் சத்தம் கேட்டவுடன் நான் பரபரப்பாகி அந்த அறையை நோக்கி ஓடினேன். அப்போது ஜெஹாங்கீர் அழுது கொண்டு இருந்தான், நான் அந்த மர்ம நபரைப் பிடிக்க முயன்றேன்.

எப்படியோ அந்த மர்ம நபரை, பிடித்து அறையில் அடைத்தோம். அவ்வேளையில் அந்த மர்ம நபர் எனது முதுகு, கழுத்து மற்றும் கைகளில் பலமுறை குத்தினான். பின்னர் அந்த நபர் தப்பித்துவிட்டான். எலியாமா தான் முதலில் அந்த மர்ம நபரைப் பார்த்துள்ளார்.

ஜெஹாங்கீரின் அறையில் புகுந்த அந்த நபர் ஒரு கோடி ரூபாயைக் கேட்டு மிரட்டியதாக எலியாமா கூறினார். இந்த மோதலில் வீட்டு உதவியாளர் உட்பட எலியாமாவுக்கும் லேசான காயம் ஏற்பட்டது. இதையடுத்து என்னை உடனடியாக லீலாவதி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர்” என்றார்.



# நேதாஜியின் வாழ்க்கையே சிறந்த உத்வேகம்



சுதந்திர போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பிறந்த தினம் பராக்கிரம தினமாக ஒன்றிய அரசால் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி நேதாஜி பிறந்த இடமான ஒடிசா, கட்டாக்கில் வியாழக்கிழமை விழா நடைபெற்றது. இதில், காணொளி காட்சி வாயிலாக பிரதமர் மோடி உரையாற்றுகையில், நேதாஜியின் பிறந்த நாளில் முழு தேசமும் அவரை மரியாதையுடன் நினைவுகூர்கிறது. நேதாஜியின் வாழ்க்கை மக்களுக்கு தொடர்ச்சியான உத்வேகத்தை அளிக்கிறது.

ஏனெனில் அவர் சொகுசு வாழ்க்கையை தவிர்த்து விட்டு நாட்டின் சுதந்திரத்திற்காக போராடினார். அதே போல் “வளர்ச்சியடைந்த பாரதத்தை கட்டி எழுப்ப நாம் அனைவரும் சொகுசு வாழ்க்கையிலிந்து வெளியே வந்து உலக அளவில் நம்மை சிறந்தவர்களாக மாற்ற வேண்டும். அதேபோன்று சிறந்ததை தேர்ந்தெடுத்து செயல்திறனில் கவனம் செலுத்த வேண்டும். இந்தியாவின் ஒற்றுமைக்கு நேதாஜியின் வாழ்க்கையில் இருந்து உத்வேகம் பெற வேண்டும்” என்றார்.

# ஷேவாக் - ஆர்த்தி தம்பதி விவாகரத்து?

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் வீரேந்திர ஷேவாக்கும் அவரது மனைவியும் விவாகரத்து பெறவுள்ளதாக தகவல்கள் பரவி வருகின்றன. இந்திய கிரிக்கெட் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கி தனது அதிரடி துடுப்பாட்டத்தினால் உலகம் முழுவதும் புகழ்பெற்றவர் ஷேவாக். இவர் ஆர்த்தி என்பவரை 2004 ஆம் ஆண்டு திருமணம் செய்தார். இந்த நிலையில், சமீபகாலமாக ஷேவாக் அவரது சமூக வலைதளங்களில் வெளியிடும் புகைப்படங்களில் அவரது மனைவி இல்லாதது குறித்து பல்வேறு யூகங்களை இரசிகர்கள் எழுப்பி வந்தனர்.

இதனிடையே, ஷேவாக் மற்றும் ஆர்த்தி ஆகிய இருவரும் தங்களின் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஒருவரைஒருவர் அன்ஃ பாலோ செய்துள்ளனர். இந்நிலையிலேயே இருவரும் விவாகரத்து செய்யவுள்ளதாக இணையதளம் முழுவதும் காட்டுத் தீயாய் செய்தி பரவி வருகின்றது. ஆனால், இந்த செய்திகள் குறித்து எவ்வித அதிகாரப்பூர்வ அறிவிப்பும் இருவர் தரப்பில் இருந்து இதுவரை வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# குழந்தைகள் மூலம் வருமானத்தை தேடாதே..

**திவ்யா கோவிந்தன்**

வணிகங்கள் தங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை சந்தைப்படுத்துவதற்கு விளம்பரம் ஒரு சக்திவாய்ந்த கருவியாக இருந்து வருகிறது. இருப்பினும், இது குழந்தைகளை உள்ளடக்கும் போது, நெறிமுறை எல்லைகள் மங்கலாகி, அவர்களின் சுரண்டல் மற்றும் நல்வாழ்வு பற்றிய தீவிர கவலைகளை எழுப்புகிறது. விளம்பரங்களில் குழந்தைகளைப் பயன்படுத்துவதைத் தடைசெய்வதற்கான அரசாங்கத்தின் சமீபத்திய முடிவு, அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் சாத்தியமான தீங்குகளிலிருந்து அவர்களைப் தப்புவிப்பதற்குமான பாராட்டத்தக்க நடவடிக்கையாகும். இந்தக் கட்டுரை, விளம்பரங்களில் குழந்தைகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் எதிர்மறையான தாக்கங்களை ஆராய்வதோடு, அத்தகைய தடையை அமுல்படுத்து வதன் நன்மைகளையும் எடுத்துக்கா ட்டுகிறது. விளம்பரங்களில் குழந்தைகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் பற்றி ஆராய்ந்து பார்ப்போமானால் அவை பெரும்பாலும் குழந்தைகளை இலட்சியப்படுத்தப்பட்ட அல்லது யதார்த்தமற்ற காட்சிகளில் சித்தரிக்கிறது. பார்வையாளர்களின் உணர்ச்சிகளை இழுக்க அவர்களின் அப்பாவித்தனத்தைப் பயன்படுத்துகிறது. இருப்பினும், பளபளப்பான முகப்பின் பின்னால், இந்த குழந்தைகள் நீண்ட மணிநேர வேலைக்கு உட்படுத்தப்படுகிறார்கள், இது சுரண்டலுக்குச் சமம், ஏனெனில் அவர்கள் மிகவும் இளமையாக இருப்பதால் தகவலறிந்து ஒப்புதல் அளிக்கவோ அல்லது அவர்களின் பங்கேற்பின் விளைவுகளைப் புரிந்துகொள்ளவோ முடியாது.

அதேபோல விளம்பரத் தொழில் குழந்தைகளை தேவையற்ற அழுத்தம் மற்றும் அதீத கற்பனை உலகிற்குள் ஆட்படுத்தும். எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி அவற்றை பூர்த்தி செய்ய வேண்டிய அவசியம், கவலை, குறைந்த சுயமரியாதை அல்லது சிதைந்த சுயபிம்பத்திற்கு வழிவகுக்கும். உதாரணமாக, குழந்தைகள் தங்கள் தோற்றம் அல்லது நடத்தைகளால் உந்தப்படும் பாத்திரங்களில் நடிக்கிறார்கள், அக் கதாப்பாத்திரங்கள் யதார்த்தமற்ற தரநிலைகளை உள்வாங்கி, அவர்களின் உணர்ச்சி வளர்ச்சியை பாதிக்கும். விளம்பர நடவடிக்கைகளில் ஈடுபடுவது குழந்தையின் கல்வியை கணிசமாக சீர்குலைக்கும். ஒத்திகைகள், படப்பிடிப்புகள் மற்றும் விளம்பர நடவடிக்கைகளில் செலவிடும் நேரம் பெரும்பாலும் பாடசாலை அட்டவணைகளுடன் முரண்படுகிறது, அவர்களின் கல்வி முன்னேற்றத்தை சமரசம் செய்யத்தடுக்கிறது. இது ஒரு வளர்ப்பு சூழலில் கற்றல் மற்றும் வளரும் மாணவர்களின் முதன்மைப் பொறுப்பிலிருந்து அவர்களைத் திசைதிருப்புகிறது. நுகர்வோர் பழக்கத்தை இயல்பாக்குகின்றது. விளம்பரங்களில் குழந்தைகள் பெரும்பாலும் நுகர்வோர்களாக சித்தரிக்கப்படுகிறார்கள், பொருள் உடைமைகளை விரும்புவதற்கு அவர்களின் சகாக்களை ஊக்குவிக்கிறார்கள். இந்த நடைமுறையானது நுகர்வோர் வாதத்தை இயல்பாக்குகிறது மற்றும் சிறு வயதிலிருந்தே பொருள்முதல்வாத விழுமியங்களை உண்டாக்குகிறது. கூடுதலாக, செயற்கையாக உருவாக்கப்பட்ட இந்த தரநிலைகளை சந்திக்க ஏனைய குழந்தைகள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் மீது தேவையற்ற அழுத்தத்தை பிரயோகிக்கிறது. இதனால் தனிமனித, குடும்ப கவலைகள் ஏற்படுகின்றன. விளம்பரங்களில் குழந்தைகளைப் பயன்படுத்துவது பொது ஆய்வுக்கு அவர்களை உட்படுத்துகிறது, இது தனியுரிமை மீறல்களுக்கு வழிவகுக்கும். ஒரு குழந்தையின் உருவம் அல்லது அடையாளம் பொதுத்தளத்தில் வெளியிடப்பட்டவுடன், அது எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது? அல்லது தவறாகப் பயன்படுத்தப்படும் தன்மையை கட்டுப்படுத்துவது கடினமாகி, அவர்கள் சுரண்டல் அல்லது துன்புறுத்தலுக்கு ஆளாக நேரிடும். இவ்வாறான பாதகமான விளைவுகள் காணப்படுகின்ற போதிலும் குழந்தைகள் மூலமாக வர்த்தகர்கள் பெருமளவிலான வருமானத்தையே முதன்மை நோக்கமாக கொண்டு செயலாற்றுகின்றனர்.

விளம்பரங்களில் குழந்தைகளைப் பயன்படுத்துவதைத் தடை செய்வதன் நன்மைகளை பற்றி பேசுவோமாக இருந்தால் குழந்தைப் பருவத்தைக் காப்பது முக்கியமானது. அது உணர்ச்சி, அறிவுசார் மற்றும் சமூக வளர்ச்சிக்கான ஒரு முக்கியமான கட்டமாகும். விளம்பரங்களில் குழந்தைகளைப் பயன்படுத்துவதைத் தடை செய்வதன் மூலம், அவர்களின் அப்பாவித்தனத்தைப் பாதுகாக்க அரசாங்கம் உதவுகிறது மற்றும் அவர்கள் மனஅழுத்தமில்லாத சூழலில் வளருவதை உறுதி செய்கிறது. இந்த நடவடிக்கை வணிக ஆதாயங்களை விட அவர்களின் முழுமையான நல்வாழ்வை முதன்மைப்படுத்துகிறது.

கல்வியை ஊக்குவித்தல் மேம்படுத்தபடுகின்றது. விளம்பரத் துறையில் இருந்து குழந்தைகளை அகற்றுவது அவர்கள் கவனச்சிதறல் இல்லாமல் கல்வியில் நடவடிக்கையில் ஈடுபடுவதை உறுதி செய்கிறது. வணிகமயமாக்கப்பட்ட வாழ்க்கை முறையின் கோரிக்கைகளிலிருந்து விடுபட்டு, அவர்களின் எதிர்காலத்திற்கான வலுவான அடித்தளத்தை உருவாக்க இது உதவும். குழந்தை விளம்பரங்கள் மீதான தடை, சுரண்டலின் அபாயத்தைக் கணிசமாகக் குறைக்கிறது. புகழ் அல்லது நிதி ஆதாயத்தின் ஈர்ப்பு இல்லாமல், அவர்கள் தங்கள் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாத்து, முன்கூட்டியே வெளிச்சத்திற்கு தள்ளப்படுகின்றனர். அதுமட்டுமன்றி நெறிமுறை விளம்பர நடைமுறைகளை ஊக்குப்பதுடன் ஆக்கப்பூர்வமான மற்றும் நெறிமுறை மாற்றுகளை ஆராய நிறுவனங்களை கட்டாயப்படுத்துகிறது.

விளம்பரதாரர்கள் தயாரிப்புகளை விற்க குழந்தைகளின் முதலீட்டை நம்புவதை விட வயதுவந்த நுகர்வோர் மற்றும் புதுமையான உத்திகள் மீது கவனம் செலுத்தலாம். இந்த மாற்றம் மிகவும் பொறுப்பான விளம்பர நிலப்பரப்பை வளர்க்கும். வணிக அழுத்தங்களிலிருந்து பாதுகாப்பு கிடைக்கிறது.

குழந்தைகள் குறிப்பாக ஈர்க்கப்படக்கூடியவர்கள் மற்றும் வணிக தாக்கங்களுக்கு ஆளாக்கப்படக் கூடியவர்கள். விளம்பரங்களிலிருந்து அவர்களை விடுவிப்பதன் மூலம், சமூகம் அவர்களை நுகர்வோர் அழுத்தத்திலிருந்து பாதுகாக்க உதவுகிறது. சந்தை சக்திகளால் கட்டளையிடப்படாத மதிப்புகளை உருவாக்க அனுமதிக்கிறது. விளம்பரங்கள் சார் உலகளாவிய தரநிலையை நிர்ணயித்தல். அதாவது அரசாங்கம் தலைமையிலான குழந்தை விளம்பரத்தடை, ஏனைய நாடுகளுக்கு ஒரு முன்னுதாரணமாக அமைகிறது. இது குழந்தைகள் நலனுக்கான அர்ப்பணிப்பைக் குறிப்பதுடன் வணிகத் தொழில் சுரண்டல்களிலுருந்து மீண்டெழும் இளம் சமுதாயத் தலைவர்களை உருவாக்குகின்றது.



> விளம்பரங்களில் குழந்தைகளைப் பயன்படுத்துவது தினியுரிமை மீறல்களுக்கு வழிவகுக்கும்...

> விளம்பரங்களில் இருந்து குழந்தைகளை விடுவிப்பதன் மூலம், சமூகம் அவர்களை நுகர்வோர் அழுத்தத்திலிருந்து பாதுகாக்க உதவுகிறது. .

# இரு தலிபான் தலைவர்களை கைது செய்ய சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் வேண்டுகோள்

உலக வலம்
WORLD NEWS
பா. கிருஷிகா

பெண்கள் மற்றும் சிறுமிகளை துன்புறுத்தியதாக குற்றம் சாட்டி, ஆப்கானிஸ்தானில்உள்ளஉச்சஆன்மீகத் தலைவர் ஹைபத்துல்லா அகுந்த்சாதா உட்பட இரண்டு தலிபான் தலைவர்களுக்கு பிடியாணை விண்ணப்பித்ததாக சர்வதேச குற்றவியல் நீதிமன்ற (ICC) வழக்கறிஞர் வியாழக்கிழமை தெரிவித்தார்.

தலைமை வழக்கறிஞர் கரீம் கான் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 2021 ஆம் ஆண்டு முதல் தலைமை நீதிபதியாக பணியாற்றிய அகுந்த்சாதா மற்றும் அப்துல் ஹக்கீம் ஹக்கானி ஆகியோர், “பாலின அடிப்படையில் துன்புறுத்தப்பட்ட பெண்களுக்கு எதிரான குற்றத்திற்கு குற்றவியல் பொறுப்பை ஏற்க வேண்டும்” என விசாரணையாளர்கள் நியாயமான காரணங்களைக் கண்டறிந்துள்ளனர்.

“ஆப்கானிஸ்தான் சிறுமிகள் மற்றும் பெண்களைத் துன்புறுத்துவதற்கு அவர்கள் குற்றவியல் பொறுப்பாளிகள் என்பதுடன் தலிபான் சிறுமிகள் மற்றும் பெண்களுடன் நட்புறவுடன் செயற்படுவதாக கருதும் நபர்கள்” என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. குறைந்தது ஒகஸ்ட் 15, 2021 தலிபான் படைகள் தலைநகர் காபூலைக் கைப்பற்றிய நாளிலிருந்து இன்று வரை ஆப்கானிஸ்தான் முழுவதும் அடக்குமுறைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என வழக்கறிஞர் தெரிவித்தார். 2021 இல் இஸ்லாமியக் குழு மீண்டும் ஆட்சிக்கு வந்ததில் இருந்து பாடசாலைக் கல்வி, வேலை மற்றும் அன்றாட வாழ்வில் பொதுச் சுதந்திரம் உள்ளிட்ட பெண்களின் உரிமைகளை அது கட்டுப்படுத்தியுள்ளது.

வழக்கறிஞரின் அறிக்கை குறித்து தலிபான் தலைவர்களால் உடனடி கருத்து எதுவும் வெளியிடப்படவில்லை ஆயினும் இது பெண்களின் உரிமை களைப் பாதுகாக்கும் குழுக்களால்



வரவேற்கப்பட்டது.

எந்த காலக்கெடுவும் இல்லாத வழக்கு விசாரணை கோரிக்கையை தீர்ப்பதற்கு ஐசிசியில் உள்ள மூன்று நீதிபதிகள் கொண்ட குழு இப்போது இருக்கும். இத்த கைய நடைமுறைகளைச் செயற்படுத்த சராசரியாக மூன்று மாதங்கள் ஆகும்.



# உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து வெளியேறும் அமெரிக்கா

## அடுத்த வருடம் முதல் நடைமுறை




இந்த வாரம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிடமிருந்து ஐ.நா. சபை முறையான கடிதத்தைப் பெற்றதை அடுத்து, 2026 ஜனவரி 22 ஆம் திகதி உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து (WHO) அமெரிக்கா அதிகாரப்பூர்வமாக விலகும் என ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது.

இது தொடர்பில் ஐ.நா.வின் துணை செய்தித் தொடர்பாளர் ஃபர்ஹான் ஹக் வியாழன் (24) அன்று தெரிவிக்கையில், ட்ரம்ப் ஜனவரி 20 ஆம் திகதி தனது முதல் நாள் பதவியில் உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து அமெரிக்காவை விலக்கிக் கொள்வதாகவும், அமைப்பின் எதிர்கால நிதியுதவிக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகவும் உறுதியளித்ததன் விளைவாக ஐ.நா. வின் தீர்மானம் அறிவிக்கப்பட்டுள்ளது. உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து வெளியேறுவது குறித்த அமெரிக்க கடிதத்தை இப்போது நாங்கள் பெற்றுள்ளோம். 2025 ஜனவரி 22 திகதியிடப்பட்ட இந்தக் கடிதம், நேற்றிலிருந்து (22) ஒரு வருடம் அதாவது எதிர்வரும் 2026 ஜனவரி 22 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் என தெரிவித்தார்.

இதனிடையே,உலக சுகாதார ஸ்தாபனத்தில் பணிபுரியும் அனைத்து அமெரிக்க அரசாங்க ஊழியர்களையும் வொஷிங்டன் திரும்ப அழைத்துள்ளதுடன் தொற்றுநோய்களைக் கையாள்வதில் உலக சுகாதார ஸ்தாபனம் தலைமையிலான உலகளாவிய ஒப்பந்த பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதை நிறுத்துமாறு அவர்களுக்கு உத்தரவிட்டுள்ளது. அமெரிக்கா உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து வெளியேறுவதால் அந்த அமைப்பு அதன் மிக முக்கியமான நிதி ஆதரவாளரை இழக்கும்.

2024 மற்றும் 2025 இற்கு இடைப்பட்ட காலத்தில் சுமார் 261 மில்லியன் டொலர்களாக இருந்த நிறுவனத்தின் நிதியுதவியில் சுமார் 18 சதவீதத்தை அமெரிக்கா வழங்குகிறது. உலக சுகாதார அமைப்பின் முக்கிய நன்கொடையாளரின் இழப்பு, காசநோய் முதல் எச்.ஐ.வி எய்ட்ஸ் மற்றும் உலகளாவிய தொற்றுநோய்கள் வரையிலான பெரிய நெருக்கடிகளை எதிர்கொள்ளும, உலகளாவிய சுகாதார நிறுவனத்தின் திறனை பாதிக்கும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

ட்ரம்ப் தனது முதல் பதவிக் காலத்தில் கொவிட்-19 தொற்றுநோயை உலக சுகாதார ஸ்தாபனம் தவறாகக் கையாண்டதாக குற்றம் சாட்டியிருந்தார். மேலும், 2020 ஜூலை மாதம் அமைப்பிலிருந்து விலகும் கோரிக்கையை அனுப்பியிருந்தார். 2020 ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் ஜோ பைடனிடம் தோற்றதால், அந்த முயற்சி தோற்கடிக்கப்பட்டது. இந்த நிலையில் 2025 ஜனவரி 20 ஆம் திகதி மீண்டும் ட்ரம்ப் பதவிக்கு வந்த நிலையில் உலக சுகாதார ஸ்தாபனத்திலிருந்து உடனடியாக வெளியேறும் உத்தரவினை வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# ஆர்ஜென்டினாவின் பொருளாதாரம் உயர்வு



ஆர்ஜென்டினாவின் பொருளாதாரம் அரை வருடத்தில் முதல் முறையாக வளர்ச்சியடைந்தது, நவம்பர் மாதத்தில் ஆண்டுக்கு ஆண்டு சராசரியாக 0.1% வளர்ச்சியைப் பதிவுசெய்தது, இது எதிர்பார்ப்புகளை முறியடித்தது என அதிகாரப்பூர்வ தகவல்கள் வியாழக்கிழமையன்று வெளியிடப்பட்டன.

ஆய்வு செய்த ஆய்வாளர்கள் தானியங்கள் நிறைந்த தென் அமெரிக்க நாட்டில் 0.6% பொருளாதார நலிவு நிலை ஏற்படுமென முன்னறிவித்தனர். பணவீக்கத்தைக் குறைத்து நிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட சுதந்திரவாத ஜனாதிபதி ஜேவியர் மிலியின் கடுமையான சிக்கன நடவடிக்கைகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஆர்ஜென்டினாவின் நலிந்த பொருளாதாரத்திற்கு சாத்தியமான திருப்பத்தை கொண்டுவந்துள்ளதாக தரவு சுட்டிக்காட்டியிருக்கிறது.

முந்தைய மாதத்தில் 0.6% வருடாந்த நலிவுநிலையுடன் ஒப்பிடப்படும் தரவு, திருத்தப்பட்ட தரவுகளின்படி, கடந்த ஆண்டு மே மாதத்தில் 1.4% வளர்ச்சிக்குப் பிறகு முதல் விரிவாக்கம் அடைந்தது. புள்ளிவிவர நிறுவனமான INDEC இன் தரவுகளின்படி, நவம்பர் மாத வளர்ச்சி முக்கியமாக மீன்பிடித் துறை மற்றும் நிதி இடைநிலைத் துறையால் உந்தப்பட்டதாகும் என தெரிவிக்கப்பட்டது.

புள்ளிவிவரங்களின்படி, கட்டுமானம் மற்றும் பொருட்கள் துறைகள் மிகப்பெரிய சரிவை பதிவு செய்ததன் மூலம், நவம்பர் மாதத்தில் சுமார் 10 உற்பத்தித் துறைகள் நலிவடைந்துள்ளன. ஆர்ஜென்டினாவின் பொருளாதார நடவடிக்கைகள் நவம்பரில் 0.9% அதிகரித்தது, ஒரு மாதத்திற்கு முன்பு இது தொடர்ச்சியாக இரண்டாவது மாத அதிகரிப்பாகும்.

# அயர்லாந்து பிரதமராக மீண்டும் மைக்கேல் மார்ட்டின்



அயர்லாந்து குடியரசின் பிரதமராக மைக்கேல் மார்ட்டின் இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

சட்டமியற்றுபவர்கள் வியாழக்கிழமையன்று (24) 95 இற்கு 76 என்ற விகிதத்தில் மைக்கேல் மார்ட்டின் தெரிவுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

மார்ட்டின் சுயேட்சையான சட்டமியற்றுபவர்களுக்கு மேலதிகமாக இரண்டு பெரிய மத்திய-வலது கட்சிகளைக் கொண்ட கூட்டணி அரசாங்கத்தை வழிநடத்துவார். அவரைத் தேர்ந்தெடுப்பதற்கான ஆரம்ப வாக்கெடுப்பு புதன்கிழமை குழப்பத்தில் முடிந்த பின்னர் அவரது நியமனம் ஒரு நாள் தாமதமானது.

உள்வரும் கூட்டணிக்கு ஆதரவளிக்கும் சுயேட்சையான சட்டமியற்றுபவர்களுக்கு பேசும் உரிமைகள் தொடர்பாக எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து நாடாளுமன்றம் இடைநிறுத்தப்பட்டது. 64 வயதான மார்ட்டின், இதற்கு முன்பு 2020 முதல் 2022 வரை பிரதமராக இருந்தார். கூட்டணி ஒப்பந்தத்தின்படி, பதவி விலகும் பிரதமர் சைமன் ஹாரிஸ் 2027 இல் மீண்டும் பிரதமராக பதவியேற்கும் வரை மார்ட்டின் அந்தப் பதவியில் இருப்பார்.

# குடியுரிமை தொடர்பான ட்ரம்பின் உத்தரவிற்கு இடைக்காலத்தடை

அமெரிக்காவில் பிறப்புரிமைக் குடியுரிமையை முடிவுக்குக் கொண்டுவரும் டொனால்ட்ட்ரம்பின்முயற்சியை சியாட்டிலில் உள்ள ஒரு கூட்டாட்சி நீதிமன்றம் வியாழக்கிழமை (24) தற்காலிகமாகத் தடுத்து உத்தரவு பிறப்பித்துள்ளது. ட்ரம்பின் இந்த நிர்வாக உத்தரவானது “அப்பட்டமாக அரசியலமைப்பிற்கு விரோதமானது” எனக் கூறிய அமெரிக்க மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஜோன் கோஹெனூர் (John Coughenour), 25 நிமிட விசாரணைக்குப் பின்னர் அது நடைமுறைக்கு வருவதைத் தடுக்கும் உத்தரவை பிறப்பித்தார்.

அரசியலமைப்பின் 14 ஆவது திருத்தத்தின் நீண்டகால விளக்கத்தின் கீழ், அமெரிக்காவில் பிறந்த எவருக்கும் தானாகவே குடியுரிமை வழங்கப்படுகிறது. எனினும், சட்டவிரோதமாகவோ அல்லது தற்காலிகமாகவோ நாட்டில் இருக்கும் பெற்றோருக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு அந்த விதியை முடிவுக்கு கொண்டு வர ட்ரம்ப் விரும்புகிறார்.

வொஷிங்டன், அரிசோனா, இல்லினாய்ஸ் மற்றும் ஓரிகான் ஆகிய நான்கு மாநிலங்களின் சட்ட சவாலை ஏற்று ஃபெடரல் நீதிமன்றம் அவரது உத்தரவை இடைநிறுத்துமாறு கேட்டுக் கொண்டது.

நிர்வாக உத்தரவு 14 நாட்களுக்கு நிறுத்தி வைக்கப்படும், மேலும் சட்ட நடவடிக்கைகள் நிலுவையில் இருக்கும். திங்கட்கிழமையன்று (20) அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு மீண்டும் திரும்பியதில் இருந்து ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகளை வெளியிட்ட ட்ரம்ப், இந்த குறிப்பிட்ட மாற்றத்தை செய்ய நீண்ட காலமாக சபதம் செய்தார்.

சட்டவிரோதமாக அல்லது தற்காலிக விசாவில் அமெரிக்காவில் இருக்கும் புலம்பெயர்ந்தோரின் குழந்தைகளுக்கு குடியுரிமை வழங்குவதை மறுக்க அமெரிக்க அரசாங்கத் துறைகள் மற்றும் நிறுவனங்களுக்கு அவரது நிர்வாக உத்தரவு அழைப்பு விடுத்துள்ளது.

நீதித்துறையின் சட்டத் தாக்கல்களின்படி, பெப்ரவரி 19 மற்றும் அதற்குப் பின்னரும் பிறக்கும் குழந்தைகளுக்கு இது பொருந்தும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. குடியுரிமைக்கு தகுதியற்றவர்கள் என்று கருதும் நபர்களிடமிருந்து கடவுச்சீட்டு போன்ற ஆவணங்களை நிறுத்தி வைத்து இந்த உத்தரவை அமுல்படுத்த நிர்வாகம் திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்திருந்தன. இந்த நிலையில், நீதிபதியின் உத்தரவு கூட்டாட்சி நிறுவனங்களால் சட்டம் அமுல்படுத் தப்படுவதை தற்காலிகமாக இடை நிறுத்தியது.



இந்த உத்தரவை எதிர்த்து நான்கு மாநிலங்களால் தொடரப்பட்ட வழக்கில் 14 ஆவது திருத்தம் மற்றும் அமெரிக்க சட்டம் “அமெரிக்காவில் பிறந்த நபர்களுக்கு தானாக குடியுரிமை வழங்குகின்றன” என்றும் அரசியலமைப்பை திருத்த ஜனாதி பதிக்கு அதிகாரம் இல்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1868ஆம்ஆண்டில்ஏற்றுக்கொள்ளப்பட்ட14 ஆவது திருத்தத்தின் ஒரு பகுதி, அமெரிக்காவில் பிறந்த அனைத்து குழந்தைகளும் மற்றும் நபர்களும், அதன் அதிகார வரம்பிற்கு உட்பட்டு அதன் குடிமக்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநிலங்களின் சட்ட சவாலின்படி, 2022 இல் அமெரிக்காவில் ஆவணமற்ற தாய்மார்களுக்கு 255,000 குழந்தைகள் பிறந்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




## ஒப்பந்த பணம் செலுத்தாததால்

# போட்டியைப் புறக்கணித்த பினுர பெர்னாண்டோ



இலங்கை வேகப்பந்து வீச்சாளர் பினுர பெர்னாண்டோ, பங்களாதேஷ் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் சிட்டகொங் கிங்ஸ் அணியில் விளையாடிய நிலையில் ஒரு போட்டியில் துடுப்பாட செல்லாமல் போட்டியைப் புறக்கணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.போட்டியில் விளையாடுவதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட கட்டணம் செலுத்தப்படாதது குறித்த கவலை காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டுச் செய்திகள் தெரிவித்துள்ளன.

பங்களாதேஷ் பிரீமியர் லீக் இந்த சீசனில் சிட்டகாங் கிங்ஸ் அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பினுர பெர்னாண்டோ,நிலுவையில் உள்ள சம்பளப் பிரச்சினைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் போட்டியிலிருந்து விலகிய போதிலும் அணியில் நீடிக்கிறார்.

சிட்டகொங் கிங்ஸ் இப்போது வீரர்களின் ஒப்பந்தங்களை மதிக்கத் தவறி வருகிறது, இதற்கு முன்பு, தர்பார் ராஜ்ஷாஹியிலும் பணம் செலுத்துதல் தொடர்பான பிரச்சினை இருந்தது.

தர்பார் ராஜ்ஷா வீரர் லஹிரு சமரகோன், "இதுவரை எனக்கு ஒரு சதம் கூட வழங்கப்படவில்லை" என்று கூறியுள்ளார். நான் தினமும் அவர்களிடம் என் பணத்தைப் பத்திக் கேட்பேன், ஆனால் அவர்கள் நாளைக்கு மேட்ச் முடிஞ்சதும் இரவு பணம் தருவதாகச் சொல்கிறார்கள். "ஆனால் நாளை ஒருபோதும் வராது என்கிறார்." இந்த விடயம் தொடர்பாக பி.பி.எல் அமைப்பாளர்கள் எந்த அதிகாரப்பூர்வ அறிக்கையையும் வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# உறைய வைக்கும் குளிரில் மரதன் போட்டி

ரஷ்யாவின் 50 டிகிரி செல்சியஸ் என்ற உறைய வைக்கும் குளிரில் மரதன் போட்டி ஒன்று நடைபெற்றுள்ளது.

ரஷ்யாவின் யகுசியா பிராந்தியத்தில் அமைந்துள்ளது ஓமயாகோன்க்ஸி என்ற மாவட்டத்தில் தான் இந்த விநோதமான மரதன் போட்டி நடைபெற்றது. 50 டிகிரி செல்சியஸ் என்ற உறைய வைக்கும் குளிர் இங்கு காணப்படுகிறது. உலகில் மக்கள் வாழும் அதீத குளிர் நிலவும் இடங்களில் ஒன்று தான் இந்த பகுதி. இயற்கையை ரசிக்கவும், மனதிற்கு நிம்மதி அளிக்கவும் இவ்வாறாக முயற்சிகளில் ஈடுபடுவதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.





# ஐ.சி.சியின் 2024 இன் சிறந்த ஒருநாள் அணி

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) ஒவ்வொரு வருடமும் சிறந்த வீரர், சிறந்த வீராங்கணை, சிறந்த ஒரு நாள் அணி, டி 20 அணி, டெஸ்ட் அணி உள்ளிட்ட பல்வேறு விருதுகளை வழங்கி வருகிறது. இந்நிலையில் 2024-ம் ஆண்டிற்கான ஐ.சி.சி. விருதுகள் வென்றவர்களின் விவரங்கள் வெளியிடப்படும் என ஐ.சி.சி. அறிவித்திருந்தது. அதன்படி, 2024ம் ஆண்டின் சிறந்த ஒருநாள் ஆண்கள் அணியை ஐ.சி.சி. அறிவித்துள்ளது. இந்த அணியில் அதிகபட்சமாக இலங்கை வீரர்கள் 4 பேரும், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் வீரர்கள் தலா 3 பேரும் இடம் பிடித்துள்ளனர். இந்த அணிக்கு சரித் அசலங்க கெப்டனாகவும், குசல் மெண்டிஸ் விக்கெட் காப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2024ம் ஆண்டின் சிறந்த ஒருநாள் ஆண்கள் அணி விவரம்: சைம் அயூப் (பாகிஸ்தான்), ரஹ்மனுல்லா குர்பாஸ் (ஆப்கானிஸ்தான்) பெத்தும் நிசங்கா (இலங்கை), குசல் மெண்டிஸ் (விக்கெட் கீப்பர், இலங்கை), சரித் அசலங்கா (கெப்டன், இலங்கை), ஷெர்பேன் ரூதர்போர்டு (மேற்கிந்திய தீவுகள்), அஸ்மத்துல்லா ஓமர்சாய் (ஆப்கானிஸ்தான்), வனிந்து ஹசரங்க (இலங்கை), ஷாகின் ஷா அப்ரிடி (பாகிஸ்தான்), ஹாரிஸ் ரவூப் (பாகிஸ்தான்), அல்லா கசன்பர் (ஆப்கானிஸ்தான்).

# இலங்கை கிரிக்கெட் சபை நிர்வாக தேர்தலுக்கான வேட்பு மனுக்கல் நிறைவு

இலங்கை கிரிக்கெட் சபையின் இரண்டு வருடங்களுக்கான நிர்வாகத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் நிறைவடைந்துள்ளன.

இந்நிலையில் தலைவர் பதவிக்கு தற்போதைய தலைவர் ஷம்மி சில்வா மீண்டும் CCC விளையாட்டுக் கழகத்திலிருந்து வேட்புமனுவைச் சமர்ப்பித்துள்ளார், அதே நேரத்தில் SSC விளையாட்டுக் கழகம் சார்பாக சமந்த தோடங்வல மற்றும் செரசன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜயந்த தர்மதாச ஆகியோர் தலைவர் பதவிக்காக வேட்புமனுக்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

காலி கிரிக்கெட் கிளப் சார்பாக தலைவர் பதவிக்காக வேட்புமனு தாக்கல் செய்திருந்த திலீப சார்லஸின் வேட்பு மனுவில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக நிர்வாக குழுவால் அந்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு தற்போதைய பதில் செயலாளராகச் செயற்படும் கிரிஷாந்த கபுவத்தேக்கு மேலதிகமாக சமந்த தொடங்வல மற்றும் பந்துல திசாநாயக்க ஆகியோர் செயலாளர் பதவிக்காக வேட்புமனுக்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி மாலனி குணரத்ன உட்பட ஐந்து பேர் கொண்ட தேர்தல் குழு, 25 ஆம் திகதி காலை 9 மணி முதல் 11 மணி வரை வேட்புமனுக்கள் தொடர்பான ஆட்சேபனைகளை ஏற்க முடிவு செய்துள்ளது, மேலும் தேர்தல் மார்ச் 31 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இலங்கை கிரிக்கெட் தேர்தலுக்காகத் தாக்கல் செய்த வேட்புமனுக்கள்:

தலைவர் (1 பதவி) ஷம்மி சில்வா, சமந்த தொடங்வல, ஜயந்த தர்மதாச, துணைத் தலைவர் (2 பதவிகள்) ரவின் உதயபிரிய விக்ரமரத்ன, ஜயந்த தர்மதாச, சமந்த தொடங்வல, செயலாளர் (1 பதவி) கிருஷாந்த கபுவத்தே, சமந்த தொடங்வல, பந்துல திசாநாயக்க, துணைச் செயலாளர் (1 பதவி) கிருஷாந்த கபுவத்தே, சமந்த தொடங்வல, பந்துல திசாநாயக்க, நளின் அசங்க அபோன்சு, பொருளாளர் (1 பதவி) சுஜீவ கிருஷாந்த கோடலியத்த, லசந்த சதானந்த விக்ரமசிங்க, துணைப் பொருளாளர் (1 பதவி) சுஜீவ கிருஷாந்த கோடலியத்த, லசந்த சதானந்த விக்ரமசிங்க.

# வீரேந்திர சேவாக் தம்பதிக்கிடையே விரிசல்



இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் வீரேந்திர சேவாக் திருமண வாழ்க்கையை முடிவுக்கு கொண்டு வர உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. வீரேந்திர சேவாக், ஆர்த்தி என்பவரை கடந்த 2004-ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். இத்தம்பதிக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். இந்த நிலையில், வீரேந்திர சேவாக் – ஆர்த்தி தம்பதி தங்களின் 20 ஆண்டுகால திருமண வாழ்க்கையை முடிவுக்கு கொண்டு வர உள்ளனர். கடந்த சில மாதங்களாகவே இருவரும் பிரிந்து வாழ்ந்து வருவதாக குடும்பத்திற்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்த நிலையில், சமூக வலைத்தளமான இன்ஸ்டாகிராம் பக்கத்திலும் ஒருவருக்கொருவர் பின் தொடர்வதை (follow) நிறுத்தி உள்ளனர்.

முன்னதாக, வீரேந்திர சேவாக் தனது தீபாவளி கொண்டாட்டத்தின் போது எடுத்த புகைப்படங்களை இன்ஸ்டாகிராமில் வெளியிட்டிருந்தார். அப்புகைப்படங்களில் அவரது மகன் மற்றும் அவரது தாயார் இடம்பெற்றிருந்தனர். ஆனால் அவரது மனைவி ஆர்த்தி இல்லை. மேலும், பாலக்காட்டில் உள்ள விஸ்வ நாகயக்ஷி கோவிலின் படங்களையும் சேவாக் இன்ஸ்டாகிராமில் பதிவிட்டிருந்தார்.

அதிலும் அவரது மனைவி இல்லை. இதனால் இந்த தம்பதிக்கு இடையே விரிசல் ஏற்பட்டுள்ளதாக கூறப்பட்டது. விவாகரத்து தொடர்பாக வீரேந்திர சேவாக் மற்றும் ஆர்த்தி சார்பில் இதுவரை எந்த தகவலும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பஞ்சாபில் தமிழக பெண்கள் கபடி அணி மீது தாக்குதல்



பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான பெண்கள் கபடி போட்டி பஞ்சாபில் நடைபெற்று வருகிறது.

பஞ்சாப்பில் தமிழக கபடி வீராங்கனைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான பெண்கள் கபடி போட்டி பஞ்சாபில் நடைபெற்று வருகிறது. தமிழகத்திலிருந்து அன்னை தெரசா பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகத்தில் இருந்து பெண்கள் கபடி அணியினர் பஞ்சாப் சென்றிருந்தனர்.

இந்நிலையில், மதர் தெரசா பல்கலைக்கழகத்திற்கும், தர்பங்கா பல்கலைக்கழகத்திற்கும் இடையேயான கபடி போட்டியின் போது எதிர் அணியினர் மதர் தெரசா பல்கலைக்கழக அணியின் வீராங்கனை மீது பவுல் அட்டாக் செய்துள்ளதாக கூறப்படுகிறது. மேலும் மதர் தெரசா பல்கலைக்கழக வீராங்கனைகள் நடுவரிடம் இதுகுறித்து முறையிட்டனர். அப்போது வாக்குவாதம் ஏற்பட்டு நடுவரும் வீராங்கனைகளை தாக்கியதாக சொல்லப்படுகிறது. இந்நிலையில், இதுகுறித்து முறைப்பாடு செய்துள்ள தமிழக அணியின் பயிற்சியாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# வனிந்து ஹசரங்கவின் 300 விக்கெட் சாதனை




இலங்கை அணி வீரர் வனிந்து ஹசரங்க மிகக் குறுகிய காலத்தில் ரி20 கிரிக்கெட்டில் 300 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் வீரர் ஒருவர் ரி20 போட்டிகளில் 300 விக்கெட்டுகளை வீழ்த்துவது இதுவே முதல் முறையாகும்.துபாய் மைதானத்தில் நடைபெற்ற ஐ.எல்.டி ரி20 போட்டியில் அவுஸ்திரேலிய வீரர் ஆஷ்டன் அகாரை வீழ்த்திய வனிந்து தனது 300வது ரி20 விக்கெட்டை வீழ்த்தினார்.

ஆக்ரோஷமான லெக் ஸ்பின்னரான வனிது ஹசரங்க, ரிச்மண்ட் கல்லூரியில் இருந்து கிரிக்கெட் களத்தில் நுழைந்து தேசிய அணியின் கெப்டனாகவும் செயற்பட்டவர். அவர் பந்து வீச்சாளர்களில் ஐ.சி.சி.யின் ஆண்டின் சிறந்த வீரர் விருதை வென்றுள்ளார். மற்றும் அந்த தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்தார்.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தயார் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.

ஞாயிறு இதழ்
26.01.2025 -ஞாயிற்றுக்கிழமை
ஒருவன்
ORUVAN - ඔරුවන්
ஆண்டு: 01 இதழ் : 16 குரோதி வருடம் தை மாதம் 13 ஆம் நாள் - ஹிஜ்ரி 1446 ரஜப் 27 பக்கங்கள் - 12 + XII

# எதிர்ப்பும் ஆதரவும் கலந்துள்ள டொனால்ட் டிரம்பின் மீள்வருகை



டொனால்ட் டிரம்ப் வெள்ளை மாளிகையில் மீண்டும் கால் பதித்துள்ளமை குறித்து ஐரோப்பிய நாடுகள் கவலையடைந்துள்ளன. சீனா, ரஷ்யா, இந்தியா மற்றும் பிரேசில் போன்ற மேற்கத்திய நாடுகள் அல்லாத நாடுகள் டிரம்பின் இரண்டாவது பதவிக்காலத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன. சமீபத்திய கணக்கெடுப்பின்படி, 84% இந்தியர்கள் டிரம்ப்பின் மீள் வருகை தங்கள் நாட்டுக்கு நல்லது என்றும், 67% தென் கொரியர்கள் டிரம்பின் வருகை தங்களுக்கு மோசமானது என்றும் கூறியுள்ளனர். 48% ரஷ்யர்கள் புதிய ஜனாதிபதியின் வருகையை விரும்புகிறார்கள், இது சீனாவில் 46% ஆக உள்ளது. ஆனால், ஐரோப்பாவில் அது வேறுவிதமாக அமைந்துள்ளது.

டொனால்ட் டிரம்பின் வருகை தங்கள் நாட்டுக்கு கேடாகவே அமையும் என 54% பிரித்தானிய மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர். 26% உக்ரேனியர்கள் டிரம்பின் வருகை நல்லது என்றும், மற்றொரு 20% பேர் மோசமானது என்றும் கூறியுள்ளனர். டிரம்பின் வருகை அமைதிக்கான வாய்ப்பை அதிகரிக்கும் என்று ஐரோப்பாவிற்கு வெளியே உள்ள பல நாடுகள் கருதுகின்றன. எவ்வாறாயினும், ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் பொருளாதாரக் கொள்கைகள் உலகப் பொருளாதாரத்திற்கு தீங்கு விளைவிப்பதாகவும், இறுதியில் அமெரிக்காவுக்கே பேரவலமாக மாறக்கூடும் எனவும் சர்வதேச நாணய நிதியம் எச்சரித்துள்ளது. “வரி“ என்ற வார்த்தையே தனக்கு அகராதியில் பிடித்த வார்த்தை என டிரம்ப் கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. சீனப் பொருட்களுக்கு அதிகபட்ச வரி விதிக்கப்படுவது வரலாற்று ரீதியாக நடந்து வருகின்ற ஒன்றே ஆகும். இதன் மூலம் உலக அளவில் பாரிய நெருக்கடி நிலை உருவாகும் என்பது உறுதி.

**டிரம்பை மீண்டும் ஆட்சிக்கு வரவழைப்பதில்லை என்பதே ஜோ பைடனின் பதவிக்கால லட்சியமாக இருந்த போதிலும், அதனை அவர் செய்யத் தவறியது அவரது அரசியல் வாழ்க்கையில் ஒரு கரும்புள்ளியை சேர்த்துள்ளது ..**

டிரம்பின் மீள் வருகையானது அமெரிக்காவின் சோகம் என பிரித்தானிய கார்டியன் பத்திரிகை தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. புதிய அமெரிக்கத் தலைவரை பிரிட்டனும் முழு ஐரோப்பாவும் விரும்பாமையின் வெளிப்பாடாகவும் இது இருக்கலாம். **An American tragedy:how Biden paved the way forTrump’s White House return** என்ற தலைப்பிலான கட்டுரையில் 2021 ஜனவரியில் பைடன் ஜனாதிபதியாக பதவியேற்ற போது ஜனநாயகம் வென்றுவிட்டது என தெரிவித்திருந்தார் என குறிப்பிட்டுள்ளதுடன், எனினும் மீண்டும் அவர் அதே டிரம்பிற்கு அதிகாரத்தை அளித்து விட்டே செல்கின்றார் எனவும் அக்கட்டுரையில் சுட்டிக்காட்டியுள்ளது.

அது ஒரு பெரிய தவறு என்பதை இந்தக் கட்டுரை வலியுறுத்தியுள்ளது. சார்லி சைக்ஸ் என்ற ஒரு பழமைவாத எழுத்தாளர் இது குறித்து தெரிவிக்கையில்; ”பைடன் பதவியை விட்டு வெளியேறும்போது, அவர் தனது வரலாற்றுப் பொறுப்பை நிறைவேற்றத் தவறிவிட்டார். டொனால்ட் டிரம்பை மீண்டும் ஆட்சிக்கு வரவழைப்பதில்லை என்பதே ஜோ பைடனின் பதவிக்கால லட்சியமாக இருந்த போதிலும், அதனை அவர் அவ்வாறு செய்யத் தவறியது அவரது அரசியல் வாழ்க்கையில் ஒரு கரும்புள்ளியை சேர்த்துள்ளது” என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவின் ஜனாதிபதி பதவியானது ”உலகின் மிக முக்கியமான பணி” என்று டிரம்ப் கூறியுள்ளார். கடந்த நொவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று, அமெரிக்காவின் 47வது ஜனாதிபதியாக தகுதி பெற்றபோது, 'அமெரிக்கா நமக்கு முன்னெப்போதும் இல்லாத வகையில் சக்திவாய்ந்த ஆணையை வழங்கியுள்ளது' என டிரம்ப் தனது ஆதரவாளர்களிடம் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

டொனால்ட் டிரம்ப் தனது வெற்றியின் மூலம், அமெரிக்காவின் மிகவும் வயதான ஜனாதிபதி என்ற வரலாறை படைத்துள்ளார். 1946 ஆம் ஆண்டு ஜ“ன் 14 ஆம் திகதி பிறந்த ட்ரம்பிற்கு தற்போது 78 வயதாகிறது. இரண்டாவது பதவிக் காலத்தின் முடிவில் அவருக்கு 83 வயதை எட்டியிருக்கும். முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன் 2020 இல் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டபோது அவருக்கு 77 வயது ஆக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

2015 ஆம் ஆண்டில், நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடப் போவதாக அறிவித்ததுடன் தனது அரசியல் நடவடிக்கைகளை டிரம்ப் ஆரம்பித்தார். “அமெரிக்காவை சிறந்த நிலைக்கு கொண்டுவருதல்“ என்பதே அவரது அரசியல் சுலோகமாக இருந்தது. அதற்கமைய 2017 இல் சர்ச்சைக்குரிய மற்றும் கடினமான தேர்தல் பிரசாரத்தின் பின்னர் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளின்டனை தோற்கடித்து அமெரிக்காவின் ஜனாதிபதியாக பதவியேற்றார்.

அவர் ஜனாதிபதியாக இருந்த கடைசி ஆண்டில் கொவிட் தொற்றுநோயை அவர் கையாண்ட விதம் விமர்சிக்கப்பட்டது. 2020 ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தின் போது கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டதை அடுத்து அவர் ஓய்வு எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. 2020 ஜனாதிபதி தேர்தலில் ஜோ பைடனிடம் தோல்வியடைந்தாலும், முடிவை ஏற்காத டிரம்ப், ஜனாதிபதி தேர்தலில் மோசடி நடந்துள்ளதாக குற்றம் சாட்டினார். அதற்கமைய, ஜனவரி 6 ஆம் திகதியன்று வொஷிங்டனில் ஆதரவாளர்களைத் திரட்டி, அமெரிக்க காங்கிரஸை நோக்கி அணிவகுத்து செல்லுமாறு அவர் கேட்டிருந்தார். அந்த பேரணி கடைசியில் கலவரமாக மாறியது, மற்றும் அன்றைய அவரது செயல்பாடு இரண்டு கிரிமினல் வழக்குகளுக்கு வழிவகுத்தது. ஆனால், தற்போது மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ள அவர், அமெரிக்க காங்கிரஸை தாக்கி, தண்டனை பெற்ற குறித்த நபர்களை விடுவிக்க தயாராகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் ஓர் அங்கமாக பென்சில்வேனியாவின் பட்லரில் நடந்த கூட்டத்தில் 20 வயது துப்பாக்கி ஏந்திய நபர் ஒருவர் டிரம்பை கொலை செய்ய முயன்ற சந்தர்ப்பத்தின் போது, தனது ஆதரவாளர்களை அவர் “போராடுங்கள் போராடுங்கள் ..“ என கூறியமை சமீபத்திய அமெரிக்க வரலாற்றில் ஒரு சிறப்பு தருணம் என கூறப்படுகின்றது. இந்தத் தாக்குதல் அவரது தேர்தல் பிரசாரத்தை வெற்றிகரமாக முன்கொண்டு செல்வதில் பெரும் பங்காற்றியது எனலாம். ஆக! மற்றொரு கொலை முயற்சியிலும் அவர் உயிர் தப்பினார்.

வரிகள், பொருளாதாரத் திட்டங்கள், சிக்கனம் மற்றும் கட்டுப்பாடு நீக்கம் உள்ளிட்டவை அமெரிக்காவின் பொருளாதாரம் தொடர்ந்து வளர உதவும். பணவீக்கம், வட்டி விகிதங்கள் மற்றும் கட்டணங்கள் 2025 ஐ உலகப் பொருளாதாரத்திற்கு ஒரு புதிரான ஆண்டாக மாற்றியுள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் கூற்றுப்படி, இந்த பொருளாதார வளர்ச்சி நிலையானதாக இருக்கும், ஆனால் குறைவாக, 3.2% ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தலில் வெற்றி அறிவிக்கப்பட்ட அதேவேளை டொனால்ட் டிரம்ப், ஒவ்வொரு அமெரிக்கருக்காகவும் போராடுவேன் என்று கூறியிருந்தார். அவரது வெளியுறவுக் கொள்கையை கவனத்தில் கொண்டால், ஜனாதிபதி டிரம்பின் இரண்டாவது பதவிக்காலம் அவரது முதல் காலத்தை ஒத்ததாக இருக்கும் – அதாவது, அமெரிக்கா உலகின் பிற இடங்களில் உள்ள மோதல்களில் இருந்து விலகி இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

2020 ஆம் ஆண்டில் மாநிலத்தின் தேர்தல் முடிவுகளை மாற்ற சதி செய்த குற்றச்சாட்டின் பேரில் ஜோர்ஜியாவில் டொனால்ட் டிரம்ப் கைது செய்யப்பட்டார், அங்கு பொலிஸாரால் எடுக்கப்பட்ட அவரது புகைப்படம், பொலிஸ் பதிவுகளில் தோன்றிய முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியின் முதல் புகைப்படம் என்ற அடையாளத்தை பெற்றது. இத்தனை இடையூறுகளுக்குப் பிறகும் அவர் மீண்டும் ஜனாதிபதியாக வருவது குறிப்பிடத்தக்க விடயமாகவே அமைந்துள்ளது. அமெரிக்க வரலாற்றில் இடைவெளி விட்டு இரண்டு முறை பதவி வகித்த இரண்டாவது ஜனாதிபதி டொனல்ட் டிரம்ப் ஆவார். அவருக்கு முன்னதாக க்ரோவர் கிளீவ்லேண்ட் என்பவர் 1885 – 1889 ஆம் ஆண்டுகளில் பதவியில் இருந்தார், மறுதேர்தலில் வெற்றிபெறத் தவறிவிட்டார், நான்கு வருடங்களின் பின்னர் அவர் மீண்டும் 1893 – 1897 ஆம் ஆண்டுகளில் ஜனாதிபதியாக பணியாற்றுவதற்கான புதிய ஆணையைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. தற்போது அதேபோல் டிரம்ப்பும் இரண்டாவது தடவையாக பதவியேற்றுள்ளார். அவரது ஆட்சி காலம் எவ்வாறு இருக்கும் என்பதை இனி வரும் நாட்களில் அவதானிக்கலாம்.

**சீனப் பொருட்களுக்கு அதிகபட்ச வரி விதிக்கப்படுவது வரலாற்று ரீதியாக நடந்து வருகின்ற ஒன்றே ஆகும். இதன் மூலம் உலக அளவில் பாரிய நெருக்கடி நிலை உருவாகும் என கருதப்படுகின்றது ..**



## ரிஷா பேசுகிறேன்

# தொலைபேசி நழுவல்கள்



- தொலைபேசியில் பேசும்போது அறுவை பேர்வழிகளிடம் தப்புவதற்கு சிலர் கையாளும் ஒரே தந்திரம், "இன்னொரு கோல் வருகுது .. பிறகு எடுக்குறேன் .." என்ற வார்த்தைகள் தான் ..
- ஹலோ .. ஹலோ .. இங்கு சிக்னல் கொஞ்சம் வீக்காக உள்ளது, கவரேஜ் இல்லை .. நீங்கள் பேசுவது கேட்கவில்லை .. பிறகு எடுக்குறேன் ..
- நான் ஒரு மீட்டிங்கில் இருக்கிறேன் .. மீட்டிங் முடிந்ததும் கட்டாயமாக எடுக்கிறேன் ..
- நீங்கள் கோல் பண்ணும் போது ஃபோனை சார்ஜரில் போட்டிருந்தேன் .. அதனால் தான் பேச முடியவில்லை ..
- புதிய ஃபோன் வாங்கியதால் பழைய ஃபோனில் உள்ள நம்பர் எல்லாம் மிஸ்ஸாகி விட்டது .. அதனால் தான் உங்களுடைய நம்பர் இல்லாததால் கோல் பண்ணவில்லை வெறி சொறி ..
- என்னுடைய ஃபோனில் டிஸ்பிளே பழுதாகி விட்டது, ஆகையால் ஸ்க்ரீனில் உங்களுடைய நம்பர் தெரியவில்லை, வேறு யாரோ கோல் பண்ணுகிறார்கள் என நினைத்து நான் ஆன்சர் பண்ணவில்லை ..
- நீங்கள் கோல் பண்ணும் போது இங்கு ஒரே மழையும், இடி மின்னலுமாய் இருந்தது .. கொஞ்சம் பயமாகவும் இருந்தது .. ஆகையால், ஃபோனை தொடக்கக் கூட இல்லை ..
- நீங்கள் "கோல்" பண்ணும் போது பஸ்ஸில் இருந்தேன். ஒரே சன நெரிசலாக இருந்தது .. ஃபோனை கைக்கு எடுக்க முடியாமல் இருந்தது. ஆகையால் தான் பேச முடியவில்லை ..
- எனக்கு அடுத்த லைனில் இன்னொரு ஃபோன் கோல் வருகின்றது, அதற்கு ஆன்சர் பண்ணிவிட்டு உங்களுக்கு பிறகு எடுக்குறேன் ..

- ரிஷா






### ரணிலின் நடவடிக்கைகள் முட்டாள் தனமானவையாம்!




ரணில் விக்கிரமசிங்ஹவின் முன்னாள் ஆலோசகரும் நெருங்கிய அரசியல் செயற்பாட்டாளருமான ஆஷ் மாரசிங்ஹ நாடாளுமன்றத்துக்கு வெளியே நாடாளுமன்றம் ஒன்றை நிறுவுவது முட்டாள்தனமான விடயம் என கூறியுள்ளார். ஊடக அறிக்கையொன்றின் மூலமாகவே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கட்சி வேறுபாடுகளின்றி முன்னாள் அமைச்சர்களைப் பயன்படுத்தி, நாடாளுமன்றத்துக்கு வெளியே நாடாளுமன்றம் ஒன்றை நிறுவுவது தொடர்பிலான யோசனையையொன்றை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹ பிரசாரமாக மேற்கொண்டு வருகின்றார். இது தொடர்பில் அவர் தற்போது வரையில் சுமார் 450 பேருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றை மீள இணைப்பது தொடர்பில் தலதா அத்துகோரள ஊடாக மேற்கொள்ளப்பட்டு வந்த முயற்சிகள் தோல்வியடைந்துள்ளதாக கூறப்படுகின்ற நிலையிலேயே ரணில் இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளாராம்.

### மும்முரமாக செயற்படும் இலங்கை பொலிஸார்



அண்மைய தினங்களாக, கொலைகாரர்கள் உட்பட கடுமையான குற்றவாளிகளைக் கண்டுபிடித்து கைது செய்வதில் இலங்கை பொலிஸார் அதிக அவதானம் செலுத்துகின்றமை தெரியவந்துள்ளது. இதில் மன்னார் நீதிமன்ற வளாகத்திற்கு முன்பாக நடத்தப்பட்ட இரட்டைக் கொலையின் குற்றவாளிகளைக் கைது செய்தமைமுக்கியமாக பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, கடந்த 19 ஆம் திகதி கல்கிசையில் நபர் ஒருவரை சுட்டுக் கொன்ற குற்றவாளிகளை பொலிஸாரால் கைது செய்ய முடிந்துள்ளது. எவ்வாறாயினும், அண்மையில் இடம்பெற்ற இன்னும் சில சம்பவங்களால் நாட்டில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அரசாங்கத்திற்கு எதிராக பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

### குரல் எழுப்பத் தொடங்கியுள்ள சம்பிக்க ரணவக்க



ரணில் விக்கிரமசிங்ஹவின் ஆட்சி காலத்தின் போது, தனது நெருங்கிய நண்பர் அர்ஜுன் மகேந்திரனை மத்திய வங்கியின் ஆளுநராக நியமித்ததன் மூலம் நடைபெற்ற 200 மில்லியன் பிணைமுறி கொள்ளை தொடர்பில் அர்ஜுன் மகேந்திரனை ரணில் பாதுகாத்தார் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் சம்பிக்க ரணவக்க, இப்போது மீண்டும் குரல் ஆரம்பித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. நிதிக் குற்றச்சாட்டில் அனுர பிரியதர்ஷன யாப்பாவும் அவரது மனைவியும் கைது செய்யப்பட்டதை தொடர்ந்தே மத்திய வங்கி பிணைமுறி குறித்து சம்பிக்க குரல் எழுப்பத் தொடங்கியுள்ளதாக பேசப்படுகின்றது.

"இந்த ஆட்சியாளர்கள் அர்ஜுன் மகேந்திரனை கைது செய்யவே ஆட்சிக்கு வந்தார்கள், பிணைமுறி மோசடி விவகாரம் உடனடியாக தீர்க்கப்படும் எனக் கூறினார்கள்" ஆனால் எதுவும் நடைபெறுவதாக தெரியவில்லை என சம்பிக்க ரணவக்க அண்மையில் ஊடகங்கமொன்றிடம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும், பிணைமுறி மோசடி தொடர்பில் முக்கியமாக குற்றம் சாட்டப்படுகின்ற ரணில் விக்கிரமசிங்ஹவுக்கு எதிராக முன்னர் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது, இது தொடர்பான விவாதம் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் 4 ஆம் திகதி நடைபெற்ற போது சம்பிக்க ரணவக்க, ரணில் விக்கிரமசிங்ஹவையும் அர்ஜுன் மகேந்திரனையும் பாதுகாக்கும் விதமாக பிரேரணையை எதிர்த்து வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### ரணில்- சஜித் இரகசிய பேச்சுவார்த்தைகள்

ஐக்கிய தேசியக் கட்சியையும் ஐக்கிய மக்கள் சக்தியையும் மீண்டும் இணைப்பதற்காக உயர்மட்ட ஹோட்டல்களில் நடத்தப்பட்ட இரகசிய பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



அந்தக் கலந்துரையாடல்களுக்கு, ரணில் விக்கிரமசிங்ஹவும் சஜித் பிரேமதாசவும் தங்கள் முழு ஆதரவுடனான பிரதிநிதிகளை நியமித்திருந்தனர். கூட்டணி அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடந்து வருவதாக பகிரங்கமாக கூறப்பட்டும் வந்தது.

இருப்பினும், இந்த பேச்சுவார்த்தைகளின் போது இரு கட்சிகளையும் இணைத்து ஒரு புதிய அரசியல் கட்சியை உருவாக்குவது குறித்து பேச்சுவார்த்தைகள் நடந்ததாகவும், அந்த பேச்சுவார்த்தைகள் தற்போது தோல்வியடைந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட பல கட்சிகள் இணைந்து ஒரு புதிய கூட்டணியை உருவாக்க முயற்சிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### பொது வரிப் பணத்தில் தேவையற்ற சலுகையை அனுபவிக்கும் முன்னாள் ஜனாதிபதி




ஓய்வுபெற்ற ஜனாதிபதி ஒருவர், உத்தியோகபூர்வமாக தமக்கு வழங்கப்பட்ட வீட்டின் மாத வாடகையை விட கிட்டத்தட்ட 140 மடங்கு மதிப்புள்ள பொது வரிப் பணத்தில் தேவையற்ற சலுகைகளை அனுபவித்துள்ளமை தெரியவந்துள்ளது.

அரசாங்க மதிப்பீட்டாளர்கள் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் சமர்ப்பித்த அறிக்கையில் குறித்த ஜனாதிபதி தற்போது வசித்து வரும் வீட்டின் மாத வாடகை 4.6 மில்லியன் ரூபாய் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், ஓய்வுபெற்ற ஜனாதிபதிக்கான சட்டப்பூர்வ அங்கீகாரத்தின் படி, பொது நிதியிலிருந்து அவரது ஓய்வூதியத்தில் 1/3 க்கு சமமான வீட்டு வாடகையை பெறுவதற்கு மாத்திரமே அனுமதி உள்ளது என்பதும் தெரியவந்துள்ளது.

# எம்.ஜி.ஆர் அறிவுரையை பின்பற்றிய ஜோதிலட்சுமி



பிரபலங்களின் மறு பக்கம்

'கொக்கு சைவ கொக்கு' பாடலில் ரஜினியுடனும், 'கானக் கருங்குயிலே கச்சேரிக்கு வர்றியா வர்றியா' என்ற பாடலில் விக்ரமுடனும் ஆடிய ஜோதிலட்சுமி, ஆடல் பாடல் கலைகளில் கை தேர்ந்தவர். தமிழில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர். அவரது பாட்டி தமயந்தியும் தாயார் தனலட்சுமியும் நடிகையராய் இருந்தவர்கள். எம்.ஜி.ஆருக்கு இவர்கள் நல்ல பரிச்சயம் ஆனவர்கள்.

ஒரு நாள் ஜோதிலட்சுமியின் தாயார் எம்.ஜி.ஆரிடம் பேசும்போது "இப்போது தமிழில் ஜோதிக்கு அதிக வாய்ப்பில்லை. தெலுங்கில் அழைப்பு வருகிறது, ஆனால் இவள் நடிக்க மறுக்கிறாள்" என்று குறைபட்டுக் கொண்டார். அப்போது எம்.ஜி.ஆர் ஜோதிலட்சுமியிடம் "ஏன் உனக்குத் தெலுங்கில் நடிச்சா கசக்குதா" எனக் கேட்டுள்ளார். அதற்கு பதிலளித்த ஜோதிலட்சுமி "இல்லண்ணே தெலுங்கு மொழி தெரியாது. என்ன பேசுறாங்கன்னே எனக்குப் புரியாது" என்றிருக்கிறார். அதற்கு எம்.ஜி.ஆர், 'அதெல்லாம் புரியும் புரியும். போய் நடி அப்படியே தெலுங்கு படிச்சிக்கலாம்' என்று தைரியம் கொடுத்துள்ளார். அதன்பிறகு சண்டை காட்சிகள் நிறைந்த பல படங்களில் ஜோதிலட்சுமி நடித்து அசத்தியுள்ளார். "ஒரு நடிகைக்கு ஃபீல்டில் இருந்தால்தான் மதிப்பு. ஃபீல்ட் அவுட் ஆகிவிட்டால் யாரும் அவரை தேடப் போவதில்லை" என்பதால் கிடைக்கும் வாய்ப்பை தவற விடக் கூடாது என்று எம்.ஜி.ஆர் கூறிய அறிவுரையை, அவர் சாகும்வரை பின்பற்றியுள்ளார். விவேக்குடன் நகைச்சுவை பாத்திரத்திலும் நடித்து பேர் வாங்கியுள்ளார்.

## நட்பு



அரிய பெரிய உண்மைகள்
அறிய உதவும் நூலைப்போல்
விரியும் அறிவைப் போதிக்கும்
நல்ல நட்பை நாடுங்கள்..!

விழலில் பாயும் நீரைப் போல்
வீணே பொழுது போக்கியே
பழகும் நட்பை விலக்குங்கள்
பார்த்து தெரிந்து பழகுங்கள்..!

தவறு புரியும் தருணத்தில்
தடுக்கும் நண்பர் அவசியம்
கவரும் வகையில்
எளிமையும்
கனிவும் நட்பின்
அணிகலன்..!

குளங்கள் வற்றும்
வேளையில்
கொக்கு பறந்து விடுதல் போல்
வளங்கள் குறையும்
நாட்களில்
வணிக நட்பு விலகிடும்..!

பாசம், அன்பு செலுத்தினால்
பகைவர் கூட நண்பர்கள்
நாசம் செய்யும்
பொறாமையால்
நல்ல நட்பு முறிந்திடும்..!

பாலம் போன்ற நட்பினால்
நாடு யாவும் இணைகையில்
காலம் தோறும் அமைதி தான்
கலகம் ஓயும் நிச்சயம்...!

கவிச்சுடர்
கல்லொளுவை பாரிஸ்



# பஸ்களில் பாகங்களை கழற்றும் 'க்ளீன் ஸ்ரீலங்கா'

## அடுத்த கட்டம் மீண்டும் அமுலாகவுள்ளது



இன்றைய ஜனாதிபதியின் தூய்மையான இலங்கை (க்ளீன் ஸ்ரீலங்கா) வேலைத்திட்டம் பற்றி நாடு முழுவதும் பேசப்படுகிறது. இந்த வேலைத்திட்டம் பற்றி தற்போதைய ஜனாதிபதியின் வார்த்தைகளில் கூறுவதானால், நாட்டின் சுற்றுச்சூழலைத் தூய்மைப்படுத்துவது மாத்திரமன்றி, ஒட்டுமொத்த சிதைந்துபோன சமூகத்தையும் ஆதரவற்ற தாய்நாட்டையும் மீட்டெடுப்பதே இதன் நோக்கமாகும் என்பதாகும். ஆனால், அண்மையில் பலர் பொலிஸாரின் கடமையை 'க்ளீன் ஸ்ரீலங்கா' என்று குழப்பியுள்ளதால், பொலிஸாரின் கடமையானது சமூகத்தில் சர்ச்சைக்குரிய விடயமாக மாறியுள்ளது. வாகனங்கள் தொடர்பான சட்டத்தை அமுல்படுத்தும் முயற்சியின் காரணமாகவே பொலிஸார் மீது இவ்வாறான ஒரு சர்ச்சைக்குரிய நிலை தோன்றியது.

அதற்கமைய, பஸ்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் பிற வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள அசல் மொடலை மாற்றும் வகையிலான பாகங்களை அகற்றுவதற்கு இரண்டு வார கால அவகாசம் முன்னர் வழங்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த முடிவு இன்றைய இளைஞர்களின் கனவை சிதைத்து விடும் என குறை கூறுகின்ற பலர், இதற்கு காவல்துறையை அல்ல, தற்போதைய அரசையே குற்றம் சாட்டி வருகின்றனர்.

இதுதொடர்பில் பொலிஸாரின் கண்காணிப்பு கடமைகளை மாற்றியமைக்கும் வகையில் பொலிஸ் தலைமையகத்தில் பதில் பொலிஸ் மா அதிபர் மற்றும் பல தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட போக்குவரத்து நடவடிக்கைகளினால் பஸ் உரிமையாளர்கள் மற்றும் பஸ் ஊழியர்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதையடுத்து, இது விடயத்தில் தனியார் பஸ்களுக்கு மூன்று மாத கால அவகாசம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

தற்போதைய உத்தரவின்படி, வாகன உரிமையாளர்களுக்கு சட்ட விரோதமாக நிறுவப்பட்டதை அகற் றவோ அல்லது வாகனத்தின் பதிவுச் சான்றிதழில் சட்டப்பூர்வமாக சேர்க்கவோ வழங்கப்பட்ட இரண்டு வார கால அவகாசம் மூன்று மாதங்களுக்கு நீட்டிக் கப்பட்டுள்ளது. ஆனால், இந்த விவகாரத்தில், சாரதிகளை விட, முன்னாள் அமைச்சர்கள்தான், சட்ட விரோத பொருத்துக்கள், அலங்காரங்கள் பற்றி அதிகம் கவலைப்பட்டதை காணமுடிந்தது.

ஸ்டிக்கர்கள் மற்றும் அலங்கார விளக்குகள் போன்றவற்றால் விபத்துக்கள் ஏற்படுவதாக கூறப்படுவதால், இவற்றால் எப்படி விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று பல ஓட்டுநர்கள் கேள்வி எழுப்புகின்றனர். இது இன்று மட்டுமல்ல முன்னைய அரசாங்கங்களின் காலத்திலும் நடைபெற்றுள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இது குறித்து பயணியொருவர் கருத்து தெரிவிக்கையில், "வேறு வழியேதும் இல்லாத நிலையில் தான் நாமும் பஸ்காரர்களை திட்டிக்கொண்டே பஸ்ஸில் பயணம் செய்கின்றோம். இதற்காக சொந்தமாக கார் வாங்கக் கூடிய நிலையில் நாம் இல்லை. நம் நாட்டில் தனியார் பஸ் சேவை என்பது ஒரு தனி மாஃபியா ஆகும்" என குறிப்பிட்டுள்ளார்.

இன்னொரு பயணி கருத்து தெரிவிக்கையில், பஸ்ஸில் பயணிக்கும் போது, உயிரைப் பணயம் வைத்துத்தான் பயணிக்க வேண்டியுள்ளது. பஸ்ஸில் ஏறியதும் தான் இவர்கள் எப்படி பஸ்ஸை ஓட்டுகிறார்கள் என்பது புரியும். பெரும்பாலான பஸ்களில் மின்விளக் குகள், மாலைகள், விதவிதமான சிலைகள், பொம்மைகள் என அலங்கரித்துக் காணப்படுகின்றன. பாட்டுச் சத்தம் காதை பிளக்கிறது. இன்னொருபுறம் டிவி யும் சத்தத்தை கிளப்பிக் கொண்டிருக்கும். முன்புற அலங்காரங்கள் எல்லாம் சாரதிக்கு வீதியை மறைத்தவாறே காணப்படும், சாரதி சிறிய ஓட்டை வழியாகவே வீதியை பார்த்தவாறு பஸ்ஸை ஓட்டுவார். அதுமட்டுமல்ல ஒரு கையில் ஃபோனுடன் பஸ்ஸை ஓட்டுவார். பஸ்ஸில் எங்கு பார்த்தாலும் செயற்கை பூக்களால் அலங்கரிக்கப்பட் டிருப்பதால், நாங்கள் உண்மையிலேயே ஒரு கோவிலுக்குப் போகிறோம் என்ற நினைப்பே தோன்றும்" என கூறியுள்ளார்.

இத்தகைய சூழ்நிலையில் பொது மக்களின் பாதுகாப்பு கருதி எடுக்கப் படுகின்ற இத்தகைய நடவடிக்கைகளையிட்டு சிலர் அரசியல் உள்நோக்கங்களுடன் தவறான பிரச்சாரங்களை செய்ய முற்படுவதை காண முடிகின்றது. ஆனால், காவல்துறையினரின் கடமைகளை சீர்குலைக்க மேற்கொள்ளுகின்ற இத்தகைய நடவடிக்கைகளை முறியடித்து உரிய வகையில் சட்டத்தை நடைமுறைப்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அத்தியாவசியமாகும்.




# "மின்சாரக் கட்டணத்தை முப்பது வீதத்தால் குறைத்திருக்க முடியும்"

**- மின்சார பாவனையாளர் சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க**



கடந்த இரண்டு வருடங்களில் மின்சார சபைக்கு 200 பில்லியன் இலாபம் கிடைத்துள்ள நிலையில் மின்சார கட்டணம் இருபது வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ள மையானது போதியதாக இல்லை என மின்சார பாவனையாளர் சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க தெரிவித்துள்ளார்.

இம்முறை குறைந்தபட்சம் மின்சாரக் கட்டணத்தை முப்பது வீதமாக குறைப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் மின் கட்டண திருத்தம் முன்வைக்கப்பட்டதையடுத்து அது குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், "மின் கட்டணம் குறைப்பு தொடர்பாக மின்சார சபையினால் அளிக்கப்பட்ட தரவுகள் தவறு என கடந்த 30 ஆம் திகதி கணக்காய்வாளர் நாயகம் மின்சார சபைக்கு கடிதம் மூலம் தெரிவித்திருந்தார். ஆனால், இம்முறை இந்த மின்கட்டண திருத்தத்தில் கணக்காய்வாளர் நாயகத்தின் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்றே தோன்றுகின்றது. மின்சார சபை வழங்கிய தரவுகளை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு சரியாக பரிசீலித்திருந்தால் மக்களுக்கு முப்பது வீத மின்சார கட்டண குறைப்பை வழங்கி நாட்டின் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்பியிருக்க முடியும். அந்த வகையில் நாம் ஆணைக்குழு மீதும் குற்றம் சாட்டுகின்றோம். தவறான தரவுகளை சமர்ப்பிக்கும் மின்சார சபை அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க ஆணைக்குழுவிற்கு அதிகாரம் இருந்தாலும், அவர்கள் அதைச் செய்வதில்லை. இருந்த போதிலும், மின் கட்டணத்தை இருபது சதவீதமாவது குறைத்தமைக்கான பாராட்டை, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அதிகாரிகள் மற்றும் பொது கலந்துரையாடலில் பங்கேற்ற தரப்பினருக்கு பிரத்தியேகமாக வழங்குகின்றோம்.

ஏனென்றால், மின்சாரக் கட்டணத்தை 37 வீதத்தால் அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மின்சாரத்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். மறுபுறம், மின் கட்டணத்தை 1.2 வீதத்தால் மாத்திரம் குறைக்க முடியும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் மின்சார சபை தெரிவித்திருந்தது.



இருந்த போதிலும் மின்சாரக் கட்டணத்தை இருபது சதவீதம் குறைத்த பெருமையை ஆணைக்குழுவிற்கு வழங்க விரும்புகின்றோம்.

திருடர்களைப் பிடிப்பதாகக் கூறிய தற்போதைய அரசாங்கம், மக்களுக்காக இன்னும் சாதகமாகச் செயற்பட வேண்டும். மேலும், மின் கட்டணம் குறைப்பு தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களை பெறுவதற்காக பொது கலந்துரையாடலுக்கு வருவதாக தெரிவித்திருந்த நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் வசந்த சமரசிங்க ஆகியோர் இந்த கலந்துரையாடலுக்கு வரவில்லை. அவர்கள் வந்திருந்தால் மின்கட்டணத்தை முப்பது சதவீதமாக குறைக்க முடியும் என்ற உண்மை தெரிய வரும் என்பதை தவிர்ப்பதற்கத்தான் அவர்கள் வரவில்லையா என அவர்களிடம் கேள்வியெழுப்ப விரும்புகின்றோம்" என குறிப்பிட்டுள்ளார்.

# நெல் அறுவடை காலத்திற்கான தயார்படுத்தல்கள் தொடர்பில் மேல்மட்டத்தில் கலந்துரையாடல்கள்!



எதிர்வரும் பெரும்போக நெல் அறுவடை காலப்பகுதியில் நெல் கொள்வனவு செய்வதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதுடன், நெல் சந்தைப்படுத்தல் சபை மற்றும் சதொச நிறுவனங்களுக்கு சொந்தமான நெல் களஞ்சியங்களை புதுப்பிப்பதற்கு முப்படையினரின் தொழில்நுட்ப உதவியுடன் ஆளணி தேவைகளையும் வழங்குமாறு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க பாதுகாப்பு அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கமைய, இது தொடர்பான ஒருங்கிணைந்த கலந்துரையாடல் காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் கலாநிதி சுசில் ரணசிங்க தலைமையில் கொழும்பு ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில், களஞ்சியசாலைகளில் புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்வதற்காக முப்படையினரின் ஆளணி பங்களிப்பு, தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் இயந்திரங்களை பயன்படுத்துதல் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், அறுவடை காலத்தின் போது, நெல்களஞ்சியங்களில் நிலவுகின்ற புதுப்பித்தல் பணிகளை இம்மாத இறுதிக்குள் முடித்து, நெல் கொள்முதல் செய்வதற்கான ஆயத்தங்களை செய்வதற்கும், கொள்வனவு செய்கின்ற நெல்லை களஞ்சியப்படுத்துகின்ற நெல் களஞ்சியங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கும் பாதுகாப்பு அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ள அதேவேளை, தூய்மையான இலங்கையின் (க்ளீன் ஸ்ரீலங்கா) மற்றுமொரு கட்டமாகவே இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

நாடளாவிய ரீதியில் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு சொந்தமான 209 நெல் களஞ்சியங்களும், சதொசவிற்கு சொந்தமான 12 களஞ்சியங்களும் உள்ளன. மேற்படி களஞ்சியசாலைகளில் நிலவுகின்ற

**நெல்களஞ்சியங்களில் நிலவுகின்ற புதுப்பித்தல் பணிகளை இம்மாத இறுதிக்குள் முடித்து விட இணக்கம் காணப்பட்டுள்ளது...**

குறைபாடுகள் மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் இந்த கலந்துரையாடலின் போது கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

குறித்த கலந்துரையாடலில் நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் மஞ்சுள பின்னலந்த, நெல் சந்தைப்படுத்தல் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி பேராசிரியர் ஏ. எல். ராஜகுரு, வலய முகாமையாளர்கள், மற்றும் இலங்கை இராணுவத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தினேஷ் உடுகம மற்றும் முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரிகள் குழு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் குழுவும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கனவில் வந்த காரிகையைத் தேடி..?

■ ஆர். ராஜலிங்கம்

## அத்தியாயம் 11

ராம்குமார் சேரிடம் அந்த உண்மையைக் கூறிவிட வேண்டியதுதான் என்று நினைத்த தீபன் மேலும் சிந்தனைக்குள்ளானான். மனதில் உள்ள அந்த இரகசியம்...? அதனை எப்படிச் சொல்வது என்ற சிந்தனையில் இருந்த தீபனிடம் ராம்குமார் கடைசியாக ஒரு கேள்வி கேட்டார்.

"தீபன், நீங்கள் சொல்ல தயங்குவதைப் பார்க்கையில் எனக்கு ஒன்று தோன்றுகிறது. அதாவது நீங்கள் யாரையாவது விரும்புகிறீர்களா?"

இந்தக் கேள்வி தீபனுக்கு சிறிது அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

நான் நினைத்ததுபோல் இவர் என்னையும் பூங்குழலி அம்மாவையும் இணைத்து ஏதும் சந்தேகம் கொள்கிறாரா? அப்படியானால் அந்த சந்தேகத்தை உடனே தீர்த்துவிடவேண்டும். இல்லாவிட்டால் அது வேறு பல பிரச்சினைகளை ஏற்படுத்திவிடும். அதனால் அந்த இரகசியத்தை, அதாவது அந்த உண்மையைக் கூறிவிடவேண்டும்.

அந்த உண்மையானது அவன் கனவில் கண்ட பெண். அவளைத்தான் அவன் காதலிக்கிறான். அந்த உண்மையைக் கூறிவிடவேண்டியதுதான். ஆனால், அது கனவு என்பதை எப்படிக் கூறமுடியும்? அப்படிக் கூறினால் அது ஒரு கேலிக்குரிய விடயமாகிவிடும். அல்லது நான் பொய் சொல்வதாகக் கூட அவர் நினைக்கக் கூடும். அதனால் கனவில் கண்டதாக மட்டும் கூறாமல் அந்தப் பெண்ணைப் பற்றிக் கூறுவோம் என்று நினைத்தான்.

அவன் வெகுவாக சிந்திப்பதைக் கண்ட ராம்குமார், "என்ன தீபன், நீங்கள் யாரையாவது விரும்புகிறீர்களா என்றுதானே கேட்டேன். இதற்குப்போய் இப்படி யோசிக்கிறீர்களே!"

"ஆமாம் சேர், நானும் உங்களிடம் சொல்ல வேண்டும் என்றுதான் இருந்தேன்"

"அப்படியா? சொல்லுங்கள் தீபன். என்னவாக இருந்தாலும் சொல்லுங்கள்"


"வந்து..., நான் ஒரு பெண்ணை உயிருக்குயிராக நேசிக்கிறேன். அவளும் என்மீது உயிரையே வைத்திருக்கிறாள். மணந்தால் அவளைத்தான் மணப்பது என்ற முடிவோடுதான் இருக்கிறேன்"

"ஓ...! அப்படியா? இதைச் சொல்வதற்கு ஏன் தயங்க வேண்டும்? காதலிப்பது என்ன பெரிய தவறான விடயமா? தாராளமாக சொல்லுங்கள் அவள் வீட்டிலேயே போய் பேசி திருமணத்தை நானே முடித்து விடுகிறேன். அவள் யார்?" என்று கேட்டார்.

தீபன் அதற்குத் தயங்கித் தயங்கி, "அதுதான் சேர் தெரியவில்லை" என்று கூறினான்.

"என்ன தெரியவில்லையா? தீபன், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"அது வந்து சேர், நானும் அவளும் காதலிக்கிறோமே தவிர அவளைப் பற்றி எந்த ஒரு விடயமும் எனக்குத் தெரியாது.



அதைப்போலவே என்னைப் பற்றி அவளுக்கும் எதுவும் தெரியாது. நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பி பழகினோமே தவிர எங்களைப் பற்றிய விடயங்களை ஒருவரோடொருவர் பரிமாறிக்கொள்ளவில்லை" என்று கூறினான்.

அதைக் கேட்ட ராம்குமார், "ம்..., அப்படியா? காதலிக்கும்போது சிலர் செய்யும் தவறு இதுதான். நீங்கள் மட்டும் அல்ல, பலரை நானும் பார்த்திருக்கிறேன், உயிருக்குயிராகக் காதலிப்பார்கள். ஆனால், அவர்களைப் பற்றிய விடயங்களை ஒருவரோடொருவர் பரிமாறிக் கொள்ளமாட்டார்கள், அதற்கு அவர்களுக்கு நேரம் இருக்காது. இது காதலர்களிடம் உள்ள ஒரு பழக்கம்" என்றார்.

தீபனுக்கு அந்த வார்த்தைகள் சிறிது ஆறுதலாக இருந்தன.

"பரவாயில்லையே! இப்படி உண்மையான காதலர்களும் இருக்கிறார்களா?" என்று நினைத்துக் கொண்டான்.

ராம்குமார் தொடர்ந்தார்.

"சரி தீபன், பரவாயில்லை. அவள் எங்கிருக்கிறாள் என்பதாவது தெரியுமா?"

"சேர், மன்னித்துக் கொள்ளுங்கள். அதுவும் எனக்குத் தெரியாது"

"சரி சரி, அவளும் நீங்களும் எங்கிருந்து பழகினீர்களோ அங்கு போய் பார்த்தால் என்ன? அவள் எப்படியும் அங்கு வருவாள்தானே?"

"அதுவும் நடக்காது சேர், ஏனென்றால் நானும் அவளும் விரும்பியது அவளின் அண்ணனுக்குத் தெரியாமல் இருந்தது. அதைத் தெரிந்து கொண்ட அவன் அவளை என்னிடமிருந்து பிரித்துக் கூட்டிக் கொண்டுபோய்விட்டான். அதற்குப் பிறகு நடந்ததெல்லாம் பெரும் பயங்கரங்கள். அதைப் பற்றி பேசுவதால் பயனில்லை. அவள் எங்கிருக்கிறாள் என்று தேடித்தான் பார்க்க வேண்டும்"

"சரி தேடுவதென்றால் அவள் போட்டோவாவது இருக்கிறதா?"

தீபன் இல்லையென்பதுபோல் தலையசைத்தான்.

"என்ன தீபன், உயிருக்குயிராக நேசித்த பெண்ணைப் பற்றிய எந்த விபரமும் தெரியாமல் இருக்கிறீர்களே! சரி அவளுக்குத் தெரிந்தவர்கள், அல்லது தோழிகள் என்று யாரையாவது தெரியுமா?"

அதற்கும் தீபன் இல்லையென்பதுபோல் தலையசைத்தான்.

அதைக்கேட்டு ராம்குமார் வெகுநேரமாக சிந்தித்துக் கொண்டிருந்தார். திடீரென்று அவர் முகம் மலர்ந்தது. பின்னர் அவர்,

"தீபன், அவளைக் கண்டுபிக்க ஒரு வழி இருக்கிறது" என்று கூறினார்.

அவர் கூறியதைக்கேட்டு தீபனின் முகமும் மலர்ந்தது. அவன் கேட்டான்,

"அப்படியா சேர்? என்ன வழி? சீக்கிரம் சொல்லுங்கள்" என்று கூறிய அவன், அவர் என்ன சொல்லப்போகிறார் என்று பார்த்துக் கொண்டிருந்தான்.

(அடுத்து....?)

---

# ஏகலைவன் விடயத்தில் துரோணரின் உண்மை நிலை?

துரோணர் ஏகலைவனிடம் கட்டை விரலை வாங்கினார், அவர் ஒரு ஆரிய பிராமண சூது பிடித்தவர், இரக்கமில்லாதவர், பார்ப்பன கொடூரக்காரர் என ஏக குற்றசாட்டுகளை கேட்டிருப்போம். உண்மையில் நடந்தது என்ன? அப்படிப்பட்டவரா துரோணர்? உண்மையில் துரோணரின் நிலை பரிதாபமானது.

ஆம், துரோணர் அந்த அரச குடும்பத்து ஆசிரியர், எல்லா விதத்திலும் அரசனுக்கு கட்டுப்பட்டவர், அவனை மீறி அவர் ஏதும் செய்துவிட முடியாது. சுருக்கமாக சொன்னால் அரச குடும்பத்து அடிமைகளில் ஒருவர் தான் துரோணாச்சாரியார். அந்நாளில் ராஜவம்சத்துக்கு மட்டுமே அதாவது ஷத்ரிய வம்சத்துக்கு மட்டுமே சில பயிற்சிகள் கற்றுகொடுக்கப்படும்.

எல்லோரும் எல்லாம் பயின்றால் அரசுக்கு எதிரான சக்திகள் தலையெடுக்கும் எனும் தந்திரம் அது. அவ்வகையில் பாண்டவரும், கௌரவரும் பயில்கின்றார்கள், தேரோட்டி மகனான கர்ணனும் படிக்கின்றான் அவர்கள் அரங்கேற்றம் முடிந்த பின்புதான் ஏகலைவன் என்றொருவன் இருப்பதும் அவன் வில்வித்தையில் அர்ஜுனனையும் மிஞ்சி நிற்பதும் அறியப்படுகின்றது. அரச வாரிசுகளையும் மீறி ஒரு வேடுவன் வித்தையில் மிஞ்சி நிற்பது அரச குடும்பத்துக்கும் நல்லதல்ல.. நாட்டுக்கும் நல்லதல்ல.. அவன் எதிரி கையில் வீழ்ந்தால் முடிந்தது கதை. நாட்டு மக்களை சேர்த்து கலகம் செய்தால் இன்னும் மோசம். அதற்காக வேடுவனை அரண்மனைக்கும் அழைக்க முடியாது.. சட்டம் இடம் கொடாது. இப்படி ஒரு சிக்கல் இருக்க அவனை சந்திக்க கிளம்புகின்றது மேலிடமும், துரோணரும் அர்ஜுனனும், ஏகலைவனின் வித்தையில் அஞ்சுகின்றான்.

அர்ஜுனனை மீறி ஜொலித்து நிற்கின்றான் ஏகலைவன், அவனை விட்டுவைப்பது நல்லதல்ல என மேலிடம் முடிவெடுக்கின்றது. ஏகலைவனின் குரு யார் என கேட்க, அவன் துரோணர் சிலையினை காட்டுகின்றான். ஆம் துரோணரை மனதால் வணங்கி வளர்ந்து தானே வித்தை கற்றவன் ஏகலைவன். எல்லோரும் அதிர்கின்றனர், காரணம் துரோணர் அரச குடும்பத்துக்கு மட்டுமே ஆசிரியர். அப்படியானால் இவனை இவ்வளவு திறமையாக அவர் உருவாக்க காரணம் என்ன எனும் சந்தேக கேள்விகள் எழுகின்றன. துரோணர் அரச குடும்பத்துக்கு எதிராக ஒருவனை இரகசியமாக வளர்ப்பதாக சந்தேகம் அவர் மீதே படர்கின்றது. சிக்கலில் தவிக்கின்றார் துரோணர், இராஜதுரோக குற்றசாட்டு அவர்மேல் சுமத்தப்படும் ஆபத்து நெருங்கிற்று, இதன் சூத்திரதாரி கண்ணன்.

அவரை காக்கும் ஒரே நம்பிக்கையாக ஏகலைவன் நிற்கின்றான், அவன் நிச்சயம் துரோணரின் பெருமை, துரோணரின் மாபெரும் மகிழ்ச்சியும் சாதனையும் அவன். ஆனால் விதி? துரோணருக்கு அவனை விடவும் முடியவில்லை எடுக்கவும் முடியவில்லை, தவிக்கின்றார்.

ஆம் அரச கட்டளை மீறி அவர் என்ன செய்யமுடியும்? அவனை கொல்லவேண்டிய இடம் அது, ஆம் அரசனின் கோபம் அவனை முதலில் கொல்லும துரோணரை அடுத்து கொல்லும். இராஜதுரோகம் எனும் குற்றத்துக்கான தண்டனை அது. யோசித்தார் துரோணர், அந்த சீடன் அழிவதில் அவருக்கு விருப்பமில்லை. அவனை பலமிழக்க வைத்தால் போதுமென குருதட்சனையாக கட்டைவிரலை கேட்கின்றார்.

குரு கேட்டால் தலைகொடுக்கவும் துணியும் ஏகலைவன் கட்டை விரலை மகிழ்வாய் கொடுத்து பலமிழக்கின்றான். இனி அவனால் வில்வித்தை அவ்வளவு துல்லியமாக செய்யமுடியாது.

குருவுக்கு சிஷ்யன் கொடுக்கும் காணிக்கை அவரை காக்கும் என்பது சாஸ்திர நம்பிக்கை.. கண்ணீரோடு அவனின் கட்டை விரலை தாயத்தில் வைத்து கழுத்தில் கட்டிகொள்கின்றார் துரோணர்.. அந்த காட்சி உருக்கமானது, கண்ணீர் வரவழைக்கும் காட்சி அது. துரோணருக்கு அவனை போல மாணவன் இல்லை, நல்ல ஆசிரியனுக்கு சிறந்த மாணவனை விட பெருமை எது? ஆனால் விதி? அப்பக்கம் ஏகலைவனுக்கோ குருநாதருக்காக வித்தையினையே கொடுத்துவிட்ட தியாக மகிழ்ச்சி, தன் கட்டைவிரல் அவர் கழுத்தில் இருப்பதில் அவ்வளவு மகிழ்ச்சி.

தானே அவரின் மார்பில் சாய்ந்ததாக மகிழ்ந்தான், துரோணர் அரண்மனை திரும்பினார். ஆம் துரோணர் அவன் உயிரை காத்தார், அவன் துரோணர் உயிரை காத்தான்.


காலங்கள் ஓடின. பாண்டவருக்கும், கௌரவருக்கும் யுத்தம் நெருங்கிற்று, ஒவ்வொருவரின் பலத்தையும் அளந்த கண்ணன் துரோணர் பக்கமும் வருகின்றான், ஏற்கனவே கட்டை விரல் வாங்க காரணமே அந்த மாயவனே? துரோணர் கழுத்தில் இருப்பது உன்னதமான சிஷ்யனின் காணிக்கை, அது துரோணரை சாகவிடாது, அது இருக்கும் வரை துரோணர் வீழமாட்டார்.

என்ன செய்யலாம்? அதே வித்தைதான், ஏழை அந்தணராக மாறிய கண்ணன் யாசகனாய் வந்தான், தன் மகளுக்கு திருமணமென்றும் ஒரு தாலிக்கும் வழியில்லை எனவும் அழுது அந்த தாயத்தையே உற்று பார்த்தான். குறிப்பறிந்த துரோணர் இதைவிட பெரும் தாலி இல்லை, இது ஆசிமிக்கது என அதை வழங்கினார், துரோணரின் கழுத்தில் இருந்து அந்த பெரும் கவசத்தை அகற்றினான் கண்ணன் அதன்பின் எல்லாம் முடிந்தது, சாகும் வேளையில் துரோணர் முன் தன் புல்லாங்குழலை காட்டினான் கண்ணன், ஆம் அதில் அந்த விரலை பதித்திருந்தான்.

அதை கண்டவுடன் துரோணருக்கு எல்லாம் விளங்கிற்று, மெல்ல பேசினான் கண்ணன்.. அவன் குரல் அந்த ஞான தத்துவத்தை போதித்தது.

"துரோணாச்சாரியே.. சிஷ்யர்களில் எல்லாம் உயர்ந்தவன் ஏகலைவன், ஆசிரியரில் எல்லாம் உயந்தவன் நீ. உங்களுக்குள்ளான உணர்வும் புரிந்துணர்வும் பாசமும் எந்த குருவுக்கும் சீடனுக்கும் அமையாது.. அவனை அன்றே நீ கொன்றிருந்தால் நீ பாவியாயிருப்பாய், விட்டிருந்தால் அவனை நீயே வளர்த்தாய் என பழி சுமந்திருப்பாய், அவன் பாண்டவர் பக்கம் வந்தாலும் கௌரவர் பக்கம் வந்தாலும் பழி உனக்கே.. உன் மாணவர்களில் அர்ஜுனன் பெரும் அடையாளம்.. அவனை நீ நேரடியாக பயிற்றுவித்தாய், ஆனால் உன்னை மனதால் வணங்கி வளர்ந்த ஏகலைவனே அவனை விட உயர்ந்தவன், ஒரு மாணவன் எப்படி இருக்க வேண்டும் என்பதன் அடையாளம் அவனே. அங்கு உன் உயிரை அவன் காத்து மாணவனின் கடமையினை செய்தான், நீ அவன் உயிரை காப்பாற்றி ஆசிரியனுக்குரிய கடமை யினை காத்தாய். நீ கேட்டவுடன் கொடுத்த அந்த விரல் அவனின் தியாகத்துக்கும் குருசிஷ்ய பாசத்துக்கும் என்றும் எடுத்துக்காட்டாய் இருக்கும், உன் பெயர் இருக்குமிடமெல்லாம் அவனும் இருப்பான்..."

அந்த புல்லாங்குழலில் இருந்த விரலை நோக்கியபடியே உயிர்நீத்தார் துரோணர். ஆம் நல்ல மாணவன் ஆசிரியர் அளவு வரலாற்றில் நிலைப்பான் என்பதுதான் ஏகலைவன் வாழ்வின் தத்துவம்..! ■



> காலங்கள் ஓடின. பாண்டவருக்கும், கௌரவருக்கும் யுத்தம் நெருங்கிற்று, ஒவ்வொருவரின் பலத்தையும் அளந்த கண்ணன் துரோணர் பக்கமும் வந்தான்....,

> துரோணர் அந்த அரச குடும்பத்து ஆசிரியர், எல்லா விதத்திலும் அரசனுக்கு கட்டுபட்டவர், அவனை மீறி அவர் ஏதும் செய்துவிட முடியாது. சுருக்கமாக சொன்னால் அரச குடும்பத்து அடிமைகளில் ஒருவர் தான் துரோணாச்சாரியார்

# பாதை மாற்றிய போதை

சிறுகதை

வெள்ளிக்கிழமை காலை வேளை கடிகாரத்தைப் பார்த்தேன். நேரம் 10.45ஐ காட்டிக் கொண்டிருந்தது. அப்போது அலறிய போனில் வந்த செய்தி ஒரு கணம் என்னை அலறியடிக்கச் செய்தது. கண்கள் இருண்டு வெட்ட வெளிச்சமாய்த் தெரிகின்ற வானத்தின் பளிச்சிடுகையிலும் இருண்மை சூழ்ந்து கொண்டிருந்தது.

“ஹலோ தம்பி... எங்கே இருக்கிறாய் நீ” என்ற எனது சகோதரனின் கேள்விக்கு சாதாரணமாக பதில் சொன்னேன்.

நான் என்னதான் சாதாரணமாக பதில் சொன்னாலும் கூட, அவனது குரலில் மெல்லிய தடுமாற்றம் நிலைகொண்டிருந்ததை என்னால் ஊகிக்க முடிந்தது. ஏதோ சிக்கல் இருப்பதாக மனதில் தோன்றியது. என்னவென்று கேட்பதற்குள்..

“நீ அவசரமாக வீட்டுக்கு வா. நான் அங்குதான் வந்து கொண்டிருக்கிறேன்” என்று சொல்லி அழைப்பை துண்டித்தான். அவனாகவே போன் செய்து பதற்றத்தை எனக்குள்ளும் கிளப்பி விட்டு அவன் விலகி விட்டான். என்ன நடந்தது, என்ன நடந்தது? என்று இந்தப் பதற்றம் ஒரே வினாவை மாறி மாறி எழுப்பிக் கொண்டே இருந்தது. நண்பர்களோடு உறவாடிக் கொண்டு பாதி சாப்பிட்ட கிழங்கு பொரியலை அப்படியே வைத்து அறைகுறையாய் கையை கழுவி விட்டு அவசரமாக வீட்டுக்குச் செல்கிறேன். பதினைந்து நிமிடத்தில் வருகிறேன் என்று பொய்யான நேரத்தை சொல்லி விட்டு அவசரமாக கிளம்பினேன்.

வீதியில் பள்ளங்களும் வாகன நெரிசல்களும் நிரம்பியிருந்தன. அவ்வளவு பதற்றத்துக்கு மத்தியிலும் வீதியில் பயணிக்கின்ற போது படிக்காதவன் படத்தில் ஒரு கூட்டுக் கிளியாக பாடலில் வருகின்ற “செல்லும் வழியெங்கெங்கும் பள்ளம் வரலாம். உள்ளம் எதிர்பாராமல் வெள்ளம் வரலாம்” என்ற மலேஷியாவாசுதேவன் பாடிய பாடல் வரிகள் ஞாபகத்துக்கு வந்தன. உடலில் ஹோர்மோன்கள் சுரந்தன. வியர்வை வேகமாக உடலை நனைத்தன. வேர்த்து விறுவிறுத்தவனாய் வீட்டுக்குள் நுழைந்தேன்.

எனது மனைவி வீட்டின் கதவருகே நின்று கொண்டிருந்தாள். எனது தோற்றத்தைக் கண்டு “ஏன் இப்படி விறுவிறுக்க வாறீங்க.. என்ன நடந்தது..?” என்று கேட்டாள். கைச்சட்டையால் நெற்றியைத் துடைத்தேன்.

அவளுடைய கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்றே எனக்குப் புரியவில்லை.

“தெரியாது. அண்ணா கோல் பண்ணி அவசரமாக வீட்டுக்கு வரச் சொன்னார். அவரும் வாராராம்.

“மாமிக்கு எதுவும் பிரச்சினையோ தெரியாது. சுகமில்லாம இருக்கப் போகுது. நேற்றும் நெஞ்சுக்குள்ள ஒரு மாதிரி இருக்கு என்று சொன்னாங்க. நீங்க என்ன ஏதுன்னு நல்லாக் கேட்டிங்களா?”

“இல்ல”

“இல்லயா... என்ன சொல்றீங்க. என்ன பதில் இது?”

“அவர் போன் பண்ணி வா என்று சொல்லிட்டு போனை கட் பண்ணிட்டார். அப்புறம் எங்கே கேக்கிறது. அம்மாக்கு சுகமில்லாட்டி இங்க வருவாரா? விசயத்தை சொல்லி அங்க கூப்பிட்டுருப்பார்”

அம்மாவின் நம்பரிலிருந்து கோல் வந்தது. அம்மாதான் பேசினார். என்னை அண்ணாவின் வீட்டுக்கு வருமாறு சொன்னார். அவர் இங்கே வருவதாக சொன்னதாக சொன்னேன். ஆனால், அண்ணா அங்குதான் இருக்கிறார் என்றும் உடனடியாக வருமாறும் கூறினார் அம்மா.

“ஆளாளுக்கு மாறி மாறி ஒரு இடம் சொல்லிட்டு இருக்காங்க” என்று சலிப்பாக இருந்தது. நான் அம்மாவை பார்க்கப் புறப்பட்டேன்.

கடந்த நான்கு நாட்களாக தொடர்ந்து மழை. ஆட்டோவை எடுத்துக் கொண்டு சென்றால் சீக்கிரம் சென்று விடலாம். வீதியின் இருமருங்கிலும் கால்வாய் வெட்டப்பட்டிருந்தது. மோட்டார் சைக்கிளும் போக முடியாது என்பதால் கைக்கிளை எடுத்துக் கொண்டு அழுத்தி மிதிக்கத் தொடங்கினேன். மழை பொழிவது பரவாயில்லை. யாரும் வெளியில் இறங்க முடியாத அளவுக்கு



பெய்து கொண்டிருந்தால் என்ன செய்வது? விதியைத்தான் நொந்து கொள்ள வேண்டும். நான் அவசரத்தில் வந்ததால் குடையை கொண்டு வர மறந்து விட்டேன். மனைவியும் சொல்லாமல் விட்டு விட்டாள்.

ஒருவாறு அண்ணாவின் வீட்டைச் சென்றடைந்தேன். அம்மா வராந்தாவில் குத்துக் கல்லாக உட்கார்ந்து கொண்டிருந்தார். அம்மாவுக்கு எந்தப் பிரச்சினையுமில்லையென மனதுக்குள் நினைத்துக் கொண்டேன். வீட்டுக்குள் சென்ற போதுதான் அவர்கள் அழுது கொண்டிருப்பது தெரிந்தது. அம்மாவோடு சேர்ந்து இரண்டு சகோதரிகளும் அழுது கொண்டிருந்தார்கள்.

“என்னாச்சு... ஏன் எல்லோரும் அழுதுட்டு இருக்கீங்க..”

“மாமா.. மாமா அங்கே போய் பாருங்களேன். சிவா மாமாட வீட்டுக்குள்ளே மூன்று பேர் புகுந்து கதவை பூட்டிக் கொண்டு அடிக்கிறாங்க. மாமா கத்துற சத்தம்தான் கேட்குது” என்றார்கள்.

“என்ன அடிக்கிறாங்களா?...” எனக்கு அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டதும் தூக்கி வாரிப் போட்டது. யார் அடிக்கிறார்கள்? எதுக்கு அடிக்கிறார்கள் என எதுவும் கேட்காமல் சிவாவின் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினேன்.

சிவா வேறு யாருமில்லை. எனது கூடப் பிறந்த தம்பிதான். வீட்டைச் சுற்றி நிறையப் பேர் நின்று கொண்டிருந்தனர். அங்கு எனக்குப் பக்கத்தில் மச்சான் நின்று கொண்டிருந்தார்.

“என்ன மச்சான்... என்ன நடக்குது... அண்ணா எங்க?”

“அண்ணா அவசரமா பொலிஸ் ஸ்டேஷன் போயிருக்கார். பொலிஸ்காரங்கள் ரெண்டு பேர் வந்திருக்காங்க. சிவாவைத்தான் உள்ளே பூட்டி வெச்சி அடிக்கிறாங்க. ஏன் எதுக்கு என்று ஒன்னும் சொல்றாங்களும் இல்லை”

“காரணம் சொல்லாமல் நம்மட வீட்டுக்குள்ள வந்து எப்படி இப்படி அடிக்க முடியும்? வாங்க போய் என்னன்னு பார்ப்போம்” அவர்கள் எதையும் பொருட்படுத்தாமல் திட்டி திருப்பி அனுப்புவதாக அவர் சொன்னார்.

“சரி என்னை விடுங்க. நான் போய் கேட்கிறேன்” என்றேன்.

அம்மா, சகோதரி என எல்லோரும் போக வேண்டாம் என தடுத்தார்கள். அதற்காக அடித்துக் கொண்டிருப்பதை பார்ப்பதா என்றும் ஒரு கேள்வி மனதுக்குள் எழுந்து கொண்டிருந்தது.

என்ன நடந்தாலும் கேட்க வேண்டும் என்ற முடிவோடு வீட்டின் அருகே சென்று கதவை பலமாக மூன்று முறை கைகளால் தட்டினேன்.

ஒரு பொலிஸ்காரர் வந்து கதவைத் திறந்தார். “கௌத...?” என்று கேட்டான். சிங்களத்தில் “கௌத” என்று கேட்டாலும் கூட அவனுக்கு நன்றாகவே தமிழ் தெரியும் என்பது எனக்குத் தெரியும். அவன் சிங்களத்தில் கேட்ட கேள்விக்கு தமிழிலேயே பதில் சொன்னேன்.

“என்ட சகோதரன்தான் அவன். எதுக்கு அவனை போட்டு அடிக்கிறிங்க” என்றேன்.

“வீட்டில் முக்கியமான பொருள் ஒன்றை தேடுறோம். அதுவரைக்கும் யாரும் உள்ளே வரக்கூடாது. போய் ஓரமா நில்லுங்க” என்று சொல்லி விட்டு கதவை சாத்த முற்பட்டான்.

அவனை விடாமல் “என்ன பொருள்?” என்று கேட்டேன். எதுவும் சொல்லாமல் அலட்சியமாக கதவை மூடினான். யார் வீட்டுக்குள் வந்து யார் அதிகாரம் செய்வது என்ற கோபம் பொத்துக் கொண்டு வந்தாலும் எதுவும் பேசாமல் எல்லோரையும் போல வெளியில் நின்று கொண்டிருந்தேன். ஒரு வேளை களவு ஏதாவது எடுத்திருப்பானோ என்றும் மனதுக்குள் தோன்றியது. சண்டித்தனம் பண்ணிக் கொண்டு திரிந்தாலும் இதுவரை இப்படி பொலிஸ் இவனை தேடி வந்ததில்லை.

மொத்தாமாக மூன்று மணித்தியாலத்தை தின்று விட்டார்கள். கடைசியாக கதவை திறந்து அவனையும் ஒரு கையால் பிடித்துக் கொண்டு வெளியே வந்தார்கள். அவர்களுடைய கையில் ஒரு சிறிய பை, கண்ணாடித்துண்டு, லைட்டர் என்பன இருந்தன.

வெளியே வந்த போதுதான் தெரிந்தது. அடித்தது எனது தம்பிக்கு மட்டுமல்ல. அவனுடைய நண்பர்கள் இருவருக்கும் சேர்த்துத்தான். இரண்டு விலங்குகளைக் கொண்டு மூவரையும் பூட்டினான்.

எங்களைப் பார்த்து ஒரு பொலிஸ்காரன் சொன்னான்.. “இது என்ன என்று தெரியுதா? ஐஸ் போதைப்பொருள். இதுக்கு அடிமையானது கூட தெரியாம இவனை வீட்லயே வெச்சிருந்து இருக்கீங்க. நாட்டுல இதனால எவ்வளவு பிரச்சினை”

“சேர் அவன் பீடி, சிகரட் பிடிப்பான். மற்றப்படி எந்த கெட்ட பழக்கமும் அவனுக்கு இல்லை” என்றார் அம்மா.

அதற்கு பொலிஸ்காரர்களில் ஒருவர், “அம்மா... இது வேற மாதிரி கேஸ் இல்லை.. ஐஸ் வச்சிருக்கார். இது பெரிய கேஸ். ஐஸ் போதைப் பொருள் இதை இங்க வெச்சிருக்க ஏலாது” என்று விளக்கிச் சொன்னார்.

ஐஸ் எனும் போதைப்பொருளை வைத்திருந்தமையை பொலிஸார் ஆதாரத்தோடு பிடித்துக் கொண்டு சென்றார்கள். சமூகத்தின் சாபக்கேடாக மாறியிருக்கிறார்கள் போதைப் பொருள் பாவிப்பவர்கள். இவர்களை சட்டம் இனி தூக்கி நிறுத்தி தன் தீர்ப்பை வழங்க வேண்டிய நிலைக்கு வந்திருக்கிறது. போதையின் இன்பம் எல்லாவற்றையும் மறைத்து விட்டது. ஒரு நொடி இன்பம் எல்லாவற்றையும் மறைத்து விட்டது.

இப்போதுதான் விபரம் சுற்றியிருந்தவர்களுக்கு மெல்லப் புரிய ஆரம்பித்தது. சுற்றியும் ஓலை வீடுகள், சாதாரண அடிப்படை வசதி கூட இல்லாத ஓலை வீடது. இதனை பார்த்ததும் அவர்கள் பாமரர்கள் என்பது பொலிஸாருக்கு புரிந்தது. அவர்களுக்கு புரியும் பாஷையில் பொலிஸார் விளக்கினார்கள்.

ஐஸ் என்றால் இதுதான் என்றதும் அம்மா கதறி அழத்தொடங்கிட்டார். பின்னர், “இவன்ட பொண்டாட்டி வெளிநாடு போனதிலிருந்து வேற எங்கேயும் போகாமல் வீட்டுக்குள்ளேயேதான் இருக்கான். எப்போதாவதுதான் பசிக்குது என்று வருகிறான். கண்ட கண்ட நேரத்தில குளிக்கிறான். தலைமுடியைக்கூட வெட்டுறதில்லை. இவங்க தான், இவன்ட நண்பர்கள் என்று அடிக்கடி வாரானுங்க. எல்லாத்தையும் நாசமாக்கிட்டு இப்ப ஒன்னா போகப் போறானுங்க” என்று அம்மா புலம்பிக் கொண்டிருந்தார்.

“இது இவ்வளவு பெரிய விடயமாக இருக்கே இப்போ என்ன செய்யப்போறிங்க இவர்களை கூட்டிப் போய்..?” என்று கேட்டாள் அம்மா.

“இனி இவன் இப்படி பண்ண மாட்டான். நாங்க பார்த்துக்கிறோம் விடுங்களேன்” என்று அம்மா வாய் பிதற்றிக் கொண்டிருந்தார்.

“இல்லம்மா இது பெரிய கேஸ். சின்ன கேஸ் என்றால் சமாளிக்கலாம். இதை பாவிக்க இடமளித்தால் அவருக்கு பல வருட சிறைத்தண்டனை கிடைக்கும் அம்மா. நேற்றுக்கூட இரண்டு பாடசாலை மாணவிகளை பிடித்தோம். அவர்கள் பெரிய இடத்து பொம்பள பிள்ளைங்க. அவர்களை கைது செய்து விசாரித்த போது அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா.? இந்த ஐஸ் போதையை பாவித்தால் நீண்ட நேரம் தூங்காமல் கண் முழித்து படிக்க முடியும் என்று அவட கூட்டாளி ஒருத்தன் சொல்லியிருக்கான். அதனால அதை பாவிச்சதாக சொல்லியிருக்காங்க. இப்போ ஆபத்தான நிலையில் இருக்காங்க. இத விட ஏலாது. நீங்க கோர்ட்ல பார்த்துக் கொள்ளுங்கம்மா” என்று சொல்லி அவர்களை தள்ளாத குறையாக கூட்டிக் கொண்டு சென்றார்கள்.

“இவன்ட பொண்டாட்டி வீட்டில் வறுமை, நாளாந்த செலவுக்கே பணம் இல்லன்னு வெளிநாடு போய்ட்டா. இவன் இங்க கெடந்து கெட்டுப் போய்ட்டான். இவன் ஜெயிலுக்கு போறான். கடவுளே.. நான் என்ன செய்வேன்? ஏன் இப்படி சோதிக்கிறாய்...” என்று அம்மா புலம்பிக் கொண்டிருந்தார். யார் யாரை ஆறுதல் படுத்துவது என்ற நிலையில் எல்லோரும் இருந்தனர். வேடிக்கை பார்க்க வந்த கூட்டங்கள் சற்று விலகி புதிதாக வந்தவர்களுக்கு நடந்த சம்பவத்தை பாடமெடுத்துக் கொண்டிருந்தார்கள். நான் அம்மாவை தேற்றி வீட்டுக்குள் அழைத்துச் சென்றேன்.

மெலிதாக தூறிக் கொண்டிருந்த மழை இப்போது ஓவென பெய்து கொண்டிருந்தது.

**ஜே.பிரோஸ்கான்**
**கிண்ணியா.**

## புத்திசாலி மீன்




சந்தைக்கடையில் இருவர், மீன் விற்றுக்கொண்டிருந்தனர். வியாபாரம் மிகவும் மந்தமாகத்தான் இருந்தது. சற்று நேரம் கழித்து ஒரு வாடிக்கையாளர் வந்தார். முதலாமவனிடம் சென்று மீன் விலை விசாரித்தார்.

“ஒரு கிலோ 1 ரூபாய் ஆகும்” என்றான் அவன்.

இரண்டாவதாக மீன் விற்றுக்கொண்டிருந்தவனிடமும், அதே வகை மீன் இருந்ததால், அவனிடம் சென்று விலைக்கு குறைவாகக் கொடுக்கச்சொல்லி, பேரம் பேசி வாங்கலாம் என்று நினைத்து அவனை அணுகி னார். அவனோ, “மீன் விலை ஒரு கிலோ 500 ரூபாய்” என்றான்.

திடுக்கிட்ட அவர், “என்னப்பா இது? அவனும் இதே மீன் வகையை தான் வைத்திருக் கிறான். அவனிடம் விலை 100 என்கின்றான். நீ அதே மாதிரி மீன் 500 ரூபாய் என்கிறாயே. இது நியாயமா?” என்று வினவினார்.

அதற்கு அவன், “பார்க்கத்தான் இரண்டும் ஒரே மாதிரியாகத் தெரியும். ஆனால் என்னுடைய மீன் மிகவும் விசேடமானது. அதனால்தான் கூடுதல் விலை” என்றான்.

“அப்படி என்னப்பா விசேடம்?”

“ஐயா, இது புத்திசாலியான மீன். இதைச் சாப்பிடுபவர்களும் நாளடைவில் புத்திசாலியாகி விடுவார்கள். அதனால்தான் இவ்வளவு விலை”

“உண்மையாகவா ?” வியந்தார் வாடிக்கையாளர்.

“வாங்கிப்பாருங்கள், உங்களுக்கே தெரியும்”

“சரி,சரி, ஒரு கிலோ கொடு”, என்று கூறி, ஒரு கிலோ மீனை 500 ரூபாய்க்கு வாங்கிச் சென்றார்.

அடுத்தடுத்து தொடர்ந்து 6 நாட்களுக்கு அதே மீனை அதே பையனிடம் அதே விலைக்கு வாங்கிச் சென்று சாப்பிட்டு வந்தார். ஆனால், எந்த மாற்றமும் அவருக்குத் தெரியவில்லை. அப்போதுதான் அவருக்குப் புரிந்தது “புத்திசாலி மீன்” என்று அவன் சொன்னது எல்லாம் வெறும் பித்தலாட்டம் என்று.

கடுமையான கோபம் வந்துவிட்டது அவருக்கு. அவனிடம் சென்று அவர், “அயோக்கியப் பயலே! உன் பேச்சைக்கேட்டு ஒரு வாரமாக நானும் அந்த மீனை வாங்கிச் சாப்பிட்டுப் பார்த்தேன். அணுவளவும் முன்னேற்றம் இல்லை. புத்திசாலி மீனும் கிடையாது, ஒரு மண்ணும் கிடையாது. என்னை ஏமாற்றிவிட்டாய். உடனடியாக என் பணத்தையெல்லாம் திருப்பித் தந்துவிடு. இல்லையென்றால் உடனடியாகப் பொலிஸைக் கூப்பிட்டுவிடுவேன்” என்று கத்தினார்.

அதற்கு அவன் நிதானமாகச் சொன்னான்.

“ ஐயா, இந்த மீனை புத்திசாலி மீன் என்று நான் ஒரு வாரத்திற்கு முன்னால் சொன்னபோது நீங்கள் ஆட்சேபிக்கவேயில்லை. இப்போது பாருங்கள், ஒரு வாரத்திலேயே இது புத்திசாலி மீன் இல்லை என்று நீங்களே கண்டுபிடித்துவிட்டீர்கள். என்ன பிரமாதமான முன்னேற்றம்! இதைப் போய் முன்னேற்றம் இல்லை என்று சொல்கிறீர்களே. இதையே தொடர்ந்து சாப்பிடுங்கள். இன்னும் பிரமாதமான முன்னேற்றம் கிடைக்கும்”

வாடிக்கையாளர் வாயடைத்து நின்றார்.

வலையில் கண்டது




# நன்றி மறவா தங்கவேலு





தன் வாழ்நாளில் இறுதி காலம் வரை தீபாவளி தினத்தில் ஒரு வழக்கத்தை கடைபிடித்து வந்தார் நடிகர் டணால் தங்கவேலு.

ஒவ்வொரு தீபாவளி அன்றும் புத்தாடைகள் அணியாமல் சாரமும் குல்லாவும் மட்டுமே அணிவார். அதற்கு ஒரு நெகிழ வைக்கும் காரணம் இருந்தது. அது பற்றி அவரே ஒரு பேட்டியில் சொல்லி இருக்கிறார்.

“சிறுவயதில் யதார்த்தம் பொன்னுசாமி நாடகக் குழு துவங்கி, பல்வேறு குழுக்களில் நடித்தேன். நாடகங்களில் நடிக்கும் போது வருவாய் குறைவாக இருந்ததால், சிரமமான சூழ்நிலையில் இருந்தேன்.

ஒருமுறை தீபாவளி அன்று பணம் இல்லாததால் புத்தாடை எடுக்கவில்லை. அப்போது, அந்தப் பகுதியில் புடவைக்கடை வைத்திருந்த பிரமுகர் ஒருவர், நாடகக் குழுவில் இருந்த அனைவருக்கும் சாரம் அன்பளிப்பாக வழங்கினார்.

அன்று நாங்கள் அனைவரும் சாரம் மற்றும் குல்லா அணிந்து தீபாவளியை மகிழ்ச்சியுடன் கொண்டாடினோம். பிற்காலத்தில் என்னதான் வசதி வாய்ப்புகள் வந்தாலும் அந்த முஸ்லிம் பிரமுகரின் நினைவாக தீபாவளி அன்று சாரமும் குல்லாவும் மட்டுமே அணிந்து கொள்வேன்...” என்று தன் நன்றி மறவா பண்பை பேட்டியில் வெளிப்படுத்தி இருந்தார் தங்கவேலு.

# சரியான தீர்ப்பு



ஒருவரை நீண்ட நாட்களாக காணவில்லை. அவர் கொலை செய்யப்பட்டிருக்கக் கூடும் என்று கருதிய பொலிஸார், சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்து நிதிமன்றத்தில் நிறுத்தினர்.

மேற்படி வழக்கு விசாரணைக்கு வந்தது..

குற்றம் சாட்டப்பட்டவரின் சட்டதரணி எழுந்து, “மைலோர்ட்..! இவர் யாரைக் கொலை செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்டதோ, அவரே இன்னும் ஐந்து நிமிடத்தில்.. இதே நீதிமன்றத்தின் நுழைவு வாயிலின் வழியே உள்ளே வரப் போகிறார்.. நீங்கள் அதைப் பார்த்த பின்பு, இவர் குற்றமற்றவர் என்பதை உணர்வீர்கள்..” என்று கூறி அமர்ந்துவிட்டார்.

நீதிபதி உட்பட எல்லோரும் நீதிமன்றக் கதவையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்..

5 நிமிடம்.. 10 நிமிடம்.. என நேரம் கழிந்தது..

ஒருவரும் வரவேயில்லை..

இப்போது வழக்கறிஞர் எழுந்தார்.. “மைலோர்ட்! நீங்கள் உட்பட யாருமே காணாமல் போனவர், கொலைதான் செய்யப்பட்டுள்ளார் என்பதை முழுமையாக நம்பவில்லை. அதனால்தான் எல்லோரும் வாசலையே பார்த்துக் கொண்டிருந்தீர்கள்.. எனவே, உங்களுக்கு இருக்கும் சந்தேகத்தின் பலனை குற்றம் சாட்டப்பட்டவருக்கு அளித்து, அவரை விடுதலை செய்ய வேண்டும்..” என்று கூறிவிட்டு கம்பீரமாக அமர்ந்தார்..

பிற்பகலில் நீதிபதி தீர்ப்பை வாசித்தார்..

குற்றவாளிக்கு ஆயுள்தண்டனை அளித்தார்..

வக்கீல் எழுந்து, “எப்படி மைலோர்ட்..?” என்று கேட்டார்..

அதற்கு நீதிபதி.. “அந்த பத்து நிமிடமும் நான் வாசலைப் பார்த்தது உண்மைதான்.. ஆனால், ஒருதடவை கூட குற்றம் சாட்டப்பட்டவர் வாசலைப் பார்க்கவில்லை..” என்றார்.



## பாம்புகளில் தனித்துவமிக்க இராஜநாகங்கள்

விஷப்பாம்புகளில் பெரிய பாம்பு தான் இராஜநாகம். இது அதிகபட்சமாக 18 அடி நீளத்துக்கு வளரும். தன் நீளத்தில் மூன்றில் இரண்டு பங்கு உயர்த்திற்கு எழுந்து நிற்கும் திறனுடையது. நன்றாக மரம் ஏறும், நீச்சல் அடிக்கும் திறனும் கொண்டதாம்.

ஆனால், இராஜநாகங்கள் சரியான பயந்தாங்கொள்ளி அதாவது கூச்ச சுபாவம் கொண்டவையாம். சிறு சத்தம் கேட்டால் கூட ஓடி ஒளிந்துவிடுமாம். இதன் தலையில், கிரீடம் போன்ற அலங்காரம் இருக்குமாம். அவ்வப்போது தங்கள் இணைகளை கடிக்குமாம் ஆனால் விஷம் இல்லாமல். மேலும் இவை, நீண்ட ஆயுள் உடைய சிறந்த வேட்டைக்காரர்கள் என்று அழைக்கப்படுகின்றன.

அதேசமயம், இராஜநாகங்கள் 300 அடி தொலைவுக்குள் தன் இரையை பார்க்கும் வலிமைப்பெற்றவை. இவை, நேரடியாக நரம்பு மண்டலத்தைத் தாக்கி, மயக்கத்தை உண்டாக்கி, தூக்க நிலைக்கு செல்லவைத்து பிறகு சாகடிக்கும் விஷத்தன்மை கொண்டவை.

மேலும் இவை, குறைவாகவே மனிதர்களை தாக்குகின்றன. அதேநேரம், யானையை ஒரே கடியில் சாய்க்குமளவுக்கு தன்னுள் கடுமையான விஷத்தைப் பெற்றவை. அதே விஷம் ஒரே நேரத்தில் 20 மனிதர்களை சாகடிக்கக் கூடியது. தன் உடலின் நீளத்தில், மூன்றில் ஒரு பங்கு உடலை தூக்கி நிற்கக்கூடிய திறன் பெற்ற இராஜநாகங்கள், மேற்கிந்தியாவிலேயே அதிகமாக காணப்படுகின்றன.

காய்ந்த இலைகள், காய்ந்த மூங்கில் தழைகளைக் கொண்டு தன் முட்டைகளை மூடி அதற்கு தேவையான சீதோஷ்ண நிலையை உருவாக்குகின்றது. இதனை ஒரு மலைப்போல் ஒரு அடி உயரத்திற்கு முட்டைகளின் மேல் கூட்டிவைத்து தன் முட்டைகளை காக்கிறது.

அதிகபட்சமாக 24 முட்டைவரை இடக்கூடியவை, ஆனால், எத்தனை முட்டைகள் இட்டாலும், அவற்றில் பிழைத்து வருவது என்னவோ 1-2 இராஜநாகங்கள் மட்டுமே.

## முதலைகளும் நீர் யானைகளும்

நீர்யானை இறைச்சியை உண்பதில்லை. ஏனெனில் இது ஒரு தாவரவகை விலங்கு, ஆனால், முதலைகள் இறைச்சியை மட்டுமே உண்கின்றன. எனவே, நீர்யானையை விட முதலை வலிமையானது என்று நினைத்தால், அது முற்றிலும் தவறு.

நீர்யானை ஒரு ஆக்ரோஷமான விலங்கு, அதன் எடை கிட்டத்தட்ட 1,800 கிலோ மற்றும் உயரம் 1.6 மீ. ஆகும். நீர்யானைகள் 180 டிகிரியில் வாயைத் திறக்கும், மேலும் அவற்றின் கடிக்கும் வலிமை ஒரு சதுர அங்குலத்திற்கு 2,000 பவுண்டுகள். முதலைகள் கடிக்கும் வலிமையும் அதிகம். ஆனால் அது வயது வந்த நீர்யானையுடன் விளையாடுவதில்லை. நீர்யானை கணிக்க முடியாத விலங்கு. முதலை அதைக் கோபப்படுத்தினால், நீர்யானை முதலையை எளிதில் கடித்து கொல்லும். எனவே, பெரும்பாலும் முதலைகள் நீர்யானை குட்டிகளைத் தாக்குகின்றன இல்லையெனில் இறந்த நீர்யானைகளை உண்ணுகின்றன.

நீர்யானைகள் உலகில் உள்ள ஆபத்தான விலங்குகளில் ஒன்றாகும். எனவே, சிங்கங்கள் உட்பட பெரும்பாலான விலங்குகள் நீர்யானையுடன் சண்டையிட விரும்புவதில்லை.



# அதிசய இடம்பெயர்வு

ஜூலை முதல் ஒக்டோபர் வரையிலான மாதங்களில் ஒவ்வொரு வருடமும் 2 மில்லியன் விலங்குகள் தான்சானியாவில் இருக்கும் செசெங்கட்டி தேசிய **(Serengeti National)** பூங்காவிலிருந்து கென்யாவிலிருக்கும் மாசாய் மாறா தேசிய ஒதுக்ககத்துக்கு **(Maasai times reyular Mara National Reserve)** இடம்மாறுகின்றன.



இந்த இடப்பெயர்வு, உலகின் நவீன அதிசயங்களில் ஒன்றாகும். இப்படி இடம் மாறும் விலங்குகளில் வரிக்குதிரைகள், ஆபிரிக்க மான்கள் **(Wildebeest)** ஆகியவை அதிகம் இடம்பிடிக்கின்றன.

தான்சானியாவிலிருந்து கென்யா செல்லும் வழியில் விலங்குகள், மாறா **(Mara)** என்ற ஆற்றைக் கடக்க வேண்டும். இதில் மேலதிக சிறப்பு என்னவென்றால், இடம்பெயரும் இந்த விலங்குகள் மாறா ஆற்றிலிருக்கும் எக்கச்சக்கமான முதலைகளுக்கு உணவாகாமல் ஆற்றைக் கடப்பது தான்.

முதலைகளிடமிருந்து தப்பித்து மாசாய் மாறா சென்றால், அங்கும் ஆபத்து காத்திக்கின்றனது. காரணம், இவ்விடத்தில் சிங்கங்களின் எண்ணிக்கையும் அதிகம், மக்களால் வேட்டையாடப்படும் விலங்குகளின் எண்ணிக்கையும் அதிகம். இத்தனை ஆபத்துகள் இருந்தாலும் ஒவ்வொரு வருடமும் உணவுக்காகவும், குடிநீருக்காகவும் இடம்மாறும் விலங்குகளின் எண்ணிக்கை மட்டும் குறையவில்லை.

# விடுதலை நாள்!

ஒரு நாள் நள்ளிரவில் மனைவி தன் கணவன் படுக்கை அறையில் இல்லாமல் இருப்பது கண்டு அச்சமுற்றாள்!

மாடியில் படுக்கை அறை! கீழே சமையல் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது .

அமைதியான இரவில் அழுகை சத்தம் கேட்டது!

கீழே இறங்கி என்னவென்று பார்த்தால் அங்கே கணவன் கையில் தேநீர் கோப்பையுடன் கண்ணீர் மல்க இருந்தான்!

மனைவி கணவன் அருகே வந்து “என்ன ஆச்சு!” என்று கேட்டாள். அதற்கு கணவன் “உனக்கு ஞாயாபகம் இருக்கிறதா நாம் சரியாக காதலிக்க ஆரம்பித்து 20 வருடம் ஆகிறது.

மனைவி “ஆம் ஞாபகம் இருக்கிறது” என்றாள்.

“அன்று ஒருநாள் ஏரிக்கரையில் நீயும், நானும் இருக்கும்போது தந்தையிடம் அகப்பட்டு கொண்டோமே!”

(கணவன் இவ்வளவு விடயங்களை ஞாபகம் வைத்துள்ளான் என்று மனதில் பூரித்துக்கொண்டாள் மனைவி!)

மனைவி “ஆம் ஞாபகம் இருக்கிறது” என்றாள்.

கணவன் வார்த்தை தடுமாற “உன் தந்தை அப்பொழுது என்ன சொன்னார் தெரியுமா?”

“கழுத்தில் அருவாளை வைத்து உனக்கு இரண்டு வாய்ப்பு தருகிறேன். ஒன்று மரியாதையாக என் மகளை திருமணம் செய்துகொள் அல்லது 20 வருடம் உன்னை சிறைக்கு அனுப்புவேன்” என்றான்.



மனைவி “ஆம் ஞாபகம் இருக்கிறது அதற்கு இப்போது ஏன் அழுகிறீர்கள்?”

கணவன் “நான் பேசாம ஜெயிலுக்கு போய் இருக்கலாம். சரியாக இன்றோடு 20 வருடம் முடிகிறது! இன்று எனக்கு விடுதலை கிடைத்திருக்கும்” என்றான் மிகவும் சோகமாக.

அதைக்கேட்ட மனைவி பதில் சொல்ல முடியாமல் வாயடைத்து போனாள்...!




# இளவயதில் முதுமைத் தோற்றம்

## தீர்வு என்ன?

**இளம் வயதிலேயே முதுமையான தோற்றத்தை அடைவதற்கு மிக முக்கிய காரணம் ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறையே என்கின்றனர் மருத்துவ வல்லுனர்கள். முக்கியமாக, ஆரோக்கிய உணவு உட்கொள்ளாமை, உடற்பயிற்சி செய்யாமை, மது அருந்துதல், புகைப்பழக்கம், அதிகப்படியான 'கஃபைன்' பயன்பாடு, மன அழுத்தம், தூக்கமின்மை போன்ற காரணங்களால் குறிப்பிட்ட வயதுக்கு முன்பாகவே முதுமையான தோற்றம் ஏற்பட்டு விடுகிறது.**

### தீர்வுகள்

◆ துரித உணவுகள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளை உட்கொள்வது முதுமைத் தோற்றம் ஏற்படுவதைத் துரிதப்படுத்துகிறது. இப்பிரச்சினைகளைத் தவிர்க்க, கோப்பி, தேநீர், மது போன்றவற்றைத் தவிர்க்க வேண்டியது அவசியம்.

◆ பச்சை காய்கறிகள், பல்வேறு நிறங்களுடைய இயற்கையான உணவுப் பொருட்களை அதிகமாக உட்கொள்ள வேண்டும். கார்போஹைட்ரேட் மற்றும் கொழுப்புச்சத்து அதிகமுடைய உணவுகளைத் தவிர்த்து, புரதச்சத்து அதிகம் உள்ள உணவுகளை எடுத்துக்கொள்ளலாம்.

◆ தண்ணீர் குடிப்பது மிக முக்கியமான ஒன்று. ஒரு நாளைக்கு சராசரியாக 6-8 கோப்பை தண்ணீர் அருந்த வேண்டும். இரவு உறக்கம் சரியாக இருந்தால்தான் உடலில் கொழுப்பு, தசை, திசுக்கள், எலும்பு போன்றவற்றை முறைப்படுத்தும் வளர்ச்சி ஹோர்மோன் சுரப்பு இயல்பாக இருக்கும். அது உடலையும் சீராக வைத்திருக்கும். இதைக் கடைப்பிடிக்காத பட்சத்தில், நம் உடலில் உள்ள உறுப்புகள் சீராக செயல்படாது. எனவே, இரவு 8 மணி நேர உறக்கம் அவசியம்.

◆ காலை 11 மணி முதல் 4 மணி வரை புற ஊதாக்கதிர்களின் வீச்சு அதிகமாக இருக்கும். இந்த நேரத்தில் வெளியே சென்றால், அவை நமது சருமத்தை பாதித்து வயதான தோற்றத்தைக் கொடுக்கலாம். எனவே, சூரியன் சுட்டெரிக்கும்போது வெளியே செல்வதைத் தவிர்த்துவிட வேண்டும். அப்படிச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் தலை முதல் கால் வரை அனைத்தையும் கவர் செய்துவிட்டு செல்ல வேண்டும். முகம், கழுத்து போன்ற வெயிலுக்கு வெளிப்படும் இடங்களுக்கு சன்ஸ்கிரீன் போட்டுக் கொள்ளவதோடு சன் கிளாஸ் அணியலாம். வெய்யில் நேரத்தில் கடற்கரை, நீச்சல்குளம் உள்ளிட்ட மணல் மற்றும் தண்ணீர் இருக்கும் இடங்களுக்குச் செல்ல வேண்டாம். காரணம், அது போன்ற இடங்களில் வெப்பம் அதிகமாக இருப்பதால் சருமத்தை பாதிக்கும்.

◆ இளநரை வருவதற்கு மரபணு, விட்டமின் குறைபாடு, மன அழுத்தம் போன்றவை காரணங்களாக அமைகின்றன. வெண்புள்ளி பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் தலைமுடி சீக்கிரம் நரைத்துவிடும்.

◆ சுற்றுச்சூழல் மாசுபாடுகளும் இளம் வயதில் தலை முடி நரைப்பதற்கான வாய்ப்புகளை அதிகப்படுத்துகின்றன. விட்டமின் 'B'12, விட்டமின் D3, இரும்புச்சத்துக் குறைபாடுகளும் இளநரையை ஏற்படுத்தலாம். விட்டமின் குறைபாடுளால் ஏற்படும் இளநரையை சரிசெய்து விடலாம். மரபணு குறைபாடுகளால் ஏற்படும் இளநரையின் வேகத்தைக் கட்டுப்படுத்தலாம். இவை அனைத்தையும் விட மன அழுத்தம் இல்லாத வாழ்க்கையை வாழ வேண்டியது முக்கியமான விடயம். மன அழுத்தம், கவலை போன்றவை வயதான தோற்றம் ஏற்பட காரணமாகலாம்.




**பெண்கள் கட்டாயம் ஒரு கப் பால் குடிப்பது அவசியம். இது எலும்புகளை வலுவாக்கி கல்சிய சத்தை அதிகரிக்கும்.**





**மார்பகப்புற்று உள்ளிட்ட பல்வேறு புற்று நோய்கள் வராமல் தடுக்க அப்பிள் உதவுகிறது.**



**வாழைப்புழத்தில் இருக்கும் பொட்டாசியம் குழந்தைகளின் மூளைத்திறனைத் தூண்டுகிறது.**






**நிறைய தண்ணீர் குடிப்பது, சிறுநீர் கற்களை அகற்ற உதவும். கரட், திராட்சை மற்றும் தோடம்புழச்சாறு என்று ஏதாவது ஒன்றை அருந்துவது மிகவும் நல்லது.**

**பல்லில் வலி, ஈறுகளில் வீக்கம், வாயின் வெளிப்புறத்தில் வீக்கம், பல் கறுப்பு நிறமாக மாறுவது, பல்லில் குழி ஏற்பட்டு உணவு தங்குவது, குளிர்ந்த மற்றும் சூடான உணவு உட்கொள்ளும்போது கூச்சம் ஏற்படுவது போன்றவை பற்சொத்தை ஏற்படுவதற்கான அறிகுறிகள்.**





**தேவையற்ற அழுக்குகள் சருமங்களில் தங்கி, அதன் பொலிவையும், உயிர்ப்பையும் கெடுக்கின்றன. எனவே, முகத்தை அடிக்கடி கழுவிச் சுத்தப்படுத்துவது அவசியமானது.**

# சுருக்கமில்லாத முகத்துக்கு இப்படி மசாஜ் செய்யுங்கள்

**முகத்தைச் சுத்தமாக வைத்திருந்தாலே முகம் பொலிவுடன் பளபளப்பாக இருக்கும். ஆனால், வயது கூடும்போது ஏற்படும் சுருக்கத்தைப் போக்க அழகுக் கலை நிபுணர்களும், மருத்துவர்களும் தரும் ஒரே அறிவுரை மசாஜ்தான்! முகத்துக்கு செய்யும் மசாஜ்களைப் பற்றி இங்கு பார்ப்போம்.**



### எப்படி மசாஜ் செய்வது?

மசாஜ் செய்வதற்கு விரல் நுனியைத்தான் பயன்படுத்தவேண்டும். மசாஜ் செய்வதற்கு முன்பு முகத்தை மிதமான சுடு தண்ணீரில் நன்றாகக் கழுவிவிட்டு, காய்ச்சாதப் பாலை ஒரு கிண்ணத்தில் எடுத்துக்கொண்டு, சிறிதளவு பஞ்சில் நனைத்து முகத்தை நன்றாகத் துடைத்துவிடுங்கள். சருமத்தில் உள்ள அழுக்குகள் அனைத்தும் வெளியேறிவிடும். அதன் பிறகு முகத்துக்கு 15 நிமிடங்களும், கழுத்துப் பகுதிக்கு 5 நிமிடங்களும் மசாஜ் செய்யவேண்டும். வாரத்துக்கு இரண்டு நாட்கள் காலை மற்றும் இரவில் மசாஜ் செய்து கொள்ளவேண்டும்.

### எதைக்கொண்டு மசாஜ் செய்வது?

கொய்யா, பப்பாளி, வாழைப்பழம், அப்பிள் போன்ற நன்கு கனிந்த பழங்கள், தக்காளி, வெள்ளரிக்காய், கெரட் போன்ற காய்கறிகளில் ஏதாவது ஒன்றின் மசியல் கொண்டு மசாஜ் செய்யலாம். அல்லது, நல்லெண்ணெய், பாதாம், ஒலிவ் போன்ற எண்ணெய், இளநீர், 2 துளி தேன், தேங்காய்ப் பால் ஆகியவற்றைக் கொண்டும் மசாஜ் செய்யலாம்.

காய்ச்சாத பால் அல்லது தேங்காய்ப் பால் கொண்டு முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளுக்கு மசாஜ் செய்தால் அவை பளிச்சிடும். இதை "தெரபிஸ்ட் மசாஜ்' என்றழைப்பார்கள். மசாஜ் செய்கிறபோது கைகளை அவ்வப்போது தோடம்பழச் சாற்றில் நனைத்துக் கொண்டு செய்யலாம். மசாஜ் செய்யும்போது, எப்போதுமே கீழிருந்து மேல்நோக்கித்தான் செய்யவேண்டும். மேலிருந்து கீழ் நோக்கிச் செய்தால் சதைப் பகுதி தொங்கிவிடும்.

### நெற்றி

சிலருக்கு நெற்றியில் வரிகள் தோன்றுவது, சருமம் இறுகுவதால்தான். நெற்றிக்கு மேல் வகிட்டில் இருந்து இரண்டு பக்கமும் அரை வட்டமாகத் தைலம் தடவுவது போல் மசாஜ் செய்யுங்கள். இதனால், நெற்றியில் உள்ள 'வரி'கள் காணாமல் போகும்.

### புருவம்

இரு புருவங்களையும் தேங்காய் எண்ணெயால் கட்டை விரல், ஆட்காட்டி விரலால் நன்றாக நீவி விட வேண்டும். இதனால் புருவம் 'வில்' போன்று நன்றாக வளரும்.

### கண்கள்

இரு புருவங்களுக்கு நடுவில் மூக்குப் பகுதியில் இருந்து கண்ணைச் சுற்றி மசாஜ் செய்வதை 'மைண்ட் மசாஜ்' என்பார்கள். மிகவும் கவனத்துடன் இந்த மசாஜை செய்தால், கண்களைச் சுற்றி இருக்கும் கருவளையம் மறைந்து முகம் பளிச்சென மாறும்.

# நகைகளை சுத்தம் செய்ய...!

● முழு நாளும், நகையை அணிய வேண்டிய அவசியமில்லை. அவற்றை அடிக்கடி சுத்தப்படுத்திப் பயன்படுத்தலாம். இது அப்பொருள் நீடித்த நாள் பயன்பாட்டிற்கு வழிவகுக்கும்.

● தொடர்ந்து நகைகளை அணிவது சருமத்தை எரிச்சலடையச் செய்யலாம். அதோடு நகைகளின் இடுக்கில் அழுக்குகள் சிக்கும் நிலையில், ஏதேனும் காயங்கள் இருந்தால் அவை நோய்தொற்றுகளுக்கு வழிவகுக்கும். தூக்கத்தின் போது நகைகள் உடைந்து விடுவதற்கும் வாய்ப்புண்டு.

● நகைகளுக்கு மேல் போடப்படும் மேக்கப்பால் நகைகளுக்குக் கீழே உள்ள தோலின் நிறம் மாறுவதற்கும், கரும்புள்ளிகள் மற்றும் வெள்ளைப் புள்ளிகள் ஏற்படவும் வாய்ப்புண்டு.

● குளிப்பதற்கும் உறங்குவதற்கும், உடற்பயிற்சி செய்வதற்கும் முன் நகைகளைக் கழற்றிவிடுவது நல்லது.

● விரைவாக நகைகளைச் சுத்தம் செய்ய ஒரு மென்மையான துணியினால் அவற்றைத் துடைக்கலாம்.


● முழுமையாகச் சுத்தம் செய்ய வாரத்திற்கு ஒருமுறை 10-15 நிமிடங்கள் வரை வெதுவெதுப்பான சவர்க்கார நீரில் நகைகளை ஊற வைக்கலாம்.



# ஒரு இனத்தின் வாழ்க்கைமுறையை தத்ரூபமாக எடுத்துச் சொல்லும் நாவல்

## குற்றப் பரம்பரை

ஒரு இனத்தின் பண்பாடு, வரலாறு, வாழ்க்கை முறையை தத்ரூபமாக எடுத்துச்சொல்லும் நாவல் "குற்றப் பரம்பரை.




வருடங்கள் சில கடந்த பின்னரும் பேசப்படும் ஒரு நாவல் இது. அது குறித்த சில விபரங்கள் வருமாறு;

**நூலின் பெயர் - குற்றப் பரம்பரை,**
**நூல் ஆசிரியர் - வேல ராமமூர்த்தி**
**பக்கங்கள் - 448**

வேல ராமமூர்த்தியால் எழுதப்பட்ட "குற்றப் பரம்பரை " என்னும் 448 பக்கங்களைக் கொண்ட இந்நாவலில் விறுவிறுப்பான முறையில் கதை நகர்ந்து செல்கின்றது. கதையின் களங்களாக கொம்பூதி, பெரும்பச்சேரி, பெருநாழி ஆகிய கிராமங்கள் காணப்படுகின்றன.

வேல ராமமூர்த்தி இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஓர் எழுத்தாளர் ஆவார். இவர் குருதி ஆட்டம், பட்டத்து யானை உள்ளிட்ட தமிழ் நாவல்களை எழுதியுள்ளார். இவர் எழுதிய கதைகள் தொகுக்கப்பட்டு வேல ராமமூர்த்தி கதைகள் என வெளியிடப்பட்டுள்ளது. பல்கலைக்கழகப் பாடங்களாகவும் முனைவர் பட்டங்களுக்கான ஆய்வுக் களஞ்சியமாகவுமான இவரது கதைகள், அனைத்து இந்திய மொழிகளிலும் ஆங்கிலம், பிரெஞ்சு, மலாய், கொரியன் மற்றும் சீன மொழிகளிலும் ஆக்கம் செய்யப்பட்டுள்ளன.

கள்ளர் வாழ்க்கையினை பிரதிபலித்துக் காட்டும் இந்நாவலில் களவெடுத்து உயிர் வாழ்வது பிழையான செயல் எனக்கருதாது அதனை தமது குலத்தொழிலாக நினைத்து தொடர்ந்து களவுத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள் கொம்பூதி கிராமத்து மக்கள். இராணுவம் எவ்வளவுதான் கூறியும் கொம்பூதி மக்கள் களவுக்கு செல்வதை நிறுத்தாமல் தொடர்கின்றார்கள். இறுதியில் சிறுவயதில் இராணுவத்தினால் கடத்திச் செல்லப்பட்டு வெள்ளைக்கார தம்பதியினரால் வளர்க்கப்பட்ட கள்ளர் இன மக்களின் தலைவரான வேயன்னாவின் மகன் சேது "இனி களவுக்கு போகக்கூடாது" என சத்தியம் வாங்குகின்றான். இதன் பிற்பாடு வருகின்ற சம்பவங்கள் நாவலை ஒரே மூச்சாக வாசித்துவிட வழிசமைக்கின்றன.

ஒரு பின்னல் முறையில் தனது கதையை மிகவும் அழகாக படைத்துள்ளார் கதாயாசிரியர்.

வேயன்னா என அழைக்கப்படும் வேலுச்சாமியின் பெயரை யாருமே உச்சரிப்பதில்லை. அவர் மீது கொண்ட மரியாதை காரணமாக எல்லோரும் வேயன்னா என்றே அழைக்கின்றனர். இவ்வாறு அழைக்கப்படுவதன் மூலம் வேலுச்சாமி எனப்படும் மனிதரின் மதிப்பு வாசகர்களால் உணரப்படுகின்றது.

காதல், பாசம், துரோகம், ஏமாற்றி பிழைத்தல் போன்ற மனிதனுக்கே உரிய குணவியல்புகள் பலதையும் அக்குணவியல்புகளால் உண்டாகும் நன்மை, தீமைகள் பற்றியும் அழகாக இலகுவான நடையில் எடுத்துச்சொல்லி உள்ளார் கதாயாசிரியரான வேலராமமூர்த்தி. தாழ்த்தப்பட்ட மக்களான பெரும்பச்சேரி மக்களின் அடக்குமுறைகள் பற்றியும் ஆங்காங்கே அழகாக எடுத்துரைத்துள்ளார்.

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது கள்ளர் இனத்தின் பண்பாடு, வரலாறு, வாழ்க்கைமுறை என்பவற்றை தத்ரூபமாக எடுத்துச்சொல்லும் நாவலாக "குற்றப் பரம்பரை" விளங்குகின்றது எனலாம்.


**- அ.சிவரூபினி -**




# ஈழத்து தமிழ் நாடகத்துறையின் ஆளுமை குழந்தை ம.சண்முகலிங்கத்தின் மறைவு






ஈழத்து தமிழ் நாடகத்தின் பெரும் ஆளுமை, நாடக அரங்க கல்லூரி யின் ஸ்தாபகர், ஈழத்து சிறுவர் நாடக தந்தை என அழைக்கப்படும் குழந்தை ம.சண்முகலிங்கம் கடந்த 17/01/2025 அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார். குழந்தை ம.சண்முகலிங்கம் நடிகராக, நாடகாசிரியராக, நெறியாளராக, தயாரிப்பாளராக, ஆய்வாளராக, நாடகப் போதானாசிரியராக, நாடகக் களப்பயிற்சியாளராக, உலக நாடக வரலாற்றாசிரியராக, மொழிபெயர்ப்பாளராக, நாடக அரங்கக் கல்லூரி நிறுவுனராக, பன்முக ஆற்றல் கொண்டவராக விளங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் இதுவரை நூற்றி இருபதிற்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியிருக்கிறார். இவற்றில் சில நூலுருவிலும் வந்திருக்கின்றன. நாடக ஆசிரியர்களான சோபாக்கிளிஸ், இப்சன், அன்ரன்–செக்கோவ், பேட்டல்–பிரக்சட், தாகூர் ஆகியோரின் நாடகங்களில் சிலவற்றையும் சில ஜப்பானிய நாடகங்களையும் தமிழில் இவர் மொழிபெயர்த்துள்ளார்.

**The Caucasian Chalk Circle** என்னும் கதையை "கோக்கேசிய வெண்கட்டி வட்டம்" என்னும் பெயரில் மொழிபெயர்ப்பு நாடகமாக தமிழில் தந்திருந்தார். நாடகத்துறைக்கு ஆற்றிய பணிக்காக 2001 இல் கிழக்குப் பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ கலாநிதி பட்டம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அன்னாருக்கு எமது அஞ்சலிகளை தெரிவிக்கின்றோம்.

**இவர் எழுதிய நூல்கள்**

நாடக வழக்கு (அரங்கியற் கட்டுரைகளும், நேர்காணல்களும்), மாதொருபாகம், வேள்வித் தீ, ஒரு பாவையின் வீடு (மொழி பெயர்ப்பு நாடகம்), அன்னை இட்ட தீ கோக்கேசிய வெண்கட்டி வட்டம் (மொழிபெயர்ப்பு நாடகம்)

## இணையம்

இணையம் எம் வாழ்வில் இமயம்
ஒரு தள்ளுகை ஒரு அழுத்தம்
வையகம் வந்துநிற்கும் வாலிபர் கரத்தில்
வைக்கத் தூண்டுமோ! வாவென்றழைக்குமோ!

ஓரடி வைப்பார் இளையரும் அங்கே
ஒன்றித்து விடுவார் அதற்குள்ளே
ஓராயிரம் கருத்துரைகள் கல்விக்கு திண்ணம்
ஒருமித்து களிப்பூட்டும் கலைகள் பலவண்ணம்!

இவற்றோடு நிறைவில்லை இன்னும் பலகண்டீர்
இடர் போக்க எமக்குதவும் இனிமேலும்
இணையத்தின் தொழில் முறைகளாலே
ஈட்டிடலாம் கைநிறைய காசுபணம்-வாரீர்!

இருக்கும் இடம்
தேடி நாடிவரும் அற்புதம்
அனைவரையும்
அசரவைக்கும் சாகசம்
இத்தனையும்
இணையத்தின்
சொற்பதம்
அன்றோ
எம் இளையோரின்
பெருமிதம் இதுவன்றோ!




**- ராஜேஷ்வரி பிரேம்குமார்**

## இறக்கைகள் விரியட்டும்

சித்திரங்களை வரையும் தூரிகை
நாம்.....!
வார்த்தை வண்ணங்கள் கொண்டு
மனித இலட்சியங்களும்
சாதனைகளும் எம்மால் ....
நாம் நினைத்தால் இந்த
யுகத்தின் சாரத்தினை
மாற்றி விடலாம் ....
எம் இறக்கைகள் விரியட்டும்...!



**- தனேஸ்வரி, யாழ்ப்பாணம் -**

## வெலிகம ரிம்ஸா முஹம்மதின்

# "பிஞ்சு மனம்" சிறுகதை நூல் வெளியீட்டு விழா










வெலிகம ரிம்ஸா முஹம்மத் எழுதிய "பிஞ்சு மனம்" சிறுகதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப் பிள்ளை மண்டபத்தில் கலாபூஷணம் கவிஞர் திக்குவல்லை ஸப்வான் தலைமையில் நடைபெற்றது. தமிழ் மணி மானா மக்கீன், கலைஞர் – கவிஞர் எம்.எஸ். அப்துல் லத்தீஃப் ஆகியோர் முன்னிலை வகித்த இந்நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாட் பதியுத்தீன் பிரதம அதிதியாக நிகழ்வில் கலந்து சிறப்பித்தார். "பிஞ்சு மனம்" நூலின் முதற் பிரதியை சமூக தீபம் அல்ஹாஜ் எம்.ஸீ. பஹார்தீன் பெற்றுக்கொண்டார்.

ஜனாப் என். நஜ்முல் ஹுசைன் – திருமதி நூருல் ஐன் குடும்பத்தினர் சார்பில் பொன்னாடை போர்த்தி, பூமாலை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கி நூலாசிரியரை கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

மௌலவி எம்.ஏ. ரம்ஸான் நிலாமியின் கிராஅத்துடன் ஆரம்பித்த இந்த நிகழ்வில் கவிமணி என். நஜ்முல் ஹுசைன் வரவேற்புரை நிகழ்த்தினார். கலாபூஷணம் அல்ஹாஜ் எம்.இஸட். அஹ்மத் முனவ்வர் தொடக்கவுரை மற்றும் ஆசியுரையையும், சத்திய எழுத்தாளர், கலாபூஷணம் எஸ்.ஐ. நாகூர் கனி, வசந்தி தயாபரன், தமிழ் தென்றல் அலி அக்பர் ஆகியோர் வாழ்த்துரைகளையும், வரகாபொல பாபுல் ஹஸன், மத்திய கல்லூரி அதிபர் ஜனாப் ஜே.எம். றாபில் அறிமுக உரையையும், "முன்னணிப் படைப்பிலக்கியவாதி ரிம்ஸா முஹம்மத்" என்ற தலைப்பில் டொக்டர் ச. முருகானந்தனும் உரை நிகழ்த்தினார்கள்.

கவிஞர் ரஷீத் எம். றியாழின் கவி வாழ்த்தும், கலைஞர் திக்குவல்லை என்.எம். ஹிமாயத்துல்லாவின் வாழ்த்துப் பாடலும் நிகழ்வை அலங்கரித்தன. சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸின் நயவுரையைத் தொடர்ந்து, நூலாசிரியர் வெலிகம ரிம்ஸா முஹம்மதின் ஏற்புரையும் நன்றியுரையும் இடம்பெற்றது. இந்த நிகழ்வுகளை திக்குவல்லை ஸும்ரி தொகுத்து வழங்கினார்.

விசேட அதிதி, கௌரவ அதிதிகள், சிறப்பு அதிதிகள், ஊடக அதிதிகள், இலக்கியவாதிகள், இலக்கிய அபிமானிகள் என்று பலரும் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் அனைவரும் நூலின் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர். மண்டபம் நிறைந்திருந்த பார்வையாளர்களோடு நிகழ்வு இனிதே நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# இலக்கியம் இரு வகை



இலக்கியம் என்பது விரிந்த பொருளில் எழுதிய அனைத்தையும் குறிக்கும். இந்த வரையறையின் கீழ் இலக்கியத்தை இரு வகைகளாகப் பிரிக்கலாம் அவை:

1.இன்பியல் இலக்கியம்
2. அறிவியல் இலக்கியம்

"இன்பியல்" இலக்கியம் என்பது கற்போர் உள்ளத்துக்கு இன்பம் தரும் நூல்கள் ஆகும். அறிவியல் இலக்கியம் என்பது கற்போருக்கு அறிவை முதன்மையாகத் தரும் இலக்கியம் ஆகும்.

தமிழ் 2000 வருடங்கள் இலக்கிய வளமும் தொடர்ச்சியும் கொண்ட ஒரு மொழியாகும். எனினும், தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலானவை, இன்பியல் இலக்கியங்களே. இது, "இலக்கிய வளர்ச்சி, அரசர்களையும் குறுநில மன்னர்களையும் சுற்றி வந்ததால்" ஏற்பட்டிருக்கலாம். அதன் விளைவாக இலக்கியம் என்ற சொல் தமிழில் இன்பியல் இலக்கியத்தையே பெரும்பாலும் குறித்து நிற்கின்றது. சிறுகதை, நாவல், கவிதை, நாடகம் ஆகிய எழுத்துக் கலை வடிவங்களே இன்று தமிழ் இலக்கியம் என பொதுவாகக் கருதப்படுகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தான், மேற்கு நாட்டுக் கல்வியைப் பயின்ற மாயூரம் வேதநாயகம் பிள்ளையும், பேராசிரியர் பெ.சுந்தரம் பிள்ளையும் ஆங்கிலத்தில் வழங்கிவரும் "லிட்டிரேச்சர்" (Literature) என்னும் சொல்லிற்குப் பொருத்தமான தமிழ்ச் சொல்லாக "இலக்கியம்" என்ற சொல்லை வழக்கிற்குக் கொண்டு வந்தனர்.



## குறளும் பொருளும்

அதிகாரம் 03: நீத்தார் பெருமை

**குறள் 31** : சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு

**பொருள்** : அறம், நான்கு பேர் முன் நமக்கு மேன்மையைத் தரும் நல்ல செல்வத்தையும் கொடுக்கும். இத்தகைய அறத்தைக் காட்டிலும் மேன்மையானது நமக்கு உண்டா?

**குறள் 32** : அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை மறத்தலின் ஊங்கில்லை கேடு

**பொருள்** : அறம் செய்வதை விட நன்மையும் இல்லை. அதைச் செய்ய மறப்பதை விட கெடுதியும் இல்லை.

ஒருவன் மின்மினி

அன்பு தம்பி, தங்கையரே, இது உங்களுக்கான பக்கம். இதில் உங்கள் சித்திரங்கள், ஆக்கங்கள், பிறந்தநாள் வாழ்த்துகள், உங்கள் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வுகள் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் இப்பகுதி பற்றிய உங்கள் கருத்துகளை நீங்கள் எங்களுடன் வட்ஸப் அல்லது தபால் மூலம் பகிர்ந்துகொள்ளலாம். அவை, ஒருவன் மின்மினி பக்கத்தில் வெளியாகும்.

ஆசிரியர் பீடம், பெல்லாட்ரிக்ஸ் கட்டிடம், 2ஆம் மாடி, டெனிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு – 09 0740162534

# புத்தியே பலம்

புத்தூர் என்ற ஊரில் இளங்கோ என்ற இளைஞன் ஒருவன் இருந்தான். ஆள் பார்ப்பதற்கு சுமாரான உடல் கட்டு கொண்டவனாக இருந்தாலும், அவனால் கடினமான வேலைகள் எதையும் செய்ய முடியாது. இளங்கோவுக்கு மூன்று நண்பர்கள் இருந்தனர். ஆனால், அவர்கள் மிகவும் பலசாலிகள்.

இளங்கோ அவர்களைப் பார்த்து, “தினமும் உடற்பயிற்சி செய்து உடலை பலப்படுத்தி என்ன பிரயோசனம்? மூளையை பலப்படுத்துங்கள். அது தான் வாழ்க்கைக்கு உதவும்!” என்று சொல்லிச் சிரிப்பான்.

அதற்கு அர்கள், “இளங்கோ! உடலை பலப்படுத்தினால் போதும், மூளை தானே பலப்பட்டு விடும். மூளை வலிமையை விட உடல் வலிமையால் உலகத்தில் நிறைய சாதிக்க முடியும். ஹூம்! நோஞ்சான் பயலான உனக்கு உடலைப் பற்றி என்ன தெரியும்!” என்று சொல்லி சிரிப்பர்.

ஒரு நாள் இளங்கோ தனது மளிகைக் கடைக்குத் தேவையான சாமான்களை, மூட்டையாகக் கட்டி சிறு வண்டியில் வைத்து மிகவும் சிரமத்துடன் இழுத்து வந்து கொண்டிருந்தான்.

வழியில் ஒரு பெரிய மேடு குறுக்கிட்டது. அந்த மேட்டின் மேல் வண்டியை இழுக்க முடியாமல் மிகவும் திணறினான் அவன். அப்பொழுது, எதிர் திசையில் இருந்து அவனது மூன்று பலசாலி நண்பர்களும் வந்து கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்த இளங்கோவுக்கு ஒரு யோசனை தோன்றியது.

“விறுவிறு’வென்று கீழே இறங்கி, தன்னிடம் இருந்த கயிற்றின் ஒரு முனையை வண்டியில் கட்டினான். கயிற்றின் மறுமுனையைப் பிடித்துக் கொண்டு மறுபடியும் மேட்டிற்கு ஓடி வந்தான்.

அதற்குள் நண்பர்கள் அவனை நெருங்கி வந்து விட்டனர். உடனே இளங்கோ கயிற்றின் முனையைப் பிடித்தபடியே அவர்களை நெருங்கினான்.

“எனதருமை நண்பர்களே! உங்களுக்கும், எனக்கும் கயிறு இழுக்கும் போட்டி. நீங்கள் மூன்று பேரும் இந்த முனையைப் பிடித்துக் கொண்டு இழுங்கள். நான் மறுமுனையைப் பிடித்துக் கொண்டு இழுக்கிறேன். யார் ஜெயிக்கிறார்கள் என்று பார்ப்போம்!” என்றான் இளங்கோ.

அதைக் கேட்ட அவர்கள், “நோஞ்சான் பயலான உனக்கும், பலசாலிகளான எங்களுக்கும் கயிறு இழுக்கும் போட்டியா? வெளியே சொன்னால் எங்களுக்குத்தான் அவமானம். போய் வேறு ஏதாவது வேலையிருந்தால் பார்!” என்றனர்.

அதற்கு அவன், “இதோ பாருங்கள். ஆளைப் பார்த்து எடை போடாதீர்கள். எனக்குள் இருக்கும் பலம் உங்களுக்குத் தெரியாது. நீங்கள் உண்மையான பலசாலிகளாக இருந்தால் என்னோடு போட்டியிடுவீர்கள். நீங்களோ போலி. பலசாலிகள் போல வேடம் போடுகிறீர்கள்!” என்று அவர்களைச் சீண்டிவிட்டான்.

“சுண்டைக்காய் பயலே! எங்கள் பலத்தையா போலி என்றாய். உனக்குப் பாடம் கற்பித்தால்தான் புத்தி வரும். பிடி மறுமுனையை ஒரே ஒரு இழுதான். நீ எங்கோ பறந்து சென்று விடுவாய்!” என்று சொல்லிவிட்டு கயிற்றின் ஒரு முனையைப் பிடித்தனர்.

இளங்கோ மேடு ஏறிப் போய் மறுபடியும் இறக்கத்தில் இறங்கி வண்டியில் கட்டப்பட்டிருந்த கயிறை இறுக்கமாகப் பிடித்தான்.

அந்த மூன்று நண்பர்களும் இளங்கோ தான் கயிறு இழுப்பதாய் நினைத்துக் கொண்டு மிகச் சாதாரணமாய் இழுத்தனர். அவர்கள் நினைத்தது போல் அது அவ்வளவு சாதாரணமாய் இழுபடவில்லை.

திடீரென்று “இளங்கோவுக்கு பலம் இருக்கிறதோ” என்ற சந்தேகம் அவர்களுக்கு உண்டாயிற்று. ஆகவே, கயிற்றை இறுக்கமாகப் பிடித்து இழுத்தனர். ஆனால், இழுப்பது மிகவும் கடினமாக இருந்தது.

மூன்று பேர் முகத்திலும் திகில் பரவியது. ஒரு நோஞ்சான் பயலிடம் தோற்றுப் போனால் அது எத்தனை அவமானம் என்று நினைத்த அவர்கள், தங்கள் பலங்கொண்ட மட்டும் கயிற்றை இழுத்தனர்.

எதிர்ப்பக்கமிருந்த இளங்கோ, தான் இழுப்பதை மெல்ல மெல்ல விட்டுக் கொண்டே இருந்தான். வண்டி இப்பொழுது மெல்ல மேட்டில் ஏறத் துவங்கியது.

இளங்கோ தான் மெல்ல பலத்தை இழந்து மேலே வருகிறான் என்று நினைத்த அவர்களுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகியது. “இந்த நோஞ்சான் பயலுக்கு ஏது இவ்வளவு பலம்” என்று நினைத்தவாறே மீண்டும் கயிற்றை வேகமாக இழுத்தனர்.

கடைசி நேர இழுவையில் சரக்கு வண்டி மேட்டின் மேலே ஏறிவிட்டது. அதைப் பார்த்துக் கொண்டு சிரித்தபடி வந்தான் இளங்கோ. அவர்களுக்கு அப்பொழுதுதான் விடயமே புரிந்தது. இவ்வளவு நேரம் நாம் இழுத்தது இளங்கோவின் வண்டியை என்று.

மூவர் முகத்திலும் ஈயாடவில்லை. இறக்கத்தில் இறங்கி அவர்களிடம் வந்த இளங்கோ, “மூளை பலம் என்பது இது தான்” என்று சொல்லி நமுட்டு சிரிப்பு சிரித்துவிட்டு, தனது வண்டியை சமதளத்தில் மிகவும் இலாவகமாக இழுத்துக் கொண்டு போனான்.






# கடற்குதிரை

### குதிரையின் முகசாயலில் ஒரு மீனினம்

கடற்குதிரை என்பது, மீனித்தை சேர்ந்ததாகும். ஆனால் இது, பார்ப்பதற்கு மீனைப்போல இருக்காது. இதன் முகம் குதிரையின் முகம் போல இருப்பதால் இந்த மீன், கடற்குதிரை என்ற பெயரினைப் பெற்றது.

கடற்குதிரையின் உடல் முழுவதும் தடிமனான செதில்களால் மூடப்பட்டிருக்கும். முதுகின்மேல் ஒரு சிறிய தோல் போன்ற துடுப்பு வளர்ந்திருக்கும். இந்தத் துடுப்புதான் கடற்குதிரை நீந்துவதற்கு உதவுகிறது. இதன் வால் பகுதி நீண்டு சுருண்டு இருக்கும். வாலின் உதவியால் நீர்த் தாவரங்களைப் பற்றிக்கொண்டு நிற்கும்.

ஆண் கடற்குதிரையின் உடலில் ஒரு சிறிய தோல் பை வளர்ந்திருக்கும். பெண் கடற்குதிரை அந்தப் பைக்குள் முட்டையிடும். முட்டையிலிருந்து குஞ்சுகள் பிறந்து பைக்குள்ளேயே வளரும். பிறகு, இரை தேட வெளியே வரும். கடற்குதிரைகளில் 50 வகைகள் உள்ளன. இவற்றுள் சில 30 செ.மீ. நீளம் வரை வளரும். புழு, பூச்சி, மீன், முட்டை ஆகியவற்றை உணவாகக் கொள்கின்றன. வெப்ப மண்டலக் கடல்களில் கடற்குதிரைகள் காணப்படுகின்றன.


## நாயகர்கள் நாட்களிலிருந்து

# லிங்கன் சொன்ன பதில்!

அமெரிக்காவில் கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் தமது பிரசங்கத்தில் சொர்க்கம் பற்றி வர்ணித்துக் கொண்டிருந்தார். அந்தக் கூட்டத்தில் ஆபிரகாம் லிங்கனும் கலந்து கொண்டிருந்தார். பிரசங்கத்தினிடையே பாதிரியார், கூடியிருந்த மக்களை நோக்கி, உங்களில் சொர்க்கத்திற்குச் செல்ல ஆசை உள்ளவர்கள் எழுந்து நில்லுங்கள் என்றார்.

ஆபிரகாம் லிங்கனைத் தவிர அனைவரும் எழுந்து நின்றனர். லிங்கன் அமர்ந்திருப்பதைக் கண்ட பாதிரியார், “நீ ஏன் சொர்க்கம் செல்ல விரும்பவில்லை?” என்று கேட்டார்.

அதற்கு லிங்கன், “நான் தேர்தலில் நிற்கப் போகிறேன். அமெரிக்க நாட்டின் ‘ஜனாதிபதியாகி, அமெரிக்க நாட்டையே சொர்க்க பூமியாக மாற்றப் போகிறேன்” என்றார். சொன்னதுபோல் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார். ஜனாதிபதியாகி நாட்டை வளம் மிக்க நாடாகவும் மாற்றினார்.



## அறியா நகரம்

# சொலமன் தீவுகள்

## (SOLOMON ISLANDS)

சொலமன் தீவுகள் என்பது, மலாய்தா, நியூ ஜோர்ஜியா, சாந்தா குரூஸ் ஆகிய முக்கியமான தீவுகளை உள்ளடக்கிய நாடாகும். அவுஸ்திரேலியாவுக்கு வடகிழக்கில் 1,600 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. கி.பி. 1568இல் கண்டுபிடிக்கப்பட்ட இத்தீவுகள், 1890இல், பிரித்தானியாவின் மேலாதிக்கத்திற்கு உட்பட்டன. இரண்டாம் உலகப் போரின் சில நிகழ்வுகள் இங்கே நடைபெற்றுள்ளன. 1976இல் சுயாட்சி வழங்கப்பட்ட நிலையில், 1978 ஜுலை 7ஆம் திகதி பிரித்தானியாவிடமிருந்து இது சுதந்திரம் பெற்றுள்ளது.

2007ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி இங்கு ஏற்பட்ட மிகப் பெரிய நிலநடுக்கமும் சுனாமியும், இத்தீவுகளை மிகப்பெரியளவில் தாக்கியுள்ளன. இதில் பெரிதும் பாதிப்படைந்தது சிறிய ஜிஸோ (GIZO) தீவாகும்.


தென்மேற்குப் பசுபிக் பெருங்கடலில், 15 முக்கிய தீவுகள் மற்றும் எண்ணற்ற சிறிய தீவுகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இதற்கு, வடமேற்கில் போகைன்வில்லே, வடக்கே சொலமன், கிழக்கே பப்புவா நியூகினியா எல்லைகளாக உள்ளன.



# தெரியுமா?

பனைமரத்தில் ஆண், பெண் என்ற இரு இனம் இருப்பதுபோல் தென்னைமரத்தில் இருப்பதில்லை. இதன் காரணம் என்ன தெரியுமா? அதாவது, ஒரு தாவரத்தில் ஆண் மலர் உள்ள மகரந்தத்தில் காணப்படுவது ஆண் மரம் என்றும், பெண் மலர் உள்ள மகரந்தச் சூலகத் தொகுப்புக் கொண்டது பெண்மரம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த இரு அமைப்புகளுமே ஒரே மலரில் அமையப் பெற்றால் அதை இருபால் மரம் என அழைப்பார்கள்.

அந்தவகையில், தென்னை இருபால் மரமாகும். இதில் ஆண் பூக்களும் பெண் பூக்களும் ஒரே கொத்தில் காணப்படும். தென்னைமரப் பூங்கொத்தின் நுனியில் சுமார் 200 முதல் 300 எண்ணிக்கையில் ஆண் பூக்களும் அடிப்பகுதியில் குறைந்த அளவில் பெண் பூக்களும் உள்ளன. எனவே, ஆண் – பெண் என்ற இனத்தைக் கொண்ட இருபால் மரமாக தென்னை விளங்குகிறது.





# விடுகதைகள்

* பூவுக்குள் பூ வைத்து போர்த்திய பூ. அது என்ன? வாழைப்பூ
* இதயம் போல் துடித்திருக்கும்.. இரவு பகல் விழித்திருக்கும். அது என்ன? கடிகாரம்
* உருவம் இல்லாதவன்.. சொன்னதைத் திரும்பச் சொல்வான். அவன் யார்? எதிரொலி
* யாரும் செய்யாத கதவு.. தானே திறக்கும் தானே மூடும். அது என்ன? இமை
* காலைக்கடிக்கும் செருப்பல்ல.. காவல் காக்கும் நாயல்ல.. அது என்ன? முள்
* அமைதியான சிறுவன், ஆனால் அடிக்காமலேயே அழுவான் அவன் யார்? ஐஸ் கட்டி

ஒருவன் மருத்துவம்

# ஆரோக்கியத்துக்கு வழிகோலும் உலர் பழங்கள் மற்றும் நட்ஸ்



## பேரீச்சம்பழம்

ஒவ்வொரு வயதினருக்கும் ஒவ்வொரு வகையில் பலன் தரும் பேரீச்சம்பழத்தில், இரும்புச்சத்து அதிகமாக உள்ளது. இது பெண்களுக்கு பூப்பெய்தும் காலம் முதல் வயதான காலம்வரை பல்வேறு காலகட்டங்களிலும் உடல் வலிமையையும், ஆற்றலையும் கொடுக்க வல்லது. இரத்தச் சோகை ஏற்படாமலும், அதைக் கட்டுப்படுத்தவும் செய்யும். அசைவ உணவுகளைச் சாப்பிடாதவர்களுக்கு விட்டமின் 'பி' சத்து குறைவாகக் கிடைக்கும். பேரீச்சம்பழம் சாப்பிடுவதன் மூலம் அச்சத்தினை ஈடுகட்டலாம் என்பதுடன், கல்சியம், அயர்ன் சத்துகளும் அதிகமாகக் கிடைக்கும். எலும்புகள் பலம் பெறும்.

இப்பழத்தை, சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சாப்பிடலாம். நாள் ஒன்றுக்கு 2 வீதம் எடுத்துக்கொள்வது மிகச்சிறந்தது.

## வோல்நட்

வோல்நட்டில் இருக்கும் ஒமேகா ஃபேட்டி அசிட் (Omega Fatty Acid) இதயத்துக்கு மிகவும் நல்லது. பலர், வோல்நட் எண்ணெய்யை உணவில் சேர்த்துக்கொள்கின்றனர். அப்படிச் செய்வதை விட, வெறும் வால்நட்டை தினமும் சாப்பிட்டு வந்தாலே நல்ல பலன் கிடைக்குமாம். இதயப் பிரச்சினையின் வீரியத்தைக் குறைக்கும் திறனும் வோல்நட்டுக்கு உண்டு. மற்ற உலர் பழங்கள் மற்றும் நட்ஸ் வகைகளுடன் ஒப்பிடும்போது வோல்நட்டின் சுவை சற்றே கசப்பாக இருக்கும். அதனால் இதன் சுவை பிடிக்காதவர்கள், பிடித்த உணவுகளுடன் இதைச் சேர்த்துச் சாப்பிடலாம். வோல்நட்டில் புரதச் சத்து அதிகம். கொழுப்புச்சத்து குறைவு. எனவே, சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சாப்பிடலாம். நாள் ஒன்றுக்கு ஒரு நபர் அரை வோல்நட் சாப்பிடலாம்.





## பாதாம் பருப்பு

பாதாம் பருப்பைச் சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள், அவற்றை எப்படி சாப்பிடுகிறோம் என்பதிலேயே அடங்கியிருக்கிறது. பாதாம் பருப்பை பச்சையாகச் சாப்பிட்டால் பாதாமின் மேற்பகுதியில் இருக்கும் தோல்பகுதி (Antigen) செரிமானக் கோளாறுகளை ஏற்படுத்தலாம். அதனால் பாதாமை தண்ணீரில் அரைமணி நேரம் ஊறவைத்தோ அல்லது நிலக்கடலையை வறுப்பதுபோல எண்ணெய் சேர்க்காமல் வறுத்து தோல் நீக்கியோ சாப்பிடலாம். பாதாம் பருப்பைச் சாப்பிடுவதால் புரதம் அதிகமாகக் கிடைப்பதுடன் முகப்பொலிவும் சருமப் பொலிவும் அதிகமாகக் கிடைக்கும். சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சாப்பிடலாம். இதயநோய் பிரச்சினை உள்ளவர்கள் சற்றே குறைவாகச் சாப்பிட வேண்டும். நாள் ஒன்றுக்கு 3 – 5 பாதாம் பருப்புகளைச் சாப்பிடலாம்.

## உலர் திராட்சை

இன்றைய சூழலில் பெரும்பாலானோர் மன அழுத்தத்தால் பாதிக்கப்படுகிறார்கள். அதனைக் குறைத்து, தொடர்ந்து மன அழுத்தம் ஏற்படாமல் தவிர்க்கச் செய்யும் திறன் உலர் திராட்சைக்கு உண்டு. கருப்பு மற்றும் வெள்ளை நிறங்களில் இருக்கும் உலர் திராட்சைகளில், கருப்பு உலர் திராட்சை கூடுதல் பலன் தரக்கூடியது. மனிதர்களுக்கு ஏற்படும் ஸ்ட்ரெஸ் பஸ்டர் (Stress Buster) அளவினையும், இரத்த அழுத்தத்தையும் கணிசமான அளவுக்கு குறைக்கும் உலர் திராட்சை, பலருக்கும் அடிக்கடி ஏற்படும் அஜீரணக் கோளாறுகள் வராமலும் தடுக்கும். காய்ச்சல் சமயத்தில் உலர் திராட்சை சாப்பிடுவதால் உடலுக்கு அதிக உற்சாகம் கிடைத்து விரைவில் குணம் பெறலாம். சிறுவர்கள் முதல் வயதானவர்கள் வரை அனைவரும் உலர் திராட்சை சாப்பிடலாம். நாள் ஒன்றுக்கு 5 கிராம் உலர் திராட்சை சாப்பிடலாம்.





## முந்திரி

முந்திரிப் பருப்பில் நார்ச்சத்து அதிகம் உள்ளது. இதனைச் சாப்பிடுவதால் அதிக கலோரி ஆற்றலும், நார்ச்சத்தும் கிடைக்கும். ஆனால், முந்திரிப் பருப்பில் கொழுப்புச்சத்து மிக அதிகமாக இருப்பதால், அதிக அளவில் சாப்பிடக்கூடாது. விளையாட்டு, நீச்சல் என அதிக உடல் உழைப்பைக் கொடுக்கும் குழந்தைகள், இளவயதினர் தினமும் முந்திரிப் பருப்பைச் சரியான அளவில் சாப்பிடலாம். 30 வயதைக் கடந்தவர்கள் அடிக்கடி சாப்பிடக் கூடாது. வயதானவர்கள் முந்திரி சாப்பிடுவதைத் தவிர்க்கலாம். குழந்தைகள், இளவயதினர் நாள் ஒன்றுக்கு 2 முந்திரிப் பருப்பைச் சாப்பிடலாம். 30 வயதுக்கு அதிகமானோர் வாரத்துக்கு ஒருமுறை 2 – 4 என்ற அளவில் சாப்பிடலாம்.

# 'கங்காரு மதர் கெயார்' பற்றி கேள்விப்பட்டதுண்டா?



37 மாதங்களுக்கு முன்பாகவே, பல்வேறு காரணங்களால் பிரசவம் நிகழ்கிறது என்றால், அந்தக் குழந்தையைக் குறைமாத குழந்தை என்பார்கள். அதாவது, குறைமாதத்தில் பிறக்கும் பச்சிளங் குழந்தை, நிறைமாதத்தில் பிறக்கும் குழந்தையைப் போன்று போதுமான வளர்ச்சியை அடைந்திருக்காது. குறிப்பாக, வெளிப்புற சூழலுக்கேற்ப தன் உடல் வெப்ப நிலையைச் சீராக்கும் தன்னியக்க நரம்பு மண்டலம் (Autonomic Nervous System) முழுமையான நிலையை அடைந்திருக்காது.

மேலும், உடல் வெப்பத்தை அதிகரிக்க உதவும் பழுப்புக் கொழுப்புத் திசு (Brown Adipose Tissue) போதுமான அளவு இருக்காது. இந்தக் காரணங்களால், வெளிப்புறத்தின் வெப்பநிலை மிகவும் குறைந்தால், குறைமாத பச்சிளங்குழந்தை தன் உடல் வெப்ப நிலையைச் சீராக்க முடியாமல், அதன் உடல் மைய வெப்பநிலை குறையத் தொடங்கும். இவ்வாறு குறைமாதத்தில் பிறக்கும் குழந்தைகள் மற்றும் 2.5 கிலோவுக்கு கீழ் பிறந்த எடையுள்ள குழந்தைகளுக்கு, தாழ்வெப்ப நிலை ஏற்படும் அபாயம் இருப்பதால், அவற்றுக்கு கூடுதல் பராமரிப்பு மிகமிக அவசியம்.

நூறு ஆண்டுகளுக்கும் மேலாக, இவ்வாறு குறைமாதத்தில் பிறக்கும் பச்சிளங்குழந்தைகள் மற்றும் எடை மிகக் குறைவாக உள்ள பச்சிளங்குழந்தைகளின் வெப்பநிலையைப் பராமரிக்க 'இன்குபேட்டர்கள்' (Incubator) மற்றும் 'ரேடியன்ட் வோர்மர்கள்' (Radiant Warmer) பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும், இன்குபேட்டர்கள் மற்றும் ரேடியன்ட் வோர்மர்களின் அதிக விலை மற்றும் குறைந்த எண்ணிக்கையால், ஒவ்வொரு குறைமாத குழந்தைக்கும் மாதக்கணக்கில், அவற்றைத் தொடர்ந்து உபயோகிப்பது மிகக் கடினம். அதற்கு மிகச் சிறந்த மாற்றாகக் கண்டுபிடிக்கப்பட்டதே 'கங்காரு மதர் கெயார்' (Kangaroo mother care).

1970களில், கொலம்பிய பச்சிளங்குழந்தை மருத்துவர்கள் எட்கர் ரே (Dr. Edgar Rey) மற்றும் ஹெக்டர் மார்டினேஸ் (Dr. Hector Martinez), குறைமாத பச்சிளங்குழந்தைகளின் மரண விகிதம் 70% ஆக இருப்பதை அறிந்து, அதற்கு தீர்வு தேடிக்கொண்டிருந்தனர். அவர்கள் காலை நடைப்பயிற்சியின்போது, ஒரு கிராமத்து பெண்மணி, குறைமாத பச்சிளங் குழந்தையைத் தன் மார்பகத்துக்கு மத்தியில் வைத்திருப்பதைக் கண்டு, அதன் காரணத்தைக் கேட்டனர்.

அதற்கு அவர், தான் அந்தக் கிராமத்தின் பாலூட்டுஞ் செவிலி (Wet nurse) எனவும், குறைமாதத்தில் பிறக்கும் பச்சிளங்குழந்தைகளை, உடல் மீது உடல் படும் வண்ணம், தன் மார்பகங்களுக்கு இடையில் வைத்து, அதன் மேல் பல்வேறு லேயர் வெதுவெதுப்பான ஆடைகளைச் சுற்றிக் கொள்வதாகக் கூறினார். அவ்வாறு தொடர்ந்து செய்யும்போது, குறைமாத பச்சிளங் குழந்தைகள், நன்றாக எடை கூடுவதாகவும், எவ்வித பிரச்சினைகள் இல்லாமல் வளர்வதாகவும் குறிப்பிட்டார். அந்தப் பாலூட்டுஞ் செவிலி கூறியதிலிருந்து உத்வேகமடைந்த இவ்விரு மருத்துவர்களும், இந்தப் பராமரிப்பு முறையைத் தங்களது மருத்துவனையிலுள்ள குறைமாத பச்சிளங் குழந்தைகளுக்கும் செய்யத் தொடங்கினர்.

கங்காரு, கருவாக தனது குட்டியை ஒரு மாதம் கர்ப்பப்பையில் சுமந்தது என்றால், பிறந்த பிறகு சுமார் 8 மாதங்கள் வயிற்றிலுள்ள பையில் சுமக்கிறது. இவ்வாறு கங்காருவைப் போல், குறைமாதத்தில் பிறக்கும் பச்சிளங்குழந்தையை தாயின் மார்பகங்களுக்கு இடையில் உடலுடன் உடல் ஒட்டியவாறே பராமரிக்கும் இந்த முறைக்கு, 'கங்காரு மதர் கெயார்' சுருக்கமாக KMC என பெயரிட்டனர்.

முதன்முதலாக 1983இல், இந்த பராமரிப்பு முறை பற்றி விரிவாக வெளியுலகுக்கு எடுத்துரைத்தனர். இந்த முறையை தங்கள் மருத்துவமனையில் நடைமுறைப்படுத்திய முதல் ஆண்டிலேயே, குறைமாத பச்சிளங்குழந்தைகளின் மரண விகிதம் 70% குறைந்ததாக தங்களது ஆய்வு முடிவில் தெரிவித்தனர். அதைத் தொடர்து, KMC பராமரிப்பு முறை பற்றிய விழிப்புணர்வு உலகம் முழுதும் சென்றடைந்தது. பல்வேறு ஆய்வுகள் மூலம், அதன் நற்பலன்கள் உறுதிப்படுத்தப்பட்டன.

அந்தவகையில், கடந்த 40 வருடங்களில், பல கோடிக்கணக்கான குறைமாத பச்சிளங்குழந்தைகளை KMC பராமரிப்பு முறை, காத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# பனங்கிழங்கு புட்டு



**தேவையான பொருட்கள்:**

பனங்கிழங்கு - 5
பூண்டு - 3 பல்
பச்சை மிளகாய் - காரத்திற்கேற்ப
சீரகம் - 1 தேக்கரண்டி
உப்பு - சுவைக்கு

**தாளிக்க:** கறிவேப்பிலை, எண்ணெய்

**செய்முறை:**

- பச்சை மிளகாய், பூண்டு, சீரகத்தை கொரகொரப்பாக அரைத்துக் கொள்ளவும்.
- பனங்கிழங்கை தோல் நீக்கி வேகவைத்துக் கொள்ளவும். கிழங்கு வெந்ததும் நாரை நீக்கி விட்டு சிறிய துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.
- நறுக்கிய பனங்கிழங்கு துண்டுகளை கிரைண்டரில் போட்டு தூளாக்கிக் கொள்ளவும். தண்ணீர் சேர்க்கக்கூடாது. உதிரி உதிரியாக இருக்கவேண்டும்.
- பாத்திரத்தை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி சூடானதும் கறிவேப்பிலை போட்டு தாளித்த பின்னர் பச்சை மிளகாய் விழுதை சேர்த்து வதக்கவும்.
- பச்சை வாசனை போனவுடன் அதில் உதிரியாக தூள் செய்த பனங்கிழங்கை போட்டு தேவையான அளவு உப்பு சேர்த்து கிளறவும்.
- அடுப்பை மிதமான தீயில் வைத்து 5 நிமிடங்கள் கிளற வேண்டும். உதிரி உதிரியாக வரும் போது இறக்கி பரிமாறவும்.

## கேள்விக்கென்ன பதில்?

# உடல் எடையைக் அதிகரிக்குமா மலச்சிக்கல்?

மலச்சிக்கல் இருப்பதால் ஒருவருக்கு நேரடியாக உடல்பருமன் ஏற்படாது. ஆனால், அது மறைமுகமாக சில விடயங்களை பாதிக்க வாய்ப்பிருப்பதால் உடல் எடை அதிகரிக்க வாய்ப்பிருக்கிறது. குறிப்பாக மலச்சிக்கலில் பல வகைகள் உண்டு. சிலருக்கு மலம் கழித்தாலும் முழுமையாகக் கழித்த உணர்வு இருக்காது. இன்னும் சிலருக்கு ஒருநாள் விட்டு ஒருநாள்தான் மலம் வெளியேறும். வேறு சிலருக்கு அந்த இடைவெளி இன்னும் அதிகமாகலாம். இப்படி சரியாக மலம் கழிக்காத பிரச்சினையால், உடலின் வளர்சிதை மாற்றம் நிச்சயம் பாதிக்கப்படும். பசி உணர்வும் பெரிதாக இருக்காது. வளர்சிதை மாற்றம் பாதிக்கப்படுவதன் விளைவாக உடல் எடையில் ஏற்ற, இறக்கங்கள் இருக்கலாம்.

மேலும், மலச்சிக்கல் பாதிப்பால் உடல் எடை அதிகரிக்கும் என்பதற்கான நிரூபிக்கப்பட்ட ஆய்வுகள் இல்லை. ஒருவரது செரிமானம் பாதிக்கப்படும்போது உடலின் இயக்கங்கள் அனைத்துமே பிரச்சினைக்கு உள்ளாகும். அதில் நமது குடல் இயக்கமும் பாதிப்புக்குள்ளாகும். குடல் சரியாக வேலை செய்யாவிட்டால், உடலியக்கமே மந்தமாக இருக்கும். எந்த வேலையும் செய்ய முடியாத நிலை இருக்கலாம். அதன் காரணமாகவும் உடல் எடை அதிகரிக்கலாம். மற்றபடி இரண்டுக்கும் நேரடியான தொடர்பில்லை.

எனவே, மலச்சிக்கல் பிரச்சினைக்கான காரணத்தைக் கண்டறிந்து முதலில் அதை சரி செய்ய வேண்டும். குடல் இயக்கம் சீரானால், செரிமானமும் சீராகும். உடலளவிலும் சுறுசுறுப்பாக உணரலாம். எடை குறையவும் வாய்ப்பு உள்ளதாம்.

# 0+ இரத்தப் பிரிவை கொண்டவர்கள் ஆரோக்கியத்தில் சிறப்பு மிக்கவர்கள்




பொதுவாக O+ இரத்தம் உள்ளவர்களுக்கு ஏனைய இரத்த வகைகளைக் காட்டிலும் இயற்கையான நோய் எதிர்ப்பு சக்தி சற்று அதிகமாக இருப்பதாக ஆய்வுகள் காட்டுகின்றன. உடலிலுள்ள நல்ல பாக்டீரியாக்கள் மற்றும் நுண்ணுயிரிகளின் வளர்ச்சிக்கு ஏனைய இரத்த வகைகளை விட O+ இரத்தம் மிகவும் சாதகமானது. இது இயற்கையாகவே நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

O+ என்ற இரத்தக் குழுவைக் கொண்டவர்கள் நோய் எதிர்ப்பு சக்தியின் ஆற்றல் மிக்கவர்கள் எனவும், அத்தகையவர்களின் நோய் எதிர்ப்புச் சக்தி இயற்கையாகவே அதிகரிக்கும் என்றும் ஓர் ஆராய்ச்சி கண்டறிந்துள்ளது. ஆராய்ச்சியின் படி, O+ குழுவில் உள்ளவர்கள், தொற்று நோய்களின் அபாயம் மிகக் குறைவாக இருப்பதால், ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை பலத்த நன்மைகளை கொண்டவர்கள் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சில நாட்பட்ட நோய்களின் ஆபத்து கூட அத்தகையவர்களுக்கு மிகவும் குறைவு.

ரத்தக் குழு 0+ உள்ளவர்கள் நோய் எதிர்ப்பு சக்தியில் செம்பியன்கள் என்று அழைக்கப்படுகிறது. இதன் பொருள் அத்தகைய நபர்களின் நோய் எதிர்ப்பு சக்தி மிகவும் வலுவானது மற்றும் தொற்றுநோய்க்கான ஆபத்து அவர்களுக்கு மிகக் குறைவு. அப்படிப்பட்டவர்களில் பூச்சிகள், நுளம்புகள், ஒட்டுண்ணிகள், புழுக்கள், நுண்ணுயிரிகள் போன்றவை உடலுக்குள் நுழைந்தாலும் தொற்று ஏற்படாது, ஏனெனில் உடலுக்குள் இருக்கும் வலிமையான நோய் எதிர்ப்பு சக்தி உள்ளே நுழைந்தவுடனே அவற்றை உடனடியாக அழிக்கிறது.

O+ ரத்தக் குழுவைக் கொண்டவர்களுக்கு இதய நோய் போன்ற சில வகையான நோய்களின் ஆபத்து குறைவாக உள்ளது. இதயம் தொடர்பான நோய்கள் இப்போது மிகவும் பொதுவானவை, ஆனால், O+ இரத்தக் குழுவைக் கொண்டவர்களுக்கு இயற்கையாகவே சுத்தமான இரத்தம் உள்ளது மற்றும் தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிரிகள் இரத்தத்தில் இருந்து வெளியேற்றப்படுகின்றன. இதன் விளைவாக, இரத்தத்தில் கொலஸ்ட்ரோல் அபாயமும் குறைவாக உள்ளது, இது இதய நோய் அபாயத்தை குறைக்கிறது.

O+ ரத்தம் உள்ளவர்களில் தடுப்பூசியின் விளைவு வலுவாக இருக்கும். அதாவது, மற்ற இரத்தக் குழுக்கள் உள்ளவர்களுக்கு தடுப்பூசியின் விளைவு குறிப்பிட்ட மாதங்களுக்கு நீடிக்கும் என்றால், 0+ உள்ளவர்களுக்கு இதை விட அதிகமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. தடுப்பூசி போடும்போது, பொதுவாக மக்களுக்கு சளி மற்றும் காய்ச்சல் இருக்கும், ஆனால் 0+ உள்ளவர்களுக்கு இது நடக்காது. அவர்களின் நோயெதிர்ப்பு அமைப்பு பல நோய்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்கிறது. O+ ரத்த வகை உள்ளவர்களுக்கு இதய நோய் மற்றும் பிற நோய்த்தொற்றுகள் போன்ற சில உடல்நலப் பிரச்சினைகளின் ஆபத்து குறைவாக இருக்கலாம் என்று சில ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. எனவே, O+ இரத்தம் உள்ளவர்களுக்கு குறுகிய காலம் மட்டுமல்ல நீண்ட கால ஆரோக்கியத்தை வழங்குகிறது.

## 0+ இரத்தப் பிரிவு கொண்டவர்களின் உடலுக்குள் பூச்சிகள், நுளம்புகள், ஒட்டுண்ணிகள், புழுக்கள், நுண்ணுயிரிகள் போன்றவை நுழைந்தாலும் தொற்று ஏற்படுவதில்லையாம்



உங்களிடம் O+ ரத்தம் இருந்தால், நீங்கள் பெரும்பாலான ரத்த வகை கொண்டவர்களின் உயிர்களை காப்பாற்றுவீர்கள். ஏனெனில் O+ இரத்தத்தை மற்ற இரத்த வகை உள்ளவர்களுக்கும் தானம் செய்யலாம். அதாவது O+ நன்கொடையாளர்களுக்கு எப்போதும் அதிக தேவை இருக்கும், குறிப்பாக அவசர காலங்களில். ஏனெனில் O+ இரத்தம் ஆனது மற்ற இரத்த குழுவுடன் எளிதில் கலக்கிறது. அதாவது O+ இரத்தக் குழுவைக் கொண்டவர்களின் இரத்தத்தை எவருக்கும் எளிதில் வழங்க முடியும். இதனால், இந்த இரத்த பிரிவை சேர்ந்தவர்கள் உலகளாவிய நன்கொடையாளர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். O+ ரத்த பிரிவை கொண்டவர்களுக்கு ஆரோக்கியமான நுண்ணுயிரிகள் அதிக எண்ணிக் கையில் இருப்பதாகவும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

உண்மையில், நம் உடலில் நல்ல பக்டீரியா மற்றும் பிற நுண்ணுயிரிகள் உள்ளன. இவை தோலில் இருந்து வயிற்றுக்கு பரவுகின்றன. ஆராய்ச்சியின் படி, O+ இரத்தக் குழுவைக் கொண்டவர்களில் நல்ல பாக்டீரியாக்கள் அதிகமாக இருப்பதாக ஆராய்ச்சி காட்டுகிறது. அதாவது, வயிறு தொடர்பான நோய்களிலிருந்து அவர்களைப் பாதுகாத்து செரிமான கட்டமைப்பை வலுவாக வைத்திருக்க உதவுகிறது எனவும் கூறப்படுகின்றது.



# பத்திரிகைகளில் 4 வண்ணங்களில் வட்டங்கள் இருப்பதன் காரணம்

டிஜிட்டல் யுகத்தில் செய்தித்தாள் வாசிப்பு என்பது இன்னும் பலரது விருப்பமாக இருந்து வருகிறது. கைத்தொலைபேசியில் ஏராளமான செய்திகள் இலவசமாக கிடைத்தாலும் ஒரு தரப்பினருக்கு செய்தித் தாள்களில் செய்தியை படிப்பதிலேயே முழு திருப்தி கிடைக்கின்றது.

செய்தித்தாளை நன்றாக பார்த்தால் ஒவ்வொரு பக்கத்தின் கீழும் 4 வண்ணங்களில் வட்டங்கள் இருப்பதை காணலாம். இந்த வட்டங்கள் எதற்காக அங்கு வைக்கப்பட்டுள்ளன என தெரியுமா?

முதன்மை நிறங்கள் என்று கூறப்படும் சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகிய நிறங்களை மற்ற எந்த ஒரு நிறங்களையும் கலந்து உருவாக்க முடியாது. இதற்காகத்தான் அவை முதன்மை நிறங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

செய்தித்தாள்களில் உள்ள நான்கு வண்ண வட்டங்கள் CMYK மாதிரியைக் காட்டுகின்றன, அங்கு 'C' என்பது சியான் (நீலம்), 'M' என்பது மெஜன்டா. 'Y' என்பது மஞ்சள் மற்றும் 'K' என்பது கருப்பு.



செய்தித்தாள்களில் வர்ணங்களிலான படங்கள் மற்றும் தலைப்புச் செய்திகளைக் கொடுக்கும் போது CMYK வண்ணங்களில் அச்சிடுவது முக்கியமானதாகும். செய்தித்தாள்களை அச்சிடும்போது, 4 வண்ணங்களில் ஒவ்வொன்றையும் குறிக்க தனித்தனி தட்டுகள் பயன்படுத்தப்படுகின்றன.

கூர்மையான மற்றும் நேர்த்தியான படங்களைப் பெறுவதற்கு அச்சிடுவதற்கு இந்த தட்டுகளின் ஒழுங்கமைப்பு முக்கியமானது. ஒழுங்கமைப்பு முறையாக அமையாவிட்டால், அது ஒரு மங்கலான படமாகவே பிரசுரமாகும். இந்த 4 வண்ணங்கள் ஒவ்வொன்றாக பயன்படுத்தப்பட்டுள்ளதை குறிப்பிடுவதற்கான அடையாளமாகவே, பத்திரிகைகளில் கீழே இவ்வாறு சிறிய வண்ண வட்டங்கள் அச்சிடப்படுகின்றன.

இந்த முறையானது செய்தித்தாள்களுக்கு மட்டுமின்றி புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகளின் வெளியீட்டிலும் பயன்படுத்தப்படுகிறது. ஈகிள் பிரிண்டிங் எனும் நிறுவனமே CMYK முறையினை 1906 இல் அறிமுகப்படுத்தியது, அதன் பின்னர் இது தற்போது ஒரு நிரந்தரமான நடைமுறையாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டெழுவதற்கான திறனை எவ்வாறு கட்டமைப்பது?

மீண்டெழுதல் என்பது, பழைய நிலைக்குத் திரும்புதல் அல்லது தீங்கை எதிர்கொள்ளும்போது அதற்கேற்பத் தன்னை மாற்றிக்கொள்ளுதல் என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. சில நபர்கள் இயற்கையாகவே நேர்விதமான பார்வை மற்றும் அழுத்தமான சூழல்களைச் சமாளிக்கும் திறனைக் கொண்டிருக்கிறார்கள். அதேசமயம், மீண்டெழுதல் ஒரு கற்றுக் கொள்ளக்கூடிய திறன் ஆகும். ஒருவர் மீண்டெழும் திறனைக் கட்டமைக்க உதவும் பத்து வழிகள் வருமாறு:

**1.தன்னை ஊட்டப்படுத்திக்கொள்ளுதல்:**
தினசரி உடற்பயிற்சி செய்தல், சமநிலை உணவை உட்கொள்ளல், போதுமான தூக்கம், போதைப் பொருட்கள் எடுப்பதைத் தவிர்த்தல் மற்றும் பொழுதுபோக்குளை வளர்த்தல் போன்றவற்றின் மூலம் ஒருவர் தன்னைத்தானே கவனித்துக் கொள்ளலாம். தன்னுடைய சொந்த தேவைகளைக் கவனிப்பது அவருடைய நல எண்ணத்தை அதிகரித்து சவால்களை எதிர்கொள்ளும் வலிமையை அவருக்குக் கொடுக்கிறது.

**2.மாற்றங்களை ஏற்றுக்கொள்ளுதல்:**
வாழ்க்கையில் அழுத்தங்கள் மற்றும் மாற்றங்களைக் கற்பதற்கு மற்றும் வளர்வதற்கான வாய்ப்புகளாகப் பார்த்தல்.

**3.தன்னுடைய திறமைகள் மீது நேர்விதமான நம்பிக்கைகளைக் கட்டமைத்தல்:**
ஒருவர் தன்னைப்பற்றி, பிரச்சினைகளைத் தீர்க்கும் தன்னுடைய திறமையைப்பற்றி நேர்விதமான பார்வையை விரும்பிக் கட்டமைக்கலாம். தன்னுடைய நல்ல பண்புகள், வலிமைகள் மற்றும் வெற்றிகள் குறித்துத் தனக்குத்தானே நினைவுபடுத்திக்கொள்ளலாம்.

**4. வலிமையான உறவுகளை வளர்த்தல்:**
அழுத்தமான வாழ்க்கை நிகழ்வுகள் அல்லது சிக்கலான சூழல்களில் சமாளிக்க உதவுகிற கனிவான மற்றும் ஆதரவான நபர்களைத் தன்னைச்சுற்றிப் பெற்றிருத்தல்.

**5. பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன்களை வளர்த்தல்:**
பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய வழிகள் குறித்துப் பட்டியலிடுவது போன்ற, ஒருவருடைய மீண்டெழும் திறனை வளர்க்க உதவும் வழிகளைக் கண்டறிதல்.



**6.மனச்சோர்விலிருக்கும் போது உதவியை நாடுதல்:**
மனச்சோர்வு அல்லது பாதகமான சூழலில் ஒருவர் தான் நம்பும் நபர்களிடமிருந்து உதவியை நாடலாம். ஆலோசனை அல்லது சிகிச்சை ஆகியவை மீண்டெழுதலை கட்டமைக்கும் வழிகளாகும்.

**7.சுய விழிப்புடன் இருத்தல்:**
ஒருவர் தன்னுடைய சொந்த உணர்வுகள் மற்றும் எண்ணங்கள் மற்றும் தன்னைச் சுற்றியுள்ள உலகின் மீது அதிக கவனம் செலுத்தவேண்டும். தனிப்பட்ட நாட்குறிப்பு அல்லது பதிவேட்டைப் பராமரிப்பது இதற்கு உதவலாம்.

**8.சாத்தியமான இலக்குகளை அமைத்தல்:**
சூழ்நிலைகளை எதார்த்தமான வழியில் பார்த்தல், பிரச்சினைகளை எதிர்கொள்ள நியாயமான இலக்குகளை அமைத்தல்.

**9.பிரச்னைகளைத் தீரக்க நடவடிக்கை எடுத்தல்:**
சிக்கல் அல்லது பிரச்னையைத் தீர்க்க அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.

**10.வாழ்வுக்கு ஒரு நோக்க உணர்வைக் கண்டுபிடித்தல்:**
வாழ்வுக்கு ஒரு நோக்க உணர்வைக் கொண்டிருத்தல், பாதகங்கள், அதிர்ச்சி, சிக்கல் அல்லது துயரத்திலிருந்து மீள உதவலாம். எடுத்துக்காட்டாக, ஓர் உயர்ந்த நோக்கத்துக்காகப் பணியாற்றல், சமூகப் பணிகளில் பங்கெடுத்தல், ஆன்மிகத்தை வளர்த்தெடுத்தல், செயல்பாடுகளில் பங்கெடுத்தல் அல்லது ஒருவருடைய வாழ்க்கைக்குப் பொருளைக் கொண்டுவரும் ஏதாவது ஒன்று.

# உயரமான காற்றாலை ஜெர்மனியில் கட்டப்படல்



பிரான்ஸின் ஈபிள் கோபுரத்தை விட உயரமான ஒரு காற்றாலை ஜெர்மனி நாட்டில் அமைக்கப்பட்டு வருகின்றது. மின்சாரம் உற்பத்தியை நோக்கமாகக் கொண்ட இந்த மாபெரும் கட்டமைப்பு 1,197 அடி உயரம் கொண்டது என தெரிவிக்கப்படுகின்றது.. இது லண்டன் Big Ben-I விட மூன்று மடங்கு பெரியதாக மட்டுமன்றி, பெரிஸ் ஈஃபிள் கோபுரத்தை விட உயரமாக இருக்கும் எனவும் கருதப்படுகின்றது. இந்த காற்றாலை சுமார் 24 மில்லியன் பௌன்ட்ஸ் செலவில் உருவாக்கப்பட உள்ளது. இந்த மாபெரும் திட்டம், Federal Agency for Disruptive Technologies (Sprind) மூலம் நிதியளிக்கப்பட்டு, டிரெஸ்டன் பகுதியைச் சேர்ந்த Gicon எனும் நிறுவனத்தின் உதவியுடன் கட்டப்படுகிறது. அகலமான இடங்களில் காற்றின் வேகம் அதிகமாக இருப்பதுண்டு. இதனை அடிப்படையாகக் கொண்டு, அதிக உயரம் கொண்ட காற்றாலைகள் உருவாக்கப்படுகின்றன. இதனால் மின் உற்பத்தி திறன் அதிகரிக்க வாய்ப்புள்ளது. மேலும், "இந்த உயரத்தில் காற்று இல்லாத இடங்கள் இல்லை என்றே கூறலாம்" என Sprind நிறுவனத்தின் துணை நிறுவனமான Beventum தலைவர் மார்டின் சௌமே தெரிவித்துள்ளார்

காற்றாலை துறையில் முன்னோடி நாடாக ஜெர்மனி அமைந்துள்ளது. இந்த காற்றாலை 2025 ஆம் ஆண்டின் கோடைக்காலத்தில் செயல்படத் தொடங்கும் என திட்டமிடப்பட்டுள்ளது.காற்றாலையின் பறக்கக்கூடிய பற்கள் பொதுவாக 65 மீட்டர் நீளமுள்ளவைதான் என்றாலும், இந்த உயரமான அமைப்பு மூலம் மின் உற்பத்தி திறன் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தகைய மாபெரும் அமைப்புகள் அருகிலுள்ள குடியிருப்பாளர்களிடமிருந்து எதிர்ப்பையும், பறவைகளுக்கு ஏற்படும் ஆபத்தையும் சந்திக்கக்கூடும். இருந்தாலும், பசுமை மின்சாரம் உற்பத்தியில் இது ஒரு முக்கிய முன்னேற்றமாகக் கருதப்படுகிறது.

ஒருவன் சினிமா




## நமீதா பிரமோட்




## சந்தானத்தின் 'டிடி நெக்ஸ்ட் லெவல்'



சந்தானம் மற்றும் சுரபி நடித்த 'டிடி ரிட்டர்ன்ஸ்' படம் கடந்த 2023ஆம் ஆண்டு வெளியானது. இதன் தொடர்ச்சியாக 'டிடி நெக்ஸ்ட் லெவல்' என்ற படம் உருவாகிறது. இதிலும் சந்தானம் கதாநாயகனாக நடிக்கிறார்.

செல்வராகவன், கௌதம் வாசுதேவ் மேனன்,யாஷிகா ஆனந்த், நிழல்கள் ரவி உட்பட பலர் நடிக்கின்றனர். தீபக் குமார் பதி ஒளிப்பதிவு செய்யும் இந்தப் படத்துக்கு, ஆஃப்ரோ இசையமைக்கிறார். நிஹாரிகா என்டர்டெயின்மெண்ட், நடிகர்கள் ஆர்யா, சந்தானம் இணைந்து தயாரித்திருக்கும் இத்திரைப்படம், வருகின்ற மே மாதம் வெளியாக இருக்கிறது.

இதுகுறித்து, படத்தின் இயக்குனர் பிரேம் ஆனந்த் கூறுகையில், 'டிடி ரிட்டர்ன்ஸ்' பெரும் வெற்றி பெற்றதால் அதன் அடுத்த பாகத்துக்கான ஸ்கிரிப்ட் வேலைகளை ஒரு வருடமாக செய்தோம். இந்த படத்தின் கதை சொகுசு கப்பலில் நடக்கிறது. இதுவும் திரில் நிறைந்த நகைச்சுவைத் திரைப்படமாக இருக்கும்" என்றார்.

## விருதை ஏற்க மறுத்த கிச்சா சுதீப்



கர்நாடக அரசால் தனக்கு வழங்கப்படவிருந்த சிறந்த நடிகருக்கான விருதை கிச்சா சுதீப் ஏற்க மறுத்துள்ளார்.

கன்னட நடிகரான கிச்சா சுதீப், 'நான் ஈ', 'புலி', 'பாகுபலி', 'முடிஞ்சா இவன புடி' போன்ற படங்களின் மூலம் தமிழ் மக்களிடையே பிரபலமானவர். அவர் கன்னட திரையுலகில் முன்னணி நடிகராக வலம் வருகிறார்.

இந்நிலையில் நடிகர் கிச்சா சுதீப்புக்கு கர்நாடக மாநில அரசு சிறந்த நடிகருக்கான விருதை வழங்க முன்வந்துள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டு இவர் நடிப்பில் வெளியான 'பயில்வான்' எனும் படத்திற்காக, கர்நாடக மாநில திரைப்பட விருதுகளில் சிறந்த நடிகர் பிரிவில் சுதீப் தேர்வு செய்யப்பட்டார். கர்நாடக அரசு கடந்த புதன்கிழமை, 2019ஆம் ஆண்டுக்கான மாநில ஆண்டு திரைப்பட விருதுகளை அறிவித்திருந்தது.

கொரோனா காரணமாக 2019க்குப் பிறகு கர்நாடக அரசின் விருதுகள் வழங்கப்படவில்லை. இந்நிலையில் தான் தற்போது 2019ஆம் ஆண்டுக்கான விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அந்த விருதுகளில் 2020 முதல் 2024 வரையிலான விருதுகள் இன்னும் அறிவிக்கப்பட வேண்டியுள்ளது.

இந்நிலையில் விருதை ஏற்க நடிகர் கிச்சா சுதீப் மறுத்துள்ளார். இது தற்போது கர்நாடக திரையுலகில் பெரும் பேசுபொருள் ஆகியுள்ளது. இதுதொடர்பாக தனது எக்ஸ் தளப் பக்கத்தில் அவர் பதிவிட்டுள்ளதாவது, "மதிப்பிற்குரிய கர்நாடக அரசு மற்றும் நடுவர் மன்ற குழுவிற்கு சிறந்த நடிகர் பிரிவின் கீழ் மாநில விருதைப் பெற்றிருப்பது பாக்கியம். மேலும் இந்த கௌரவத்திற்காக நடுவர் மன்றத்திற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும், பல ஆண்டுகளாக விருதுகளைப் பெறுவதை எனது தனிப்பட்ட காரணங்களுக்காக தவிர்த்து வருகிறேன்.

இந்தக் கலைக்கு உயிர் கொடுத்த பல தகுதியான நடிகர்கள் உள்ளனர். அவர்களில் என்னை விட அதிக தகுதியானவர்களில் ஒருவர், இந்த விருதைப் பெற்றால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன். விருதுகளைப் பொருட்படுத்தாமல், முழு மனதுடன் அனைவரையும் மகிழ்விக்க விரும்புகிறேன். நடுவர் குழுவின் இந்த அங்கீகாரம் எனக்கு ஊக்கமாக அமைந்துள்ளது.

இந்த அங்கீகாரம் எனது வெகுமதி என்பதால், என்னைத் தேர்ந்தெடுத்ததற்காக ஒவ்வொரு நடுவர் மன்ற உறுப்பினருக்கும் நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். எனது முடிவால் ஏற்பட்ட ஏமாற்றத்திற்கு நடுவர் மன்ற உறுப்பினர்களிடமும் மாநில அரசிடமும் நான் மனதார மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் எனது முடிவை மதித்து, நான் தேர்ந்தெடுத்த பாதையில் என்னை ஆதரிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

எனது பணியை அங்கீகரித்து இந்த விருதுக்கு என்னைப் பரிசீலித்ததற்காக, நடுவர் மன்ற உறுப்பினர்களுக்கும், மாநில அரசுக்கும் மீண்டும் ஒருமுறை நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

## வசூல் வேட்டையில் "மதகஜராஜா"




நடிகர் விஷால், ஒரு காலத்தில் முன்னணி நாயகனாக பல வெற்றிப் படங்களை கொடுத்து வந்தவர். சமீபகாலமாக இவர் அடுத்தடுத்து நடித்த திரைப்படங்கள் தோல்வியை சந்தித்து வந்த நிலையில், அவர் நடிப்பில் வெளியான மதகஜராஜா வசூலை வாரி குவித்து வருகின்றது.

அதாவது, 12, 13 வருடத்திற்கு முன்பு சுந்தர்.சி இயக்கத்தில் விஷால், அஞ்சலி, வரலட்சுமி என பலர் நடிப்பில் தயாரான மதகஜராஜா திரைப்படம், தற்போது வெளியாகியுள்ளது. இத்தனை வருடங்கள் கழித்து படம் வெளியாவதால் இப்போது உள்ள மக்கள் படத்தை ஏற்றுக்கொள்வார்களா என்ற கேள்வி எழுந்திருந்தது.

ஆனால், அந்த பயம் எல்லாம் காணாமல் போகும் அளவிற்கு வசூல் வேட்டை செய்து வருகிறது மதகஜராஜா. பொங்கல் வெளியீடான இத்திரைப்படம், இதுவரை ரூ.50 கோடி வரை வசூல் வேட்டை நடத்தியுள்ளது.

## எதிர்பார்ப்பில் "விடாமுயற்சி!"




இயக்குநர் மகிழ் திருமேனி – நடிகர் அஜித் கூட்டணியில் பிரம்மாண்டமாக உருவாகியிருக்கும் திரைப்படம் விடாமுயற்சி. லைகா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார்.

இப்படத்திலிருந்து இதுவரை வெளிவந்த இரண்டு பாடல்களும் மாபெரும் அளவில் வரவேற்பை பெற்றுள்ளது. இப்படத்தில் பல ஆண்டுகள் கழித்து அஜித்துக்கு ஜோடியாக த்ரிஷா நடித்துள்ளார். மேலும் அர்ஜுன், ரெஜினா மற்றும் ஆரவ் என பல நட்சத்திரங்கள் நடித்துள்ளனர்.

சமீபத்தில் இப்படத்தின் ட்ரைலர் வெளிவந்த நிலையில், இரசிகர்களின் எதிர்பார்ப்பு இன்னும் அதிகரித்துள்ளது. வருகிற பெப்ரவரி 6ஆம் திகதி இப்படத்தை எதிர்பார்த்து இரசிகர்கள் அனைவரும் ஆவலுடன் காத்திருக்கின்றனர். இந்த நிலையில், வெளிநாட்டில் இப்படத்தின் ப்ரீ புக்கிங் துவங்கியுள்ளது. இதுவரை ரூ. 4 இலட்சத்திற்கும் மேல் வசூல் வந்துள்ளதாக சொல்லப்படுகிறது.

## "இமயமலைக்கு சென்று விடுவேன்" விரக்தியில் ரவி மோகன்

ரவி மோகன் தற்போது 'டாடா' பட இயக்குனரின் படம், எஸ்கே 25, 'ஜெனி' மற்றும் 'தனி ஒருவன் 2' ஆகிய படங்களில் நடித்து வருகிறார். இந்த நிலையில் ஒரு நேர்காணலில் சினிமாவை விட்டுவிட்டு விஜய் அரசியலுக்கு சென்றுவிட்டார். அஜித்தும் கார் ரேஸுக்கு சென்றுவிட்டார். நீங்கள் எங்கே போவீர்கள்? என்று கேள்வி கேட்கப்பட்டது. இதற்கு பதிலளித்த ரவி மோகன், "எனக்கு என்று எந்த ஆசையும் இல்லை. நான் இமயமலைக்கு சென்று செட்டிலாகிவிடுவேன்" என்று விரக்தியோடு பேசியிருக்கிறார். இதற்கு அவரின் விவாகரத்து மற்றும் படங்களின் தோல்வி தான் காரணமாக சொல்லப்படுகிறது. இந்நிலையில், ஒரு படம் தோல்வி அடைந்தால் ஒரு படம் வெற்றி கொடுக்கும். அதற்காக இப்படியெல்லாம் முடிவு எடுக்க கூடாது என்று இரசிகர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.



"இரசிகர்களும், சினிமாவும் எனக்கு வழங்கிய வாய்ப்புகள், அன்பு, ஆதரவு அனைத்திற்கும் கடமைப்பட்டுள்ளேன். எனக்கு வாழ்க்கை, அன்பு மற்றும் எல்லாவற்றையும் வழங்கிய துறைக்கு என் ஆதரவை எப்போதும் கொடுப்பேன். இந்த நாள் தொடங்கி, நான் ரவி அல்லது ரவி மோகன் என்று அழைக்கப்பட விரும்புகிறேன். இந்த பெயர் என் தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் திரைத்துறை கனவுகளை முன்னோக்கி எடுத்து செல்லும். என் கனவு மற்றும் மதிப்புகளுடன் புதிய பயணத்தை தொடங்கும். என்னை இந்த பெயரிலேயே அனைவரும் அழைக்குமாறும், ஜெயம் ரவி என்ற பெயரில் இனி வரும் காலங்களில் அழைக்க வேண்டாம் என்றும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்"
-ரவி மோகன்

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தயார் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.